# தமிழரசு


ஏப்ரல் 2009

விலை ரூ.10/-




செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு





சர்.பிட்டி. தியாகராயர்



டாக்டர் அம்பேத்கர்



பாவேந்தர்
பாரதிதாசன்

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2040

பங்குனி - சித்திரை

ஏப்ரல் 2009

மலர் : 40 இதழ் : 10

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

**திரு. சி.காமராஜ், இ.ஆ.ப.,**
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு. ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**க. குமாரவேலு**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**இரா. சுரேஷ்**
**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி.இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்.** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/28520408
தொலைநகல் : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in



**ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்**
**பேரறி வாளன் திரு.**

பொதுநல நோக்குடன் வாழ்கின்ற பேரறிவாளனின் செல்வமானது ஊர் மக்கள் அனைவருக்கும் பயன் தரும் நீர் நிறைந்த ஊருணியைப் போன்றதாகும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...



**இந்த இதழில்...**


தமிழகச் சுற்றுலா செல்வதற்கு முன் ..... 2
என்னைக் கவர்ந்த புத்தகங்கள் - **அறிஞர் அண்ணா** ..... 6
அண்ணல் அம்பேத்கர் அமுதமொழிகள் ..... 12
பதிலை நெருப்பாக உமிழ்ந்த பாவாணர் - **கலைஞர்** ..... 14
திராவிட சமுதாயச் சிற்பி சர்.பிட்டி. தியாகராயர் ..... 19
பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள் ..... 27
தமிழகக் குறியீடுகளும் பண்டைய அயலகமும் ..... 28
கிருமி வேடன் லூயிபாஸ்ட்டேர் ..... 35
சென்னையில் போக்குவரத்து தொடங்கிய கதை ..... 42
பால்வினை நோய்களைப் பற்றி தெரிந்து கொள்வோம்! ..... 53
தமிழ் - பிராமி கல்வெட்டுகளின் அமைவிடம் ..... 61
மனமுவந்து இரத்த தானம் செய்யுங்கள் ..... 74
கோடை காலத்தில் வெப்பத்தின் தாக்கம் ..... 77

முதலாம் அட்டை : வள்ளுவர் கோட்டம் - சென்னை
நான்காம் அட்டை : ஒகேனக்கல் அருவி

# தமிழகச் சுற்றுலா செல்வதற்கு முன்...

**சு**ற்றுலா இல்லாத வாழ்க்கை பூங்காற்று இல்லாத பூங்கா, நீரில்லாத அருவி, கனியில்லாத மரம், கவிதையில்லாத இலக்கியம். ஒரே இடத்தில் நடந்த சம்பவங்களைக் கொண்டு எழுதப்பட்ட எதுவும் உலக இலக்கியமாக உயர்வு பெறவில்லை. இலியட், ஒடிசி ஆகிய இரண்டு மகா காவியங்களுமே பல இடங்களுக்குப் பயணம் செய்த அனுபவப் பிழிவுகளின் சாரங்கள். சைரன்களின் இசையையும் நுகர வேண்டும்; தடமும் மாறக் கூடாது என்ற திடமான உள்ளத்தால் 'யுலிசிஸ்' தன்னைக் கட்டிப்போட வைத்து வீரர்களின் காதில் பஞ்சடைத்து அந்த இசையை நுகர்ந்ததாக ஒடிசி உரைக்கிறது.

இந்திய இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் இரண்டுமே பல நாடுகளில் சுற்றித் திரிந்த சுவாரசியம் நிறைந்த சம்பவங்களின் தொகுப்புகள். தமிழகத்தின் தலைசிறந்த காப்பியமாகக் கருதப்படும் சிலப்பதிகாரம், கதைமாந்தர்கள் மூன்று நாடுகளிலும் பயணித்த திருப்பங்களையும், திருப்புமுனைகளையும் அடிப்படையாகக் கொண்ட சோகக் காவியமே.



**வெ. இறையன்பு**, இ.ஆ.ப.,
செயலாளர்,
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை,
தமிழ்நாடு அரசு

ஒகேனக்கல் அருவி

ஷேக்ஸ்பியரின் அத்தனை மகாகாவியங்களுமே இடம்விட்டு இடம் பெயர்ந்த சம்பவங்களை மையமாக வைத்தே எழுதப்பட்டவை. 'டெம்பஸ்ட்' நாடகத்தில் காலனி ஆதிக்கம் குறித்தும், பெர்முடா முக்கோணம் குறித்தும், கண்டறிந்த நாடுகளில் காணப்படும் பழங்குடியினர் குறித்தும் பூடகக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

தமிழகம் குளிர்ந்த மலைச் சாரல்களையும், படர்ந்து விரிந்த கடற்கரைகளையும், மரகதச் சோலை களையும், மலைக்க வைக்கும் கோபுரங்களையும், பல்வேறுவிதமான வன உயிரினங்களையும், சரித்திரப் புகழ்வாய்ந்த வரலாற்றுச் சின்னங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. எழில் வாய்ந்த பல சுற்றுலாத் தலங்கள் தமிழகத்தைத் தாண்டிப் பிரபலமாகாத நிலையில் உள்ளது. அதை மாற்றுவதற்கு, அதிகம் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கு தமிழக அரசு பல திட்டங்களை வகுத்திருக்கிறது. ஏலகிரி, ஏற்காடு, குற்றலாம், கொல்லிமலை, பழவேற்காடு, தாரமங்கலம், ஜவ்வாது மலை, ஒகேனக்கல், வால்பாறை, மேகமலை போன்ற அழகுவாய்ந்த சுற்றுலாத் தலங்களில் கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்தவும், அவற்றை விளம்பரப்படுத்தவும் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மலைத்தொடர்கள் மண்ணின் தலைக் கவசங்கள், இயற்கையின் அற்புத மணிகள் அடுக்கடுக்காய்ப் பதித்த அபூர்வ கிரீடங்கள். மலையின் முந்தானையில் இருத்தல் தன் அரிய வனப்புகளை முடிந்து வைத்திருக்கின்றது. மலையை நோக்கிப் பயணம் செய்யும்போதே மனித மனத்திற்கு சிறகுகள் முளைத்து விடுகின்றன. விண்மீன்களை விஞ்சிச் செல்லும் வீரியமும் விளைந்து விடுகின்றது. நம் விரல்களை வருடும் பனிமூட்டமும், உடலைத் தீண்டும் குளிர்தென்றலும் உள்ளம் முழுவதையும் உற்சாகப்படுத்துகின்றன.


உதகை தேயிலைத் தோட்டம்

இயற்கையின் அத்தனை அழகையும் தம் முந்தானையில் முடிந்து வைத்திருக்கின்ற அதிசயம்தாம் மலைச்சாரல்கள். பேரமைதி, பசுமை, குளிர்ச்சி ஆகியவற்றைத் தரிசிப்பதற்கு மலைகளுக்குச் சென்றால்தான் சாத்தியம். சிகரங்கள் உயரத்தை

மட்டுமல்ல, உன்னதத்தையும் அடையாளம் காட்டுகின்றன.

பல மலைவாழ் இடங்களில் மக்கள் ஆண்டு முழுவதும் வாழமுடியாத நிலையுண்டு. தந்தியடிக்கும் பற்களுடன், போர்வைக்குள் புகுந்து, கம்பளிக்குள் பதுங்கி, மாலை 4 மணிக்கே வீட்டுக்குள் சலிப்புடனிருக்கும் சங்கடங்கள் அதிகம். ஆனால், தமிழக மலைவாழ் தலங்கள் உறைய வைக்கும் குளிர்ச்சி இல்லாமல், இதமான தட்பவெப்பத்தில் இனிமையைத் தாலாட்டும் இதயம் கவர்ந்த இடங்களாக இருக்கின்றன. பனிமழை பெய்வதும் இல்லை. எலும்புகளைக் குத்தும் இன்னலும் இங்கே இல்லை. கண்ணிற்கு வளம் சேர்க்கும் பசுமையை அணிந்து கொண்டு நாசியில் மென்மையான நறுமணத்தை இழையோட விடும் கம்பீரமான மலைச்சாரல்கள் தமிழகம் முழுவதும் உண்டு. அங்கிருக்கும் விதவிதமான பூக்களும், வித்தியாசமான தாவரங்களும், நடந்துபோகிற போது நம்மை வருடிச் செல்லும் மேகக் கூட்டங்களும், அவ்வப்போது பன்னீர் தெளிக்கும் பனிமூட்டங்களும் நம்மை இன்னோர் உலகத்திற்கு அழைத்துச் செல்கின்றன. தமிழக மலைச் சாரல்களில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே பூக்கும் குறிஞ்சி மலர் நம்மைக் குதூகலப்படுத்தும் வியத்தகு இயற்கைக் கூறு.



*பூம்புகார் எழுநிலை மாடம்*

உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி, கொல்லிமலை, வால்பாறை, ஜவ்வாது மலை, கல்ராயன் மலை என்று திரும்புகிற திசையெல்லாம் ஓங்கி உயர்ந்த மருதாணி பூசிய மரகத மலைச்சாரல்கள் நம்மை இளைப்பாறச் சொல்லி அழைப்பு விடுக்கின்றன. வானத்தைத் தொட வரம் கேட்கும் மேற்குத் தொடர்ச்சி மலையும், கிழக்குத் தொடர்ச்சி மலையும் நம் மனத்தில் ஏற்படுத்தும் கிளர்ச்சியின் தொடர்ச்சி எப்போதும் நீடிக்கக் கூடிய நிகழ்வுகள்.

தமிழகத்தின் மலைவாழ் தலங்கள் சுற்றுலாப் பயணிகளுக்கு சொர்க்கபுரிகள். குறைந்த செலவில் பல்வேறு வசதிகளைத் துய்க்கவும், பாதுகாப்புடன் பவனி வரவும் அவை ஏற்றவை. அருவி, படகுத்துறை, சரணாலயம் என பன்முக அனுபவங்கள் அங்கே விளைகின்றன. அங்கிருக்கும் அழகு, வன உயிரினம் அபாரமானவை.

தமிழக மலைச் சிகரங்களுக்குச் சென்று வந்தவர்கள் தங்களையும் அறியாமல் தங்களை உயர்த்திக் கொண்ட நம்பிக்கையையும், திண்மையையும் பெறுகிறார்கள் என்பதுதான் உண்மை. அந்த நெறி அவர்கள் அன்றாட வாழ்வில் இன்னும் உற்சாகமாக இயங்க உந்துசக்தியாக இருக்கிறது.

கோயில் என்பது கோபுரம் மட்டுமல்ல. அது கலையின் வெளிப்பாடு. அர்ப் பணிப்பின் அடையாளம். சிற்பங்களின் கூடம். ஓவியங்களின் சாம்ராஜ்யம். அமைதியின் இருப்பிடம். வழிபாட்டின் பிறப்பிடம்.

தமிழகம் எண்ணற்ற கோயில்களைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட கலை வடிவங்களைத் தன் மேனி முழுவதும் மேவி, பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்கிறது.

திரும்பிய பக்கமெல்லாம் வழிபாட்டுத் தலங்கள். வரலாற்று நிகழ்வுகளுடன் பிணைந்த புனைவியல் சித்தரிப்புகள். அவை உணர்த்தும் வாழ்வியல் தத்துவங்கள். ஒவ்வொரு கோயிலையும், உன்னிப்பாக வலம் வந்து அங்கு இருக்கும் கட்டடக் கலை நுட்பத்தையும், கவின்மிகு சிற்பங்களின் நுணுக்கத்தையும் நுகர்ந்தால் மெய்ஞானம் கிடைத்த அனுபவம் வாய்க்கப் பெறும்.


மாமல்லபுரத்தில் திறந்தவெளிக் கோயில்கள் (bas-relief), ஒரே கல்லில் உருவான கோபுரங்கள் (Monoliths), குகைக் கோயில்கள் (Cave temples) என்று கட்டடக் கலையின் அருங்காட்சியகமாகப் பார்வை யாளர்களைப் பிரமிக்க வைக்கின்ற தரிசனம் கிடைக்கின்றது. இருக்கின்ற கோயில் களிலேயே வித்தியாசமாகத் தலை நிமிர்ந்து – ஒரே அரசனால் உருவாக்கப்பட்ட பிரமாண்ட மாகத் தஞ்சை பெரிய கோயில் திகழ்கின்றது. நீண்ட நெடும் பிரகாரங்கள், ஒரே கல்லில் உருவான சிற்பங்கள், வாயில் ஆடும் கல்லோடு திகழும் யாழிகள், ஒருபுறம் பார்த்தால் காளை – மறுபுறம் பார்த்தால் களிறு என மீமெய்மியலை (Surrealism) வலியுறுத்தும் கற்பனைப் படைப்புகள், கல்லால் ஆன சங்கிலிகள் கொண்ட கோயில் தலங்கள் என்று அனைவரும் கண்டு, கற்க வேண்டிய கலை வண்ணங்களுடன் தமிழகக் கோயில்கள் தலைநிமிர்ந்து நிற்கின்றன.

*நம் மாநிலத்தின் மகத்துவம் உணர்வோம்,*
*சுற்றுலாவினால் சமத்துவம் வளர்ப்போம்!*

• • •

# என்னைக் கவர்ந்த புத்தகங்கள்

☐ அறிஞர் அண்ணா




இருள் சூழ்ந்திருந்த அந்தக் குகையிலே தேம்பித் தேம்பி அழுதபடி நின்று கொண்டிருந்த அலாவுதீன் சுவரின் மீது சாய்ந்தான். அவன் கையிலிருந்த தீபம், சுவரிலே உராய்ந்தது. உடனே குகையே கிடுகிடுவென்று ஆடுவது போன்றதோர் சத்தம் கேட்டது. அலாவுதீனின் தலை கிறுகிறுவென்று சுழன்றது. ஐயோ என்று அலறினான். அவன் எதிரே ஒரு பயங்கரமான பூதம் வந்து நின்றது.

இதுபோன்ற வர்ணனைகளும், ஆச்சரியச் சம்பவங்களும், திடுக்கிட வைக்கும் தகவல்களும் நிரம்பிய அலாவுதீனின் அற்புத தீபம் என்ற கதையைப் படித்தபோது அதிலேயே சொக்கிப் போய், அதை விடச் சிறந்த புத்தகமே கிடையாது என்று நம்பிய பருவம்—எனக்கு மட்டுமல்ல—உங்களில் பலருக்கும் உண்டு. அந்தச் சிறு பிராயத்தில் அந்தக் கதை நிச்சயமாக நமது உள்ளத்தைக் கவர்ந்தது – அலாவுதீன் அழுதபோது அழுதோம், சிரித்தபோது சிரித்தோம், மந்திரவாதியை வெறுத்தோம். அவன் மாண்டான் என்று கதையிலே கூறப்பட்டபோது மகிழ்ந்தோம். மாலை விளையாட்டு, காலை உணவு, இரவு படிப்பு, வீட்டுக் கணக்கு முதலிய அலுவல்களையும் மறந்து அந்தக் கதையைப் படித்திருக்கிறோம். ரசித்திருக்கிறோம். பழைய விளக்குகளைப் பார்க்கும் போதெல்லாம், அந்த அற்புத தீபத்தின் நினைப்புத்தான் – உருட்டு விழியும் மருட்டும் மீசைகளையும் பார்க்கும் போதெல்லாம் அந்த மந்திரவாதியின் நினைப்புதான் நமது இளம் உள்ளத்தில். அந்தக் கதை அவ்வளவு தூரம் குடி ஏறிவிட்டது. குதூலகம் தந்தது. ஆப்பிரிக்காவின் அகல நீளம், பசிபிக் கடலில் உள்ள தீவுகள், ஆயிரம் ரூபாயை அறுபத்தாறு பேருக்குப் பங்கிட்டுத் தருவது, ஆலமரத்துக்கு விழுது இருப்பதன் காரணம் போன்ற

பள்ளிக்கூடப் பாடங்களெல்லாம் நமக்குக் கசப்பாகவும், அலாவுதீன் கதை, கூடு விட்டுக் கூடு பாயும் கதை, காளி கூளிக்குச் சொன்ன கதை போன்றவைகள் சுவை தந்து நம்மைக் கவர்ந்திருக்கின்றன.

என்னைக் கவர்ந்த புத்தகங்கள் இவை போன்றவை – அந்தப் பிராயத்தில் துள்ளித்










திரிந்த பள்ளிப் பருவ காலத்தில், எனக்கு மட்டுமா? உங்களுக்குந்தான் – கவனப்படுத்திப் பாருங்கள். தெருத் திண்ணையில் மாடத்தில் மங்கலாக அகல் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. சுவரில் சாய்ந்தபடி சுற்றும் முற்றும் என்ன நடக்கிறது என்பதும் தெரியாமல், சிற்றெறும்பு கடித்தாலும் கவலைப்படாமல் படித்துக் கொண்டிருக்கும் காட்சி, கவனத்திற்கு வரும்.

மகிழ்ச்சி ஊட்டுவது, புதிய எண்ணங்களைத் தூவுவது, பழைய கருத்துக்களை மாற்றுவது, பண்பு தருவது, செயல் புரியும் திறன் அளிப்பது என்பன போன்ற பயன்களைப் பெறுவதற்கே படிக்கிறோம். ஒவ்வொரு வகைப் புத்தகமும் ஒவ்வொரு பயனை, ஒவ்வோர் அளவுக்குத் தருவதுடன் நமது மனதை உருவாக்க உதவுகின்றன. மகிழ்ச்சியூட்டும் புத்தகம் செயலாற்றும் திறனைத் தந்தே தீருமென்றோ, புதிய எண்ணத்தைத் தூவும் ஏடு மகிழ்ச்சி ஊட்டக் கூடிய இனிய நடை அழகுடன் இருந்தே தீருமென்றோ கூற முடியாது.

நாரதரின் கானம் பற்றியோ, தேவலோகக் காட்சி பற்றியோ, சுவைதரும் விதமாகத் தீட்டப்பட்ட ஏட்டினைப் படிக்கும் போது, ஒருவகை இனிமை ஏற்படத்தான் செய்கிறது. ஆனால் புதிய எண்ணம், விழிப்பு, செயலாற்றும் தன்மை ஏற்படுவது இல்லை. பக்திப் பரவசத்துடன் அந்த ஏடுகளைப் படிப்போரும், போய்ப் பார்த்து விட்டே வர வேண்டும் நாரதரை என்று பயணப்படுவதில்லை.

மலேயாவைப் பற்றிய வரலாற்றுப் புத்தகத்திலே சுவை இருக்காது. எனினும் படிப்பவர்கள் வசதி கிடைத்தால் அங்குப் போய் வரலாம் என்ற எண்ணங்கொள்ளவும், செயலாற்றவும் முடிகிறது.

சுவை கருதி மட்டும் படிக்கும் பருவத்திலே, நம்ப முடியாத நிகழ்ச்சிகள், சாதிக்க முடியாத செயல்கள் கொண்ட கதைகள், உள்ளத்தைக் கவருகின்றன. இந்த வரிசையில் மனதிலே, எளிதாகவும் விரைவாகவும் பதிந்துவிடும் கதைப் போக்குக் கொண்டவை விக்கிரமாதித்தன் கதை போன்றவைகள்.

அந்தப் பருவத்தைக் கடந்த பிறகு பயன் தரும் ஏடுகளையே மனம் நாடுகிறது. பொழுது போக்குடன், பயனும் தந்து, சுவையும் தந்த புத்தகங்களிலே, பிரதாப முதலியார் சரித்திரத்தைக் குறிப்பிடுகிறேன் – என் உள்ளத்தைக் கவர்ந்த ஏடுகளிலே, அது ஒன்று.

இம்மை, மறுமை என்ற இரு கூறுகளை ஏற்றுக் கொள்பவர்கள், மறுமைக்குத் துணை செய்யும் ஏடுகளை மதிக்கத் தொடங்கி, அறிவாராய்ச்சிக்கு ஒவ்வாத கருத்துக்களை மனத்திலே திணித்துக் கொண்டு, கவலைச் சுமையும், பய பாரமும் கொண்டவர் களாகிறார்கள்.

அத்தகைய ஏடுகளை நான் படித்ததுண்டு – அவை, சில சமயம் அச்சத்தையும் அருவருப்பையும் தந்துள்ளன – உள்ளத்தைக் கவர்ந்ததில்லை. புராண இதிகாசக் கதைகளை நான் பள்ளிப் பருவத்திலே படிக்க நேரிட்டபோது, அவை தேவையற்றவை என்ற கருத்தோ, அல்லது நம்மால் சாதிக்க முடியாதவைகளைக் கொண்ட ஏடுகள் என்றோதான் எண்ணம் ஏற்பட்டது. நரகலோக வர்ணனை, மண்டை ஆயிரம் சுக்கலாக வெடிப்பது, மலைப் பாம்பு விழுங்கி விடுவது போன்றவைகளைப் பற்றிப் படிக்கும் போது, உள்ளத்திலே சில சமயம் அதிர்ச்சி தரும். ஆனால் நீண்ட காலம் அந்த ஏடுகளோ, அவைகளிலே குறிப்பிடப்பட்ட கருத்துக்களோ மனதில் தங்கி இருந்ததில்லை. தினைப்புனத்துப் பட்சிகள் போல, அக்கருத்துக்கள் கூட்டம் கூட்டமாக வரும், உள்ளத்தைத் தொடும். ஆனால் அறிவுத் தெளிவு எனும் ஆலோலம் கேட்கக் கேட்க அவை பறந்தே போய் விடும் – எனக்கு மட்டுமல்ல, சராசரி அறிவுள்ள எவருக்கும்.

படித்துக் கொண்டிருக்கும்போதே நம்மைப் பரவசப்படுத்தி விடும் ஓசை நயமும், பொருள் செறிவுங் கொண்ட புத்தகங்கள் மனதைக் கவரும் தன்மை உடையன. இந்த வரிசையிலே, என் மனதை மிகவும் அதிகமாக ஈர்த்த புத்தகங்களிலே, கலிங்கத்துப் பரணியை, முக்கியமானதாகக் கருதுகிறேன். அத்தகைய ஏடுகள் சுவை தருவன – சுவை ஏற்படுகிறது நிச்சயமாக. ஆனால் பயன் கருதிப் படிக்கும் பருவத்திலே, வெறும் சுவை தரும் ஏடுகளாகிய, கலிங்கத்துப்பரணி, குற்றாலக் குறவஞ்சி ஆகியவைகளைப் படிக்க நேரமும், நினைப்பும் இயற்கையாகவே ஏற்படுவதில்லை.

இனிய நடை, எழில் பற்றிய விளக்கம் , சிந்து பாடும் சிற்றாறு, மேகத்தை மாலையாகக் கொண்ட மலை, மானும் அதன் கன்றும் சென்று நீர் பருகும் சுனை, பங்கப்பழனத்து உழும் உழவர், பலவின் கனியைப் பறித்ததென்று சங்கிட்டு எறியும் காட்சி, கதிர் ஒரு முழமே காணும் கதலி கமுகெனவே நீளும் காட்சி ஆகியவைகள் போன்ற ஓவியங்களைத் தீட்டிக் காட்டும் காவியங்களிலே, சுவை உண்டு என்பதை உணரவே முடியாத குருட்டறிவோ, பருகவே முடியாத பாமரத் தன்மையோ அல்ல. இன்று அவ்விதமான ஏடுகளை, நானும் என் நிலையில் உள்ள உங்களில் பலரும்,

நாடாததற்குக் காரணம் நமது நோக்கம், வேறு ஏடுகளைத் தேடச் செய்கிறது; நமது மனக்கண் முன் தோன்றி, நம்மைப் பணி புரியச் சொல்லும் பிரச்சினைகள் யாவையோ, அவைகளை விளக்கும் ஏடுகளே, இப்போது உள்ளத்தைக் கவருகின்றன.

உள்ளம் வளருகிறது – சிந்தனையால். உலகில் உலவும் எண்ண அலைகளால் – வாழ்க்கை எனும் ஆசிரியன் புகட்டும் பாடங்களால் – இலட்சியங்கள், புதிது புதிதாகப் பிறக்கின்றன. இவைகளுக்கேற்ற வண்ணம் அறிவுத் தாகம் ஏற்படுகிறது. அந்தத் தாகத்தைத் தீர்க்கும் ஏடுகளை நாடுகிறோம்.

அழகு, இன்பம், காதல், மாந்தோப்பில் மங்கை நல்லாளைச் சந்திப்பது போன்ற கதைகள், சுவை தந்து சில சமயம் பயனும் தருகின்றன. ஆனால் அந்த ஏடுகளிலேயே அவன் தேடும் இலட்சியம் முழுவதும் இருப்பதில்லை. பருவம் மாறுகிறது.

மாசறு முத்தே! வலம்புரிச் சங்கே! என்று அன்புரை கூறிக் கண்ணகியுடன் கோவலன் கொஞ்சிடும் காட்சியும், கடலாடும் காட்சியும், "அறநெறி அழித்த நானோ மன்னன்! யானே கள்வன்! யானே கள்வன்!" என்று பாண்டியன் பதறி இறந்திடும் காட்சியும், நெஞ்சை அள்ளும் இன்னோரன்ன பிற காட்சிகளும் கொண்ட சிலப்பதிகாரம், உள்ளத்தைக் கவர்ந்திடத்தான் செய்கிறது. ஆனால் பருவம் மாறுகிறது புத்தகப் பட்டியலும் மாறுகிறது.

ஆற்றல் கிளரும் பருவத்தை அடைந்ததும், வீரச் செயல்கள், களக்காட்சிகள், அரசு அமைக்கும் அருஞ்செயல்கள் ஆகியவைகளைப் பற்றிய புத்தகங்கள் பெரிதும் கவர்ச்சி தருகின்றன. நெப்போலியனின் போரார்வம், பேரரசுகள் அமைந்த விதம், அழிந்த வகை ஆகியவை

> “ தனி மனிதன் மட்டுமல்ல;
> உலகமே இந்த
> முறையிலேதான் அந்தந்தக்
> காலத்திற்கேற்ற நூற்களை
> ஏற்றுக் கொள்கிறது.
> காலத்திற்கேற்ற
> முறையில் நூற்கள் மாறினாலும்,
> இறந்த கால ஏடுகள்
> அனைத்தும்
> இறந்து விடுவதில்லை. ”

பற்றிய நிகழ்ச்சி நிகண்டுகள் மனதைக் கவர்ந்ததுடன், தாய் நாட்டில், தமிழகத்தில் அத்தகைய மாவீரர்கள், மணிமுடி தரித்த மன்னர்கள், கடல் கடந்து சென்று வெற்றிக் கொடி நாட்டிய வேந்தர்கள் ஆகியவர்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்; தாய்த் திருநாட்டின் தனிச் சிறப்பை உணர்ந்து உலகுக்கு உரைக்க வேண்டும் என்று ஆர்வம் கிளம்பி, தமிழ்ச் சுவடிகளைத் துருவித் துருவிப் பார்க்கவும், தமிழ் அறிஞர்களிடமெல்லாம் பாடம் கேட்கவும் எண்ணம் பிறந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிறு குறிப்புக்களும், இமயம் மூட்டிய வீரத்தைப் பற்றிய இனிய பாடல்களும், கனக விசயர் தலையில் கல்லேற்றிய கதையும், கங்கையும் கடாரமும் கொண்டது பற்றிய கல்வெட்டுக்களும், கரிகாலன், இராஜ ராஜன், குலோத்துங்கன், ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன், ஆடலரசன், ஆட்டனத்தி என்று வரும் பெயர்ப் பட்டியலும் கிடைத்தனவேயன்றி, மற்ற நாட்டு மாவீரர்களின் வரலாறுகள் போலக் கட்டுக் கோப்பாக இன்னமும் கிடைக்கவில்லை. கிடைக்காத காரணத்தால் செயலாற்றும் பக்குவத்தில் உள்ள வீர இளைஞர்களின் மனதைக் கவரக் கூடிய

“ உள்ளம் வளருகிறது – சிந்தனையால். உலகில் உலவும் எண்ண அலைகளால் – வாழ்க்கை எனும் ஆசிரியன் புகட்டும் பாடங்களால் – இலட்சியங்கள், புதிது புதிதாகப் பிறக்கின்றன. இவைகளுக்கேற்ற வண்ணம் அறிவுத் தாகம் ஏற்படுகிறது. அந்தத் தாகத்தைத் தீர்க்கும் ஏடுகளை நாடுகிறோம். ”

மகத்தான சாதனத்தைப் பெற முடியாமற் போய்விட்டது.

அபட் எழுதிய ‘நெப்போலியன் வரலாறு’, கிப்பன் எழுதிய ‘ரோம் சாம்ராஜ்யத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்’ எனும் இரு ஏடுகள் என் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன.

அடிமைத் தளையிலிருந்து விடுபட வீரப் போர் புரிந்த நாடுகளின் வரலாறுகள், அவைகளிலே இடம் பெறும். ஆற்றல் மிக்கோரின் வாழ்க்கைக் குறிப்புக்கள், ஆபத்துக்களைப் பொருட்படுத்தாமல் சொந்த வாழ்க்கையில் வறுமைத் தேள் கொட்டினாலும், பழி எனும் பாம்பு கடித்தாலும் பதறாமல், சலிக்காமல் விடுதலைப் போர் நடத்திய வீரச் செயல்களைப் படிக்கும்போது கோழையும் வீரனாகிறான் – கூனனும் சற்று நிமிர்ந்து நிற்கிறான். சைமன் போலீவர், கரிபால்டி ஆகியோர் பற்றிய புத்தகங்கள் என்னைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றன. அதே முறையிலே தீட்டப்படவில்லை என்ற போதிலும், சிந்திச் சிதறிக் கிடக்கும் அளவிலேயும், கட்ட பொம்மு, தேசிங்குராஜன் ஆகியோரின் கதைகளும், நரசிம்மப் பல்லவன் காலத்தில் காஞ்சிபுரத்திலிருந்து பம்பாய் அருகேயுள்ள வாதாபி என்னும் நகர் மீது படை எடுத்துச் சென்று, சாளுக்கிய மன்னன் புலிகேசியைத் தோற்கடித்த பரஞ்சோதியின் பேராற்றல் பற்றிய சிறு குறிப்புக்களும் என் மனதைப் பெரிதும் கவர்ந்து உள்ளன.

நாடு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலே, விடுதலை வீரர்களின் கதைகள், மனதைக் கவரும் அளவுக்கு, அவை அதிகம் கிடைத்தான பிறகு, அதே வகை ஏடுகள் உள்ளத்தைக் கவருவதில்லை. இரண்டாவது அல்லது மூன்றாவது மாம்பழம் சாப்பிடுவது போலாகி விடுகிறது.

பொதுவாகவே வீரத்தைக் கண்டு வியந்திடும் பருவத்தைத் தாண்டி, வீரத்தால் விளைந்தது என்ன என்று கணக்கிடும் பருவம் செல்கிறோம். மீண்டும் புத்தகப் பட்டியல் மாறுகிறது. அந்நிலையில் வீரர்களின் வரலாறுகளை விட நீதிக்காகப் போராடியவர்கள், மேட்டுக் குடியினரின் அட்டகாசத்தை எதிர்த்து நின்றவர்கள், புனிதப் போர்வையில் உலவிய புலிகளிடமிருந்து மனமருள் கொண்ட மான் கூட்டத்தை விடுவித்தவர்கள், நசுக்கப்பட்ட மக்களுக்குக் கை கொடுத்தவர்கள், ஆதிக்கப் பீடங்களான அரண்மனைகளையும், மடாலயங்களையும் அச்சம் இன்றி எதிர்த்து நின்று அறப் போர் நடத்தி, மக்களின் நல்வாழ்வுக்குப் பாடுபட்டவர்களின் வரலாறுகள் மனதைக் கவருகின்றன. இந்த வரிசையில் அறியாமை இருளைக் கிழித்து எறிந்த அறிவுச் சுடர், ஆதிக்கக் கோட்டையைத் தர்க்கத்தெறிந்த பகுத்தறிவுப் படைத் தலைவன், வக்கிர புத்தி கொண்ட வைதீகத்தின் வைரி வால்டேர் “அரசாங்கம் என்னை அழிக்க முயற்சிக்கலாம்; படை பலம் பாய்ந்து வரலாம்;

உலகே கேலியும் செய்யலாம்; எனினும் நீதியை நிலை நாட்டி, ஏழையின் கண்ணீரைத் துடைத்தே தீருவேன்'' என்று வீர முழக்கமிட்டுப் போரிட்டு வெற்றி கண்ட இலக்கிய வீரன், எமிலி ஜோலா ஆகியவரின் வரலாறுகளையும், அவர்கள் அளித்த அறிவுரைகளைக் கொண்ட ஏடுகளையும் முக்கியமானதாகக் கருதுகிறேன். இதே முறையில் இங்கர்சாலின் பகுத்தறிவு வசனக் கவிதைகள் எழுச்சி ஊட்டி என் மனதைக் கவர்ந்திருக்கின்றன.

இயற்கை நுட்பங்களைக் கண்டறிந்து, மனித சமுதாயத்துக்கு உள்ள இன்னலைத் துடைத்து, இதம் தந்து உலகைப் புதியதாய், வசதியாய் ஆக்கித் தரும் விஞ்ஞான வித்தகர்களின் வாழ்க்கை வரலாறுகளும், ஆராய்ச்சிகளும், இன்றைய நிலையில் சுவையும், பயனும் தந்து, மக்கள் உள்ளத்தைக் கவரவல்ல, அருமையான நூற்களாக அமைகின்றன.

தனி மனிதன் மட்டுமல்ல; உலகமே இந்த முறையிலேதான் அந்தந்தக் காலத்திற்கேற்ற நூற்களை ஏற்றுக் கொள்கிறது. காலத்திற்கேற்ற முறையில் நூற்கள் மாறினாலும், இறந்த கால ஏடுகள் அனைத்தும் இறந்து விடுவதில்லை.

புத்தர் துறவு, சாக்கரடீஸ் வழக்கு மன்றத்தில் நின்று பேசுவது, ஏசு சிலுவையில் அறைபடுவது, இளங்கோவடிகளின் துறவு, மணிமேகலையின் மனஉறுதி, கண்ணகியின் கேள்விக்கணைகள், மாதவியின் மன நெகிழ்ச்சி, அசோகனின் துக்கம், சகுந்தலையின் சோகம் போன்ற நிகழ்ச்சிக் கோவைகள் எப்போதுமே நெஞ்சை நெகிழச் செய்வன.

இன்னின்ன புத்தகங்களைப் படித்ததாக ஏற்பட்டால்தான், உள்ளத் தூய்மையும், மேதையும் இருப்பதாக உலகு கருதும் என்ற எண்ணங்கொண்டு சிலர், சில புத்தகங்களைக் குறிப்பிட்டு கூறுவதுண்டு எழுச்சியுடன்.

“திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்.
திருப்புகழ் படிக்குமவர் சிந்தை வலிவாலே,
ஒருத்தரை மதிப்பதில்லை உந்தன் அருளாலே.

ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி, நைடதம் புலவர்க்கு ஔடதம். கல்லாடம் படித்தவருடன் சொல்லாடாதே என்றெல்லாம் வழங்கப்படும் புகழ்மொழிகளை மட்டுங் கொண்டே புத்தகப் பட்டியலைத் தயாரித்துவிட இன்றைய உலகம் தயாரில் இல்லை.

அறிவுத் துறையின் முனைகள் இப்போது ஒன்று பலவாகப் பெருகியபடி இருக்கிறது, பல்வேறு துறைகளிலே உள்ள பிரச்சினைகளிலே, தெளிவும், பண்பாட்டுக்கு ஒரு விளக்கமும், சமுதாய அமைப்பு முறை, அரசு அமைப்பு முறை, அறநெறி ஆகியவை பற்றிய கருத்துரையும் ஒருங்கே கொண்டதாய், மக்களை அறிவும் ஆற்றலும் அறமும் கொண்டவர்களாக்க வல்லதாய் அமைந்துள்ள பெருநூல் இன்று நமக்கிருப்பது திருக்குறள்; நமது உள்ளத்தைக் கவருவது மட்டுமல்ல, திருத்தவும் உதவுவது. எனினும் அறிவு ஒரு தொடர் கதை – அதற்கு ஆசிரியர்கள், தொடர்ந்து தோன்றியபடி இருக்கிறார்கள் – இனியும் தோன்றுவார்கள் – உள்ளங்கவர் புத்தகங்கள் மேலும் பலப்பல வெளிவந்தபடிதான் இருக்கும்.

❖ ❖ ❖

# அண்ணல் அம்பேத்கர் அமுதமொழிகள்

**ச**னநாயகம், எங்கு வேண்டுமாயினும் வளரும் செடியன்று. சமுதாயத்தில் இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகளே சனநாயகத்தை அழிக்கின்ற கரையான்கள் ஆகும். ஆதலால், மக்களின் நல் வாழ்விற்கான திட்டங்கள், செயல்முறைகள் ஆகியவற்றைக் கொண்டதே உண்மையான சனநாயகம் ஆகும்''.

"**இ**ந்தியாவில் பல்லாயிரக் கணக்கான சாதிகளும், மூடத் தனங்களும் இருந்து கொண்டிருக்கும் நாள்வரைக்கும், நாம் ஏனைய நாடுகளின் முன்பாக, தலைநிமிர்ந்து வாழ இயலாது, வெட்கித் தலை குனிந்து தான் வாழ வேண்டும்''.

"**தீ**ண்டாமை, மதத்தை மட்டும் அடிப் படையாகக் கொண்டதல்ல; பொருளா தாரத்தையும் அடிப் படையாகக் கொண்டது. இது அடிமைத்தனத்தைக் காட்டிலும் மிகவும் மோசமானது''.

"**து**ளி இரத்தமும் சிந்தாமல், மக்களின் சமூக, பொருளாதார வாழ்வில், புரட்சிகரமான மாறுதல் களை ஏற்படுத்தும் அரசுமுறையே, நவீன ஜனநாயகம் ஆகும்''.

"**அ**ரசு, பெரும்பான்மையினரால் அமைக்கப் பட்டு சிறுபான்மை யினரின் ஒத்துழைப்பையும், சம்மதத்தையும் பெற்று, நடைபெறுவதே சுதந்திரத்தின் அர்த்தம் ஆகும். அத்தகைய சனநாயகத்தை நான் வரவேற்பேன்''.

"**சு**தந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பே, எனது இலட்சியம்''.

"**எ**ல்லாச் சமூகங்களும் சில பயனற்ற விஷமத்தனமான பழக்க மூட்டைகளைச் சுமந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அறிவு விளக்கம் பெற்ற சமூகங்கள் தமது பழக்க வழக்கங்களை ஆராய்ந்து,





நல்லவைகளை ஒப்புக் கொண்டு, தீயவைகளை நிராகரித்து, முன்னேற முயல்கின்றன''.

“உத்தமமான ஒரு சமூகம், மாற்றங்களை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். சமூகத்தின் ஒரு பகுதியில் ஏற்படும் மாற்றம், மற்றப் பகுதிகளிலும் பரவக் கூடியதாய் இருக்க வேண்டும். ஒரு உத்தமமான சமூக அமைப்பில், எல்லோர்க்கும் பொதுவான பல பாத்தியதைகள் இருக்க வேண்டும். மற்றவர்களுடன் சம்பந்தம் ஏற்படப் பல திறப்பட்ட மார்க்கங்களும் சந்தர்ப்பங்களும் இருக்க வேண்டும்''.

ஒரு நாடு, மற்றொரு நாட்டை அடிமைப்படுத்தி வைக்க எவ்வித உரிமையும் கிடையாது.

“நம்மை நாமே உயர்த்திக் கொள்ள வேண்டும். நாம் சுயமாக வாழ்வது எப்படி என்று கற்றுக்கொள்ள வேண்டும். தன்மானம் உடையவர்களாய் வாழ வேண்டும். நாமாக முயற்சி செய்து நமது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றைச் செய்தால், நாம் உயர்வது உறுதி''.

ஆயிரமாயிரம் ஆண்டு அடிமைகளாக, தன் மானத்தை இழந்து இருப்பதைக் காட்டிலும், அரை நிமிடம் வாழ்வாங்கு வாழ்ந்து அமரனாதல் சாலச் சிறந்ததாகும்.

பிறந்தவன் சாவான் என்பது இயற்கை. அதைக் கண்டு நான் பயப்படவா போகின்றேன்? ஆனால், சீரிய லட்சியமாகிய சுயமரியாதையை மேலும் வளர்ப்பதில் ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அதுதான் மனித வாழ்விற்கே சிறப்பாகும். நாம் அடிமைகள் அன்று; நாம் போர் வீரர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். சுயமரியாதை இல்லாமல், நாட்டுப்பற்று இல்லாமல், பற்றின்றி வாழ்வதை விட, சாவதே ஒரு வீரனுக்கு உகந்த வழியாகும்.

சமூக சீர்திருத்தத்திற்கு உள்ள வழி இந்தியாவைப் பொறுத்தவரையில் – சுவர்க்கத்திற்கு உள்ள வழிபோலக் கரடுமுரடானது; சங்கடமானது; ஆபத்துகள் நிறைந்தது.

இந்தியாவில், சமூக சீர்திருத்தத்திற்கு நண்பர்கள் சிலரே; எதிரிகளோ அதிகம்! எதிரிகள் இருவகை; ஒரு கூட்டத்தார் அரசியல் சீர்திருத்தக்காரர்; மற்றவர்கள் அபேதவாதிகள்.

இந்திய சமூக அமைப்பைத் திருத்தியமைக்க வேண்டுமானால், அரசியல் சீர்திருத்தத்திற்குமுன் – சமூக சீர்திருத்தம் ஏற்பட வேண்டுமென்னும் எனது கொள்கையை ஒருவராலும் மறுக்க முடியாது.

“அறிவானது மனிதனுடைய வாழ்வின் அடித்தளம் ஆகும். ஆதலால், மாணவர்கள் தங்களது முயற்சிகள் அனைத்தையும் பகுத்தறிவின் ஆற்றலைக் கொண்டு நிர்வகிக்கக் கூடியவைகளாக அமைத்துக் கொள்ள வேண்டும்''.

❖ ❖ ❖

# பதிலை நெருப்பாக உமிழ்ந்த பாவாணர்

**- கலைஞர்**

**வா**ள் தூங்கும் உறையைப் போல் மீசையுள்ள
வேள் ஆய் அண்டிரன் எனும் குறுநில வேந்தன்
பொதிய மலைப்பகுதி ஆய்குடியைத் தலைநகராய்க் கொண்டு
போரென்று வருவோரை எலியாக்கி விரட்டுகின்ற புலியாவான்!

உரையூர் ஏணிச்சேரி முடமோசியார், குட்டுவன் கீரனார்,
துறையூர் ஓடைக்கிழார், பரணர், காரிக்கண்ணனார்,
உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார் என்றெல்லாம்
ஒரு புலவர் கூட்டமே இவன் புகழ் பாடிப் போற்றிற்று எனினும்

உடனிருந்து அவன் உளமுணர்ந்து உவகை பொங்கத்
திடங் கொண்ட அவன் கைகளாலே தினந்தோறும்
அள்ளிக் கொடுத்த வள்ளல் தன்மையினைப்
புள்ளி மயிலின் இறகெடுத்துக் குழந்தையின் பூங்குழலில் செருகியது போல்

புறப்பாட்டாய் எழுதியெடுத்து தமிழ் முடியில் செருகியவர்
புலவர் பிரான் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் ஒருவர்தானே!

ஆய் அண்டிரன் மலை வளம் குறித்து ஏணிச்சேரி முடமோசியார்
அரியதோர் நிகழ்ச்சியினை அழகுறப் பாடுதல் காண்போம்.
மலையோரம் ஊர்ப் பொதுவிடத்தில் இரவலர் கட்டியிருந்த மத்தளத்தை

மந்தியொன்று பலாக்கனியென மயங்கித் தட்டிப்பார்க்க
மரத்தின் கிளைகளில் வாழ் அன்னச் சேவல்;

மருண்டு போய்ச் சிறகடித்து ஒலியெழுப்பிப் பறக்கின்ற;
புகை போலும் முகில் தவழும் பொதிய மலை நோக்கி



நகை முகத்து ஆரணங்குகள் ஆடச் செல்வரேயன்றி
படை யெடுத்துப் பகைநாட்டார்; அண்டிரனைச் சூழ்வதற்குத்
தலை வைத்தும் படுக்க மாட்டார் அவன் ஆளுகின்ற மலையிருக்கும் திக்கு நோக்கி!

கொங்கரை எதிர்த்து அவா கொடும் பகை அழித்துக்
குடமலைக் கடற்கரை வரையில் விரட்டிய வீரனவன்!

ஏணிச்சேரியார் இயற்றிய பாடலில் – அவன் ஆண்ட நிலத்தின்
எழிலையும் காணலாம்; எதிரிகள் பட்ட பாட்டையும் காணலாம்!
தோற்றோடிய பகைவராம் கொங்கர் புறங்காட்டி
மேற்றிசைக் கடலோர மலைகளிலே ஒளிந்தபோது
எறிந்துவிட்டுப் போன வேல்களின் தொகையையும் மிஞ்சுமாம்;
பரிசிலர்க்கு ஆய் அண்டிரன் பரிந்தளித்த யானைகளின் தொகை!

வியப்புற்ற, தமிழ் வித்தகராம் ஏணிச்சேரியர் கேட்கின்றார்;
'வேந்தே! உனது நாட்டு யானைகள் மட்டும் ஒரு தடவைக்குப் பத்து கன்று போடுமோ ?' என்று!
பாடி வந்த பாணர்க்கும், பாவலர்க்கும், பரிசிலர்க்கும்

பரிசளிக்க எப்படித்தான் இருந்ததோ அத்தனை யானையென
அதிசயத்தால் மெய்மறந்து கவிதை தீட்டி
ஆய் அண்டிரனைப் புகழ்ந்த பாவேந்தர் முடமோசியார்;
நாட்டு வளம் பாடுவதில் நற்புலமை நாவலராய்த் திகழ்ந்தார் எனினும்

காட்டு வளம் காண்பதற்கு ஒரு நாள் சென்றாராம்!
வழி நெடுக அவர் கண்ட காட்சி; அவர்
விழிகளையே அவர் நம்ப முடியாமற் செய்ததுவாம்!
கூட்டங் கூட்டமாய் யானைகள் பெரிதும் சிறிதும்
வாட்டமின்றி வளர்ந்தோங்கிய மரங்களின் நிழலில்
நூற்றுக்கணக்கில் நின்றதைப் பார்த்து
ஆற்றுப் பெருக்கென அருந்தமிழ்க் கவிதை யாத்தார் ஆங்கே!



பாடுவோர்தான் ஆய் அண்டிரனை நாடிப்
பரிசாகப் பன்னூறு யானைகளைப் பெற்றிடுவர்; இந்தக்
காடுகளும் ஒருவேளை; கவிதை கற்றுப் பரிசு பெற
நீடுபுகழ் ஆய் அண்டிரனைத் தேடி வந்து – இந்தக்
களிறுகளைப் பரிசாகப் பெற்று வந்து, நல்ல
குளிர் தருக்கள் நிழல் தனிலே குவித்து வைத்தனவோ?

கவிநயம், கவின் தமிழ் நயம் கற்கண்டாம்–அதிலும்
புவியாளும் ஆய் அண்டிரனைப் புகழ்கின்ற பொருள் நயம் புதிய மணப் பூச்செண்டாம்!

பனி சூழ் மலையாம் இமயம் வடதிசையில் நிற்கும்போது,
கனி சூழ் மலையாம் ஆய்குடி தென்திசையில் நில்லாதாயின்
கீழ் மேலாகி இப்பெரும் உலகம் தலை சாய்ந்து
பாழ்பட்டுப் போகுமென முடமோசியார் பாடுகின்றார் எனின்;
அது, ஆய் அண்டிரனின் கொடைச் சிறப்பை எண்ணி
மதுவுண்ட வண்டு போல் மாக்கவிஞர் ஆனதினால்தானே!

வள்ளலுக் கெல்லாம் வள்ளலாய்த் திகழ்ந்தவனும்
வான்மழை யொத்தவனுமான வேள் ஆய் அண்டிரன் குறித்து
உள்ளத்தில் அழுக்கு கொண்ட ஒரு சிலரோ – புகழ்
உயரத்தில் வீற்றிருந்த ஆய்குடி வேந்தன் தன்னை
பள்ளத்தில் உருட்டுவதாய்க் கருதிக்கொண்டு – அவன்
அள்ளித் தருவதெல்லாம் ஆதாயம் எதிர்பார்த்துத்தான் என்றும்
இப்பிறப்பில் செய்யும் உதவியெலாம் மறுபிறப்பில் உதவுமென்ற

★

தன்னலத்தின் அடிப்படையில்தான் தருகின்றான் கொடையென்றும்
நாக்கிருக்கும் காரணத்தால் நாலு பேர் பத்து பேர் கூடி
நோக்கம் கற்பித்தார் ஆய் அண்டிரனின் அரவணைக்கும் போக்கிற்கு!

இதுகேட்டுச் சினம் மிகக் கொண்ட முடமோசியார்,
இழிதகை நோக்கம் கற்பித்தல் தீதென உரைத்து;
இம்மையிற் செய்வது மறுமைக்கு ஆகுமெனும்
அறவிலை வணிகனல்ல ஆய் அண்டிரன் என்று
திட்டவட்டமாய்த் தீட்டினார் பாடல் ஒன்று!

கொட்டிக் கொடுக்கும் பொருளை விலையாக்கி
தட்டிப் பறித்திடலாம் மறுமையில் அறத்தையென்று

தரந் தாழ்ந்த சிந்தை அணுவளவும் கொள்ளாத
வேள் ஆய் அண்டிரனை வெறுப்பின் விளைவாலே
தேள் போலக் கொட்ட நினையாதீர்!
பயன் கருதி பரிசிலர்க்கும் இரவலர்க்கும்
பசும்பொன்னும் அணியும் மணியும் யானைகளும்
பரிசாகத் தருகின்ற எத்தனல்ல எமது மன்னனென்று
பதிலை நெருப்பாக உமிழ்ந்த பாவாணர் முடமோசியார் வாழ்க! வாழ்க!

(புறநானூறுத் தொகுப்பில் ‘உறையூர் ஏணிச்சேரி
முடமோசியார்’ எனும் புலவர், பொதியமலையோரத்து
ஆய்குடி ஆண்ட ‘வேள் ஆய் அண்டிரன்’ என்னும்
குறுநில மன்னனைக் குறித்து இயற்றிய பாடல்:
புறநானூறு–128, 130, 131, 132, 134
ஆகியவற்றை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது இது)

- ‘‘மன்றப் பலவின் மாச்சினை மந்தி
  இரவலர் நாற்றிய விசிகூடு முழவின்
  பாடின் தெண்கண் கனிசெத்து, அடிப்பின்
  அன்னச் சேவல் மாறு எழுந்து ஆலும்
  கழல்தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்
  ஆடுமகள் குறுகின் அல்லது,
  பீடுகெழு மன்னர் குறுகலோ அரிதோ’’ (புறநானூறு: பாடல்: 128)

● ''விளங்குமணிக் கொடும்பூண் ஆஅய், நின்னாட்டு
இளம்பிடி ஒருசூல் பத்து ஈனும்மோ ?
நின்னும் நின் மலையும் பாடி வருநர்க்கு
இன்முகம் கரவாது உவந்து நீ அளித்த
அண்ணல் யானை எண்ணின், கொங்கர்க்
குடகடல் ஒட்டிய ஞான்றைத்
தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே!'' (புறநானூறு: பாடல்: 130)

* ''மழைக் கணஞ்சேக்கும் மாமலைக் கிழவன்
வாழைப் பூங்கண்ணி வாய்வாள் அண்டிரன்
குன்றம் பாடின கொல்லோ
களிறு மிகவுடைய இக் கவின்பெறு காடே!'' (புறநானூறு: பாடல்: 131)

* ''... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ...
வடதிசை யதுவே வான்தோய் இமயம்
தென்திசை ஆஅய்குடி இன்றாயின்
பிறழ்வது மன்னோ, இம்மலர்தலை உலகே.'' (புறநானூறு: பாடல்: 132)

● ''இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்' எனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்
பிறரும் சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்று அவன் கைவண்மையே.'' (புறநானூறு: பாடல்: 134)

பொருள் விளக்கம்:

பலவின் மாச்சினை மந்தி = பலாமரத்துக் கிளையில் இருக்கும்
மந்தி, இரவலர் நாற்றிய = பரிசு வாங்க வந்தோர் தூக்கிக்
கட்டிவைத்த, விசிகூடு முழவு = பிணிப்பு பொருந்திய மத்தளம்.
கனிசெத்து = பலாப்பழமெனக் கருதி. குறுகின் = அணுகினால்.
தலைப்பெயர்த்திட்ட = தம்மிடமிருந்து விடப்பட்ட.
ஆங்குப்பட்டன்று அவன் கைவண்மை = அச்செய்கையின்
பாற்பட்டதன்று அவனது ஈகைத்தன்மை.

– ''கலைஞரின் சங்கத்தமிழ்'' நூலிலிருந்து...

# திராவிட சமுதாயச் சிற்பி சர். பிட்டி. தியாகராயர்



**செ**ல்வமும் செல்வாக்கும் மிக்க குடும்பத்தில் 1852ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27ஆம் நாள் தியாகராயர் பிறந்தார். முதல் விடுதலைப் போர் எனப்படும் சிப்பாய்க் கலகத்துக்கு ஐந்து ஆண்டுகள் முன்னர் பிறந்தார். இவர் பிறந்த ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் தான் சென்னைப் பல்கலைக்கழகம் ஏற்பட்டது.

இவரது முன்னோர் தோல் வர்த்தகத்தில் ஈடுபட்டுத் தோல் பதனிடும் சாலைகளை நடத்தி வந்தனர். இவரது பரம்பரைத் தொழில் கைத்தறி நெசவு. அரசாங்க உயர்மட்ட வேலைகளில் நாட்டம் செலுத்திடாமல் வர்த்தகத்திலும் சிறுதொழில் வளர்ச்சியிலும் ஆர்வம் கொண்டார். கைத்தறி நெசவுத் தொழிலில் நாட்டம் செலுத்திப் பெரியதொரு நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கிப் பலருக்கு வேலை வாய்ப்பு தந்தார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் படித்து 1876ஆம் ஆண்டில் பட்டம் பெற்றார்.

1905ஆம் ஆண்டில் வங்காளப் பிரிவினைக்கான கிளர்ச்சியில் முகிழ்த்த புதிய தேசிய எழுச்சியின் காரணமாகச் சுதேசி இயக்கம் நாட்டில் பரவலாகப் பரவத் தொடங்கியது. இச் சூழ்நிலையைப் பயன்படுத்திப் பண்டைய நெசவுத் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டும் பணியில் வெற்றி கண்டார், தியாகராயர் தேசிய நிதித் தொழில் சங்கத்தின் சார்பில் 1908ஆம்

ஆண்டில் சென்னையில் நடைபெற்ற அனைத்து இந்திய நெசவுத் தொழில் போட்டியில் அவரது தொழிற்சாலை நற்சான்று இதழையும் பதக்கங்களையும் பெற்றுப் புகழடைந்தது.

தென்னிந்திய வர்த்தக சபையை ஆரம்பித்தவர்களில் தியாகராயரும் ஒருவர். அச்சபையின் தொடக்க காலமான 1910 லிருந்து 1921ஆம் ஆண்டுவரை அதன் தலைவராக இருந்து தென்னிந்தியாவின் வர்த்தக வளர்ச்சிக்கும், தொழில்கள் அபிவிருத்திக்கும் அரும்பெரும் சேவைகளை ஆற்றியுள்ளார். நாட்டில் தொழிற் கல்வியைப் பரப்பப் பெரும் முயற்சிகளை எடுத்துக் கொண்டார். செங்கல்வராய நாயக்கர் தொழிற் பயிற்சிப் பள்ளியின் நிருவாகக் குழுவில் அவர் ஓர் உறுப்பினராக இருந்து அப்பள்ளியை வளர்ச்சியடையச் செய்தார். அவரே சொந்தமாக வண்ணாரப்பேட்டையில் ஒரு பள்ளியையும் நடத்தி வந்தார். உயர்தரக் கல்வியிலும் அவர் அதிக கவனம் செலுத்தினார். பச்சையப்பன் கல்லூரி, பச்சையப்பன் அற நிறுவனங்கள் ஆகியவற்றின் தர்மகர்த்தாக்கள் சபையின் தலைவராக அவர் பல்லாண்டுகள் இருந்து, அந்த நிறுவனங் களைப் பெரும் வளர்ச்சியடையச் செய்தார்.

காங்கிரஸ் கட்சியில் அவர் ஆரம்பத்தில் பங்குகொண்டு சென்னையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.

பின்னர், பிராமணரல்லாதாரின் தாழ்ந்த நிலையைக் கண்டு, வேதனையடைந்தார். அவர்கள் கல்வியில் மிகவும் பிற்போக்கில் இருந்தனர். அரசாங்க வேலைகளில் அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள்.

> *“தென்னிந்திய வர்த்தக சபையை ஆரம்பித்தவர்களில் தியாகராயரும் ஒருவர். அச்சபையின் தொடக்க காலமான 1910 லிருந்து 1921ஆம் ஆண்டுவரை அதன் தலைவராக இருந்து தென்னிந்தியாவின் வர்த்தக வளர்ச்சிக்கும், தொழில்கள் அபிவிருத்திக்கும் அரும்பெரும் சேவைகளை ஆற்றியுள்ளார்.”*

தம்மின் மக்கள் நாதியற்று நலியுற்று, சமுதாயத்தின் அடித்தளத்தில் கிடந்து அவதிப்படுவதைத்கண்டு, தியாகராயர் மனம் வெதும்பினார். வீழ்ச்சியுற்ற சமுதாயத்துக்கு எழுச்சியூட்ட, அவரும் டாக்டர் டி. எம். நாயரும் சேர்ந்து தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தை (நீதிக் கட்சியைத்) தோற்றுவித்தார்கள்.

நீதிக் கட்சியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கையை பிராமணரல்லாத பெருங்குடி மக்களின் உரிமைச் சாசனத்தை 1916 நவம்பர் 20ஆம் நாள் சர் பிட்டி. தியாகராயர் தம் கையெழுத்திட்டு வெளியிட்டார்.

எல்லாச் சமூகத்தினரும் ஒத்த உரிமையும், ஒத்த வாழ்வும், ஒத்த உயர்வும் பெறுதல் வேண்டும் அதுவே ஜஸ்டிஸ் கட்சியின் இலட்சியம் – என்ற தமது உணர்ச்சி வளம் கெழுமிய, உயிர்ப்பாற்றல் மிக்க கருத்துகளை அறிக்கையில் அவர் தெளிவாக்கினார்.

அந்த அறிக்கை நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. 'தேசியவாதி' கள் முதலில் கேலியும், பிறகு கண்டனமும், அடுத்து அனல் கக்கவும் செய்தார்கள். எதிர்ப்பையும் ஏளனத்தையும், கடும் மொழியையும், கண்டனத்தையும் செயல்வீரர் தியாகராயர் கடுகளவும் பொருட்படுத்த வில்லை. கருமமே கண்ணாயினார். புதிய பாதை அமைக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு, அல்லும் பகலும் அயராது உழைத்தார்.

ஒரு வகுப்பு மீது மற்றொரு வகுப்பு ஆதிக்கம் செலுத்தாமல் இருக்க, வகுப்புகளுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் அரசாங்கத்தைத் தட்டிக் கேட்கத் தொடங்கியது. கடைசியில் அந்தக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

1920ஆம் ஆண்டில் அப்போதைய சென்னை மாகாணத்தின் 98 தொகுதிகளில் நீதிக் கட்சியினர் வெற்றிவாகை சூடினர். சட்டமன்றப் பெரும்பான்மைக் கட்சித் தலைவர் என்ற முறையில் கவர்னர் லார்டு வெல்லிங்டன் முதன்மந்திரி பதவியேற்று அமைச்சரவை அமைக்குமாறு தேர்தலில் நின்று பெருவெற்றி பெற்றவரும் நீதிக்கட்சித் தலைவருமான தியாகராயரைக் கேட்டுக் கொண்டார். ஆனால், தியாகராயர் பதவி ஏற்க மறுத்துவிட்டு தனது கட்சிப் பிரமுகர்கள் மூவரின் பெயரைப் பரிந்துரை செய்து அமைச்சரவை அமைக்கச் செய்தார். தாம் பதவி ஏற்காமை தனிப்பட்ட முறையில் தமக்குப் பதவி ஆசை இல்லை என்பதை மெய்ப்பிக்க, அவர் கவர்னருக்கு எழுதிய கடிதத்திலும் நேரிலும் சந்தித்துக் கூறியதிலும் குறிப்பிட்டதாவது:

இந்திய வரலாற்றிலேயே முன் எப்போதும் இல்லை எனும்படி, அரசியல் ஞானமற்ற பாமர மக்களைத் தட்டி எழுப்பிய பாவத்துக்காக என்னையும் அகால மரணமடைந்த என் அருமை சகத்தலைவர் டாக்டர். டி. எம். நாயரையும் வெள்ளையனின் வால் பிடிப்பவர்கள் என்று காங்கிரஸ் தலைவர்களும் அவர்களுடைய பத்திரிகைகளும் தூற்றுகின்றனர். நான் இப்பதவியை ஏற்பேனேயானால் எனது புனிதமான கட்சிக்குக்களங்கம் விளைவித்தவன் ஆவேன். அதனால் நான் பதவி ஏற்கமாட்டேன்; மன்னிக்க வேண்டும்''.

ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் அளவுக்குத் தன் குடும்பச் சொத்தை நீதிக்கட்சிக்காகச் செலவழித்த வள்ளலும் நாற்பது ஆண்டுகளாகச் சென்னை மாநகராட்சியில் உறுப்பினராக இருந்ததோடு அதன் முதலாவது தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவராக இருந்த பெருமைக்குரிய சர். பிட்டி. தியாகராயரின் இந்த அறிவிப்பு எதிரிகளையும் வியக்கச் செய்தது.

இந்திய ஜனநாயக வரலாற்றில் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் தனது உயிரினும் மேலாக நேசித்த நீதிக்கட்சி வெற்றி வாகை சூடியது கண்டு பூரித்துப் போனவர் தியாகராயர். அவரது ஒவ்வொரு செயலும் தனக்கென வாழாப் பிறருக்குரியாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

தியாகராயர் சென்னை மாநகராட்சியில் தொடர்ந்து 40 ஆண்டுகள் சேவை செய்திருக்கிறார். 1919ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட சென்னை நகர முனிசிபல் சட்டப்படி, மாநகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தலைவராவார் அவர். அந்த ஆண்டிலிருந்து 1923ஆம் ஆண்டுவரை அவர் தொடர்ந்து மாநகராட்சியின் தலைவராகவே தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னை மாநகரம் இன்றுள்ள பெரும் நிலைக்கு, அன்று அரும்பணிகள் ஆற்றியவர் நம் அண்ணலாவார்.

அவரது சேவைகளைப் பாராட்டி அரசாங்கம் அவருக்கு 1909இல் ராவ்பகதூர் பட்டத்தையும் 1919இல் திவான் பகதூர் பட்டத்தையும் 1921இல் சர் பட்டத்தையும் வழங்கியது.

**"நவீன முறையில் நாட்டில் தொழில் வளர்ச்சி தழைத்திடவும் முக்கியப் பகுதிகளில் புதிய ரயில்பாதைகள் அமைந்திடவும் சென்னைத் துறைமுகம் மேலும் விரிவடைந்திடவும் இன்றுள்ள பக்கிங்காம் கால்வாய் போக்குவரத்திற்கு உகந்ததாய்ப் பயன்பட்டிடவும் தியாகராயர் பெரிதும் உழைத்திட்ட உத்தமர்"**

தியாகராயர் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம் அவரது உயர் குணத்தைப் பறைசாற்றும். சேலத்தைச் சேர்ந்த ஒரு பெரிய குடும்பத்தின் சிறுவன் ஒருவர் பெற்றோரை இழந்து விட்டான். அந்தச் சிறுவனுக்குச் சேரவேண்டிய ரூ.25,000 மதிப்புள்ள சொத்துக்களை நிர்வகிக்கும் தர்மகர்த்தாவாக இருக்கும்படி தியாகராயரைக் கேட்டுக் கொண்டார்கள். அவரும் இசைந்து அந்தச் சொத்துக்களைக் கண்காணித்து வந்ததோடு, சிறுவனின் நலன்களையும் பெற்ற தந்தையைப் போலக் கவனித்து வந்தார். அந்தச் சிறுவன் தக்க பருவத்தை அடைந்ததும், தர்மகர்த்தாப் பொறுப்பி லிருந்து அவர் விலகிக் கொண்டு, மூன்று லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை அவனிடம் ஒப்படைத்தார். அவ்வளவு பொறுப்புணர்ச்சியோடும் நேர்மையோடும் வாழ்ந்தவர் தியாகராயர் ஆவார்.

அவர் செய்த அறச்செயல்களுக்கு அளவே இல்லை. துன்பம் கொட்டிய பல குடும்பங்களை வாழச் செய்தார். ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தார்.

அத்தகைய பெருவாழ்வு வாழ்ந்து, நாட்டுக்கு உழைத்த வெள்ளுடை வேந்தர் சர். பிட்டி. தியாகராயர் 1925ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் நாள் அன்று, தமது 73வது வயதில் இயற்கை எய்தினார். அவரது மறைவின் ஆறாத்துயரம், மக்களை அனலெனவாட்டியது.

இன்று தமிழகத்தில் ஏற்பட்டுள்ள உள்ளத்தெளிவுக்கும் உணர்ச்சி

வேகத்துக்கும் உரிமை வேட்கைக்கும், ஏன், பூத்துள்ள மறுமலர்ச்சிக்கும் வித்திட்டவர், விதை முளைக்கவும் தம் அறிவெனும் உரமிட்டு, உழைப்பெனும் நீர் ஊற்றியவர் அண்ணல் தியாகராயர் ஆவார்.

எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் தாழ்வுற்று வறுமை மிஞ்சிக் கிடந்த பிராமணர் அல்லாதாரின் தன்மான எழுச்சிக்காக சமுதாயத்தில் உரிய இடத்தைப் பெற்றுத் தகுதிபெறும் உரிமைக்காகப் போராடி, நீதிக்கட்சியின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட சமுகநலத் தொண்டர் சர். பிட்டி. தியாகராயர். சீரிய அரசியல் வாதியாகவும் புகழ்மிக்க சட்டசபை உறுப்பினராகவும் தேர்ந்த ஆட்சியாளராகவும் வர்த்தகத்தில் பெருமைபெற்ற திறங்கொண்ட தீரராகவும் வாழ்ந்துகாட்டிய வள்ளல் பெருந்தகை தியாகராயர்.

நவீன முறையில் நாட்டில் தொழில் வளர்ச்சி தழைத்திடவும் முக்கியப் பகுதிகளில் புதிய ரயில்பாதைகள் அமைந்திடவும் சென்னைத் துறைமுகம் மேலும் விரிவடைந்திடவும் இன்றுள்ள பக்கிங்காம் கால்வாய் போக்குவரத்திற்கு உகந்ததாய்ப் பயன்பட்டிடவும் தியாகராயர் பெரிதும் உழைத்திட்ட உத்தமர். 1914–1915 முதல் உலகப்போர் மூண்டிருந்த வேளையில், இறக்குமதித் தட்டுப் பாட்டைச் சமாளிக்க எவ்வாறு உற்பத்தியைப் பெருக்கலாமென்னும் உயரிய ஆலோசனைகளை வழங்கிய பொருளாதார நிபுணராகத் திகழ்ந்தவர். இந்தியக் கப்பல்துறை, கப்பல் கட்டும் பணியின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பல்வேறு வழி வகைகளைத் தெரிவித்து ஆக்கம் தேடியவர் தியாகராயர். தொழில்களின் வளர்ச்சிக்கு மின்சார உற்பத்திப் பெருக்கத்தின் அவசியத்தை வலியுறுத்தி யுள்ளார். தொழில் வளர்ச்சியிலும் தொழில்நுட்ப மேம்பாட்டிலும் அளவிலா ஆர்வம் கொண்டிருந்தார். வெறும் இலக்கிய அறிவையூட்டும் கல்வியைச் சாடினார். தொழில்நுட்ப அறிவை வளர்க்கும் கல்வியைப் புகட்ட வாதிட்டார். கலைகளையும் தொழில்களையும் வளப்படுத்தி நமது நாடு செல்வவளம் பெருக்கிட ஏற்ற கல்வியைப் புகுத்திட விழைந்தவர் தியாகராயர். நமது கல்வி முறையில் மாற்றம் ஏற்பட்டுத் தொழில் நுட்பக் கல்வி, தொடக்கப் பள்ளிகளிலும் இடைநிலைப் பள்ளிகளிலும் புகுத்தப்பட வேண்டுமென்று விரும்பினார். பல ஆண்டுக்காலம் சென்னை மகாஜன சபையின் தீவிர உறுப்பினராக இருந்து தேசிய நலப்பணிகளுக்கு ஊக்கமூட்டிய சீலர் தியாகராயர். 1885ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் உருவான போது அதை வரவேற்று வாழ்த்தினார்; சென்னையில் அதன் கூட்டங்களில் கலந்துகொண்டு ஆக்கம் தந்தார்.

### தியாகராயர் பறக்கவிட்ட புரட்சிக்கொடி

பேறிஞர் அண்ணா அவர்கள், செம்மல் தியாகராயரின் சமூகப் பணிகளில் பெரிதும் கவரப்பட்டதுடன் அவரது சீரிய முயற்சியால்தான் பிராமணர் அல்லாதார் தலைநிமிர்ந்து வாழ முடிகிறது என்ற கருத்தை வலியுறுத்தி வந்தார். 30.6.1950 அன்று திருவல்லிக்கேணியில் சர். பிட்டி. தியாகராயரின் நினைவு நாள் கூட்டத்தில்

உரையாற்றிய பேரறிஞர் அண்ணா, அவரின் உயரிய தன்மையைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்:

"சர் தியாகராயர் தோன்றி திராவிடப் பெருங்குடி மக்களுக்குத் தலைமை பூண்டு அவர்களின் தன்னுணர்விற்கு வழிகோலி, அவர்களின் வாழ்வில் இருந்து வந்த அடிமைத்தனத்தை அகற்றப் பாடுபட்டுச் சமுதாயத்துறை, பொருளாதாரத்துறை, அரசியல்துறை ஆகியவற்றில் நல்லிடம் பெற்றிட உழைத்தார். நம்முடைய அடிப்படைக் கட்டிடம் பலமாக இருக்க வேண்டும் என்றும் அவர் அல்லும் பகலும் பாடுபட்டார். இன்று நாம் வளர்ச்சி பெற்றிருப்பதற்கு மூலக் காரணம் யார்? நம் தியாகராயர். திராவிட இயக்கத்துக்குப் புத்துயிர் அளித்த பூமான் அவர்.

"நாமிருக்கும் நாடு நமதென்று அறியவேண்டும். இங்கு நாம் அடிமை களாக வாழ்வது அடாது என்பதை அவர் உணர்ந்தார். நமது பண்டைப் பெருமை களையும் அவரால் உணரமுடிந்தது. வாடிய பயிருக்கு வந்த மழைத்துளியோ அலுத்த உடல் மீது இனிய தென்றல்போல, கொல்லும் காசத்தைக் கருவறுக்கும் மருந்துபோல, அன்று தேய்ந்து வந்த திராவிடருக்கு ஆறுதல் அளித்து அவர்களின் புத்துயிர்களுக்குக் காரணமாகக் காட்சி தந்தார் நம் வீரர் தியாகராயர், அன்று தியாகராயர் திராவிட பெருங்குடி மக்கள் முன்னேற வேண்டுமென்று பாடுபட்டதின் பலனை இன்று காண்கின்றோம்.

"தியாகராயர் பெரிய செல்வந்தர், பணம் படைத்தவர் தியாகராயர் விரும்பினால் வியாபாரத்தின் மூலம் பல இலட்சம் ஈட்டியிருக்கலாம். ஆனால் அவர் அதனை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை.

> **"தொழில்நுட்ப மேம்பாட்டிலும் அளவிலா ஆர்வம் கொண்டிருந்தார். வெறும் இலக்கிய அறிவையூட்டும் கல்வியைச் சாடினார். தொழில்நுட்ப அறிவை வளர்க்கும் கல்வியைப் புகட்ட வாதிட்டார். கலைகளையும் தொழில்களையும் வளப்படுத்தி நமது நாடு செல்வவளம் பெருக்கிட ஏற்ற கல்வியைப் புகுத்திட விழைந்தவர் தியாகராயர்."**

"தியாகராயர் விரும்பியிருந்தால் சென்னையிலேயே பெரும்பாலான இடங்களை அவர் சொந்தமாக வாங்கியிருக்க இயலும். பணத்தின் மதிப்பு இன்றியிருப்பதைவிட அன்று பன்மடங்கு உயர்ந்திருந்தது. இன்றைய இலட்சம் அன்றைய ஆயிரம் ரூபாய்க்குச் சமமானது. அத்தகைய காலத்திலே பல இலட்சம் படைத்த அவர் நினைத்திருந்தால், சென்னை நகரையே தன் முதலீட்டுப் பணமாக ஆக்கியிருக்கலாம். அவர் கூப்பிட்ட நேரத்தில் பணியாற்ற பல ஆட்கள் அவரிடம் இருந்திருக்கக் கூடும். எத்தனையோ சீமான்கள், சிற்றரசர்கள், வியாபார வேந்தர்கள், ஜமீன்தார்கள் உண்டுகளித்து உல்லாச வாழ்வு வாழ்ந்து,

களியாட்டத்தில் காலத்தைக் கடத்திக் கொண்டு இன்பத்தை நுகர்ந்து கொண்டிருப்பதுபோல தியாகராயரும் இருந்திருக்க முடியும்.

"மேலும் தியாகராயர் விரும்பி யிருந்தால் பழைய கோயில்களைப் புதுப்பிக்கும் வேலையிலே ஈடுபட்டிருக் கலாம். அவர் விரும்பியிருந்தால் தெற்கிலுள்ள பழனியைப் போல வடக்கே ஒரு பழனியை உண்டாக்கியிருக்கலாம். இவைகளை ஏற்படுத்துவதற்கு உரிய பணம் அவரிடம் ஏராளமாக இருந்தது. அவர் இவைகளை யெல்லாம் பெரிதாக மதிக்கவில்லை. தன்னுடைய சமூகத் தொண்டைத்தான் ஒரு பொருட்டாக மதித்தார். திராவிட சமூகத்தில் ஒரு பெரிய விழிப்புணர்ச்சியை உண்டாக்கினார். அரசியலிலே நம்மவர்கள் முதலிடம் பெறவேண்டு மென்று அவர் விரும்பினார். தியாகராயர் போக போக்கியத்தை விட்டு தாமாகவே கல்லும் முள்ளும் காட்டாறும் கருங்குழியும் நிரம்பிய பாதை வழியே செல்லத் தொடங்கினார்.

"அவர் களத்திலே தூவிய விதை நன்றாக வளர்ந்திருக்கிறது. அவர் அன்று பறக்க விட்ட சமுதாயப் புரட்சிக் கொடியின் கீழ் நின்றுதான் நாம் இன்று பணியாற்றி வருகிறோம்".

**தியாகராயர் பற்றி தந்தை பெரியார்:**

வெள்ளுடை வேந்தர் சர். பிட்டி. தியாகராயர் மறைந்த பொழுது தந்தை பெரியார் அவர்கள் காங்கிரஸ் கட்சியில் இருந்தார்கள். காங்கிரஸ்காரரான பெரியார், மறைந்த நீதிக்கட்சித் தலைவரான சர் தியாகராயர் பற்றி குடியரசு முதல் இதழில் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்.

"பிராமணரல்லாதார் கூட்டத்தின் தலைவராக முதலில் விளங்கிவந்த ஸ்ரீமான் பி. தியாகராய செட்டியார் அவர்கள் 28.4.25 இரவு 9.45 மணிக்கு இம்மண்ணுலகை நீத்து விண்ணுல கெய்திய செய்தியைக் கேள்வியுற்று நாம் பெரிதும் வருந்துகிறோம். இச்செய்தி தமிழ் மக்கள் அனைவரையும் பெருந்துக்கத்தில் ஆழ்த்தும் என்பதில் ஐயமன்று. அவரது இடது கன்னத்தில் முளைத்த ஒரு சிறு கொப்புளமே அவரது ஆவியைக் கொள்ளைகொண்ட கூற்றுவன். என்னே மனிதர் தம் வாழ்நாளின் நிலை! அரசியல் உலகில் எமக்கும் அப்பெரியாருக்கும் உள்ள வேற்றுமை வட துருவம்; தென்துருவம் எனின் குன்றக் கூறுதலேயாகும். எனினும் அப்பெரியாரின் அருங்குணங்களையும் அளவில்லா தேசபக்தியையும் ஆற்றலையும் நாம் போற்றுகிறோம். ஒரு நாள் சென்னைக் கடற்கரையில் இவரது அரசியற் கொள்கைகளை வெகு தீவிரமாகக் கண்டித்துப் பேசின ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களை மறுநாள் காலையில் சென்னைத் தெருவில் சந்தித்தபோது ஸ்ரீமான் முதலியாரை விளித்து "நண்பனே! நேற்று கடற்கரையில் நீ என்னை வாய்மொழி களால் கண்டித்தது போதாது; உன் கையால் என்னைப் புடைத்திருத்தல் வேண்டும்" என்று ஸ்ரீமான் முதலியாரிடம் கூறினாராம். அரசியல் கொள்கையில் தம்மினும் வேறுபட்டாரிடம் இப்பெருந்த கையார்

"தொழில் வளர்ச்சியிலும் தொழில்நுட்ப மேம்பாட்டிலும் அளவிலா ஆர்வம் கொண்டிருந்தார். வெறும் இலக்கிய அறிவையூட்டும் கல்வியைச் சாடினார். தொழில்நுட்ப அறிவை வளர்க்கும் கல்வியைப் புகட்ட வாதிட்டார். கலைகளையும் தொழில்களையும் வளப்படுத்தி நமது நாடு செல்வவளம் பெருக்கிட ஏற்ற கல்வியைப் புகுத்திட விழைந்தவர் தியாகராயர்."

நடந்துகொண்ட பெருந்தன் மையைப் பாராட்டுகிறோம்.

சென்னை நகர பரிபாலன சபையில் நாற்பதாண்டுகள் அங்கத்தினராக அமர்ந்து இவர் ஆற்றிய அருந் தொண்டுகள் யாவராலும் மறக்கப் பாலதல்ல. தமது முதுமையிலும் உடல் வலி குன்றித் தளர்வெய்திய காலத்திலும் நகர மாந்தர் நலத்தையே மனத்துள் கொண்டு சென்னை நகர பரிபாலன சபையின் தலைமையேற்று உழைத்து வந்தமையே இதற்குத் தக்க சான்றாகும்.

நமது நாட்டுப் பண்டைக் கைத் தொழில்களை அபிவிருத்தி செய்வதில் மிக்க ஊக்கங்காட்டி வந்த பெரியார் அவர். தமிழ்நாட்டில் கைத்தறி நெசவுச் சங்கம் ஒன்று கண்டு அதில் முதல் முதலாக விசைத்தறியை உபயோகிக்க முயற்சி செய்தவராவார். நமது வாழ்நாள் முழுவதும் வைதீக நெறிபற்றியே வாழ்ந்து வந்தார் என்றும் ஆலயத் திருமணிகளில் ஆர்வமிக்குடையவராய் அரும்பொருள் உதவி வந்தனரென்றும் அவரையும் அவரது குடும்பத்தையும் அறிந்தோர் நமக்கறிவிக்கின்றனர்.

தமது இளவயதில் டாக்டர். நாயர் அவர்களின் கூட்டுறவு பெறும்வரையில் காங்கிரஸ் வாதியாகவே இருந்து தேசத்தொண்டு ஆற்றி வந்தார். நமது தமிழ்நாட்டுத் தவப் பேற்றின் குறைவினால் பிராமணரல்லாதார் கூட்டம் ஒன்று கண்டார்; இறக்கும் வரையில் அதன் தலைவராக விளங்கி வந்தார். அத்தகைய கூட்டம் ஒன்று காணாது காங்கிரஸ் வழிநின்று தேசத் தொண்டாற்றி வந்திருப்பாராயின் நமது நாட்டின் நிலைமை இன்று வேறு விதமாகத் தோன்றும் என்பது எமது கொள்கை. அதுகிடக்க, அவரது அரசியல் கொள்கைகளையும் முறைகளையும் ஆராய்ச்சி செய்வதற்காக நாம் இன்று முற்படவில்லை: அவைகளைக் கண்டித் தெழுதவும் கருதவில்லை.

அப்பெரியாரின் அரசியல் கொள்கைகள் எவ்விதமிருப்பினும் அவருடைய தேச பக்தியையும் அருங் குணங்களையும் உறங்கிக் கிடந்த பிராமணரல்லாதார்களை உயிர்ப்பிக்கச் செய்த பேராற்றலையும் நாம் போற்றி அப்பெரியாரைத் தமிழ்நாடு இழக்க நேர்ந்தமைக்குப் பெரிதும் வருந்துகிறோம்.

★ ★ ★

# பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள்



## இயற்கைச் செல்வம்

விரிந்த வானே, வெளியே, – எங்கும்
விளைந்த பொருளின் முதலே,
திரிந்த காற்றும், புனலும், – மண்ணும்,
செந்தீ யாவும் தந்தோய்,
தெரிந்த கதிரும் நிலவும் – பலவாச்
செறிந்த உலகின் வித்தே,
புரிந்த உன்றன் செயல்கள் – எல்லாம்
புதுமை! புதுமை! புதுமை!

அசைவைச் செய்தாய், ஆங்கே – ஒலியாம்
அலையைச் செய்தாய் நீயே!
நசையால் காணும் வண்ணம் – நிலமே
நான்காய் விரியச் செய்தாய்!
பசையாம் பொருள்கள் செய்தாய் – இயலாம்
பைந்தமிழ் பேசச் செய்தாய்!
இசையாம் தமிழைத் தந்தாய் – பறவை,
ஏந்திழை இனிமைக் குரலால்!

எல்லாம் அசையச் செய்தாய் – உயிர்கள்
எதினும் அசைவைச் சேர்த்தாய்.
சொல்லால் இசையால் இன்பம்–எமையே
துய்க்கச் செய்தாய்! அடடா!
கல்லா மயில், வான் கோழி, – புறவுகள்
காட்டும் சுவைசேர் அசைவால்
அல்லல் விலக்கும் "ஆடற்–கலை" தான்
அமையச் செய்தாய் வாழி!

## தமிழ் வளர்ச்சி

எளியநடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்.
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்.
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்.
எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்.

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்!
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்.
இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்.
எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்தோ மில்லை.
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்!

# தமிழகக் குறியீடுகளும்

## பண்டைய அயலகமும்

- முனைவர் இராசு. பவுன்துரை

பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும் மிகத் தொன்மையான பண்பாடுகளைக் கொண்ட சீனம், கிரேக்கம், எகிப்து போன்ற நாடுகளில் கண்டறியப்பட்ட குறியீடுகளும் ஜப்பான், கொரியா, இலங்கை ஆய்வுத் தரவுகளும் ஒன்றோடு ஒன்று ஒப்புமையுடைய வடிவங்களைப் பெற்றுள்ளன. இந்த ஒற்றுமைக் கூறுகளை எளிதாக ஒதுக்கி வைத்துவிடவும் இயலாது. எனவே பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும் எவ்வாறு பிற சமகாலத்துப் பண்பாட்டில் இடம் பெற்றுள்ள குறியீடுகளுடன் ஒத்துள்ளன என்பதைக் காண்போம்.

**எகிப்து**

கிரேக்கம், ரோம், மெசபடோமியா, சிந்துவெளி ஆகிய தொன்மையான நாகரிகங்களின் வாயிலாகப் பல்வேறு வகையான குறியீடுகளும் வரைவுகளும் கண்டறியப்பட்டுள்ளன. எகிப்து நாகரிகம் கி.மு. 3000 முதல் கி.மு. 100 வரையுள்ள காலத்தைச் சார்ந்ததாகும். எகிப்து நாட்டின் பண்டைய நினைவுச் சின்னங்களும் வரைவுகளும் குறியீடுகளின் வளர்நிலைக் கூறுகளைக் குறிப்பிடுகின்றன. மட்பாண்டங்களின் மீதும், பாண்டங்களின் உட்பகுதியிலும் குறியீடுகள் இடம் பெறுகின்றன. தமிழகத்தில் கிடைக்கப்பெற்றுள்ள பல குறியீடுகள் போன்று எகிப்தில் கண்டறியப்பட்டவற்றில் இடம் பெறுகின்றன.

எகிப்து நாட்டில் செங்கடல் கரையில் ரோமானியர் காலத்தில் பெரெனிகெ (Berenike) என்ற வரலாற்றுப் புகழ்பெற்ற துறைமுகம் இருந்தது. இத்துறைமுகம் கீழை நாடுகளில் தமிழகத்துடன் சாடி வணிகத்தொடர்பு கொண்டிருந்தது. 1995இல் நடந்த அகழாய்வின்போது ஒரு மதுச்சாடியில் தமிழ் எழுத்துள்ள வாசகம் கண்டறியப்பட்டது. ஐராவதம் மகாதேவன் அவர்கள் அந்த எழுத்துக்குரிய காலம் கி.பி. 60–70 எனக் கருதுகின்றார். அச்சாடியில் “கொற்றப் பூமான்” என்ற பெயர் எழுதப்பட்டுள்ளது. பூமான் என்பது அரசனைக் குறிக்கும் சொல்லாகும்.


எகிப்தில் பெரெனிகெ துறைமுகத்திற்கு வடக்கில் க்வெஸிர் அல்காதிம் (Quseir al-Qadim) என்ற பண்டைய ரோமானியத் துறைமுகத்தில் அகழாய்வு மேற்கொள்ளப் பட்டது. அப்பொழுது சாதன் (சாத்தான்), கணன் (கண்ணன்) என்று தமிழ்–பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்ட இரு பானைத் துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதே பெயர்கள் தமிழகத்து அரிக்கமேடு துறைமுகம் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களில் கண்டறியப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வெழுத்தைக் கி.பி. முதல் நூற்றாண்டினைச் சேர்ந்ததாக ஐராவதம் மகாதேவன் கருதுகின்றார்!

### கிரேக்கம்

பண்டைத் தமிழகத்துடன் தொடர்புடைய நாடுகளில் ஒன்று கிரேக்கம். கிரேக்கர்களின் பண்பாடு, சிறப்புகள் குறித்த வரலாறு, இலக்கியச் செய்திகள் தமிழகத்தில் கிடைக்கின்றன. கி.மு. 1 ஆம் நூற்றாண்டு முதல் தமிழருக்கும் கிரேக்கத்திற்கும் இடையே ஒரு நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது. கிரேக்க நாட்டில் ஒலிந்தஸ் (Olynthus) என்னும் இடத்தில் நிகழ்ந்த அகழாய்வுக் கண்டுபிடிப்புகளில் மட்பாண்ட வரைவுகளின் பொறிப்பு வடிவங்கள் பண்டைத் தமிழகத்துப் பெருங்கற்காலக் குறியீடுகளுடன் ஒப்புமையுள்ளனவாக அமைந்துள்ளன. சில குறியீடுகள் தமிழ்ப் பிராமி எழுத்துடன் ஒப்புமையுடையனவாகவும் தெரிகின்றன.

### சப்பான்

தமிழகத்தின் மொழி, உலோகத் தொழில்நுட்பம், துணி நெசவு, பௌத்தக் கட்டடக்கலை மரபு, வேளாண் மரபு ஆகியவற்றுடன் மிக நெருங்கிய தொடர்புடைய கீழ்த்திசை நாடாகத் திகழ்வது சப்பானாகும். கி.மு.500–கி.பி.200–ஆம் ஆண்டுகளில் யாமாட்டோ (Yamato) யாயோய் (Yayoi) பண்பாட்டின் வளர்ச்சி சப்பானிய நாட்டில் பல்வேறு புதிய தொடர்புகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் படைத்தளித்த



தமிழகக் குறியீடுகளும் அயலகக் குறியீடுகளும்

காலமாகத் திகழ்கின்றது. இதில் தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய கண்டுபிடிப்புகள் சப்பானிய யாயோய் பண்பாட்டுப் பொருட்களுடன் மிக நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்படுகின்றன என்று சுசுமு ஒனோ (Susumu Ohno) குறிப்பிடுகின்றார். இவரது தொடர்ச்சியான முயற்சியாலும் ஈடுபாட்டாலும் சப்பானியப் பண்பாடும் மொழியும் தென்னிந்திய ஆவணங்களின் வாயிலாக ஆராய்வது என்ற முயற்சி பல நல்ல விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகப் பெருங்கற்காலக் குறியீடுகளுக்கும் சப்பானிய யாயோய் காலத்து மட்பாண்டக் குறியீட்டு வரைவுகளுக்கும் இடையே தெளிவான வடிவ ஒற்றுமைகள் உண்டு என்பதைச் சப்பானின் வடக்குப் பகுதி கையுசு (Kyushu), கனினோகூமா (Kanenokuma), யோசினோகாரி (Yoshinogari), குபோய்ஜுமிமரு யாமா (Kuboizumi-maruyama) என்றழைக்கப்படும் இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்ட வரைவுகளின் வடிவங்கள் காட்டுகின்றன. ஒசாகா, நாரா, கையுக ஆகிய இடங்களில் கிடைத்துள்ள பெருங்கற்படைகளில் தமிழகத்தைப் போன்றுள்ள மரபு வெளிப்படுகின்றது. மட்பாண்டங்களின் வடிவமைப்பும் அவற்றின் மீது வரையப்பெற்ற வரைவுகளும் தமிழகக் கீறல் வரைவு, வண்ணப்பூச்சு வரைவு, குறியீடு ஆகியவற்றுடன் இணைந்து காணப்படுகின்றன. இத்தகைய ஒற்றுமைக் கூறுகள் முழுமையாக ஆராயப்படாமலேயே இருந்து வருகின்றன.



தமிழகக் குறியீடுகளுடன் ஒப்புமையுள்ள சீனக் குறியீடுகள்

தென்னிந்தியத் தொல்லியல் ஆய்வாளர் குருராஜராவ் 1991–இல் இப்பகுதியில் உள்ள மட்பாண்ட பண்பாட்டினையும் அவற்றின் மீதுள்ள வரைவுகளையும் பார்வையிட்டார். இவரது கருத்துப்படி தென்னிந்தியாவின் தாக்கம் சப்பான் வரை பரவியுள்ளதாகவும் அவை கடலோரப் பண்பாட்டுத் தொடர்புகளாலும் கொரியாவின் வழியாகவும் பெறப்பட்டதாகக் கருதுகின்றார். இவர் தமிழகப் பெருங்கற்கால வரைவுகள் சப்பானிய யாயோய் பண்பாட்டுத் தொடர்பில் நெருக்கமாக இருக்கின்றன என்று கருதுகின்றார். ஆயினும் கொரியத் தொடர்புகள் குறித்து எதுவும் இவர் குறிப்பிடவில்லை.

தமிழகப் பெருங்கற்காலத்து மட்பாண்டக் கீறல் வரைவுகள் பானை சுடுவதற்கு முன்பாகவும் பின்பாகவும் இடம்பெறுவது போலச் சப்பானிலும் இவ்விரண்டு வகைக் குறியீடுகளும் வரைவுகளும் காணப்படுகின்றன. சப்பானிய மொழியில் 'கிகோமன்' (Kigomon) என்ற சொல் கீறல்



தமிழகக் குறியீடுகளுடன் ஒப்புமையுள்ள சீனக் குறியீடுகள்

வரைவு என்பதைக் குறிப்பதாகும் சப்பானிய குடுவை, பானை பிற மட்பாண்டங்கள் அவற்றின் கழுத்து, வாய், முதுகுப் பகுதிகளில் கீறல் வரைவுகள் இடம்பெறுகின்றன. சப்பானியத் தொல்லியல் ஆய்வாளர்களின் கருத்துக்குப் புலப்படாத வரைவுளாகவும் பொருள் காண இயலாத புதிர்களாகவும் பல்வேறு வரைவுகளையும் குறியீடுகளையும் கொண்ட தரவுகள் கிடைத்துள்ளன எனக் கருதுகின்றார். ஆனால் தமிழகப் பெருங்கற்காலத்துக் குறியீடுகளின் வடிவத்தை ஒத்த வரைவுகளாகவும், வடிவங்களாகவும் உள்ளன என்பது ஆர்வத்தைத் தூண்டும் ஆய்வுக் களமாகின்றது.

இந்தியாவில் இரயில் பாதை அமைக்கும் பணியின்போது கண்டுபிடிக்கப்பட்ட மொகஞ்சதாரோ நாகரிகம் போல சப்பானில் கையுக (Kyushu) விரைவு நெடுஞ்சாலைப் பணியின் போது யமாட்டோமாச்சி என்ற பகுதியில் 1983–ஆம் ஆண்டு சுமார் 113–ஈமத் தாழிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. அந்த அகழாய்வுப் பகுதிக்கு ஹிகாசையாமதா இப்புன்சுகி (Higashiyamada Ipponsugi) என்று பெயர். இந்தப் பகுதியில் கிடைக்கப்பெற்ற அகழாய்வுப் பொருட்களிலிருந்து அவை யாயோய் (Yayoi) காலத்தைச் சார்ந்தவை என்று கருதுகின்றனர். ஹிகாசையாமதா ஈம மட்பாண்டக் குறியீடுகளின் வடிவம் சப்பானியப் பண்பாட்டில் புதிதாக இருப்பினும் அவை தமிழகத்துடன் மிகவும் நெருங்கிய பொதுவாகக் கிடைக்கக் கூடிய தொடர்புடைய குறியீடாகவுள்ளன. இக்குறியீடுகளை ஆய்வு செய்த ஃபூஜிதா என்ற சப்பானிய ஆய்வாளர் அவற்றைச் சமயச் சடங்குத் தொடர்புடையதாகவும் வேளாண் தொழில் தொடர்புடைய மக்களின் குறியீடாகவும் கருதுகின்றார்.

சுசுமு ஓனோ மட்பாண்டக் கீறல் வரைவுகளை இரண்டு வகைகளில் அமைக்கின்றார். அவை

1. வேட்டையும் வரைவுகளும்
2. வேளாண்மையும் வரைவுகளும்

என்பனவாகும். இவரது கருத்துப்படி இக்குறியீடுகள் உணவு சேகரிப்புக் காலத்தின் வேட்டையாடுதல் முறையைக் கொண்ட வேட்டைக் காலமும் வேட்டைக் காலச் சமூக அமைப்பும் என்பது முதல் வகையிலும் இரண்டாம் பிரிவில் ஒரு வேளாண் தொழில் முறையைப் பின்பற்றிய நாடோடிகள் இல்லாத சிறிய தொழில் நுட்பத்தால் பண்பட்ட மக்களின் சமூக அமைப்பும் கொண்ட காலமாகக் குறிப்பிடப்படுகின்றன. ஓனோவின் அணுகுமுறையில் கோட்டு வரைவுகள் பாம்பு வடிவத்தையும், கோடும், நுனியுமாகிய வட்டக் குறியீடுகள், இடியுடன் கூடிய மழையையும், நீரின் வளமையையும் குறிப்பதாகக் கருதுகின்றார். மட்பாண்டங்களில் இடம்பெறும் இவ்வகை வரைவுகள் வேட்டை, வேளாண் வளமை என்பன குறித்துக் குறியீடுகளாக உள்ளன.

ஒப்புமை வடிவங்கள் என்னும் நிலையில் தமிழகக் குறியீடுகளும் சப்பானியக் குறியீடுகளும் இணைத்துக் காணப்படுகின்றன. ஒப்புமைக் குறியீடுகள் வரைவுகளின் அமைப்பு முறைகளிடையே உள்ள இயல்பான காலத்தின் வெளிப்பாடா? அல்லது சமகால மக்களிடையே பல்வேறு பகுதிகளுக்குப் பரவிச் சென்ற மக்களின் மரபு சார்ந்த பண்பாட்டுப் பதிவுகளா? அல்லது பண்டைய சீன–திராவிட இனத்தின் பண்பாட்டுத் தொடர்பால் ஏற்பட்ட விளைவா? அல்லது கீழைப் பண்பாட்டின் பொதுக் கூறாகக் கொள்ளலாமா? என்னும் அடிப்படைக் கேள்விகள் எழுகின்றன.

**சீனம்**

பண்டைத் தமிழரின் பண்பாட்டில் கலந்திருக்கும் கீழைப் பண்பாடு எனும் சீனரும் மங்கோலியரும் தமிழக வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றனர். சங்க கால இலக்கியங்களும் அகழாய்வுத் தரவுகளும், வரலாற்று ஆவணங்களும் சீனத்திற்கும் தமிழகத்திற்கும் இடையே இருந்து தொன்மையை வெளிக்காட்டுகின்றன. சீனத்துப்பட்டும், ஜாடியும் பல்வேறு சூழல்களில் தமிழகத்தில் கிடைக்கின்றன. இரும்புக் காலத்தைச் சேர்ந்த பண்டைய சீனத்தின் பான்ஓ, பன்சான், மாசாங், லின்வான், லோங் சு போன்ற இடங்களில் நடந்த அகழாய்வுகளில் தமிழகப் பண்பாட்டினை ஒத்த மட்பாண்ட வரைவுகளும் குறியீடுகளும் கிடைத்துள்ளன. கொரியாவின் கயா நாட்டின் மட்பாண்டக் குறியீடுகளிலும் தமிழகத்துக் குறியீடுகளின் ஒற்றுமை காணமுடிகின்றது. கயா நாட்டு மட்பாண்டங்கள் தமிழகக் கடலோரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றைச் சீனத்து மட்பாண்டம் எனக் கருதும் போக்கு தமிழக ஆய்வாளர்களிடம் உள்ளது. தற்பொழுதுள்ள வியட்நாம் பகுதியில் ஒக்யோ, மேகங் சமவெளிப் பகுதிகளில் தமிழகத்தின் சங்ககாலப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனவே சீனத்தின் தொடர்பு என்பது பண்டைய சீனத்திலிருந்த பல்வேறு சிறுசிறு பண்பாட்டுப் பகுதிகளின் வரலாற்றுச் சிறப்புடைய அகழாய்வுக் கண்டுபிடிப்புகளில் தமிழகத்தின் குறியீடுகளைப் போன்று கிடைக்கின்றன என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**சுமேரியர்**

சிந்து சமவெளி முத்திரைக் குறியீடுகளை முதன்முதலில் ஆய்வு செய்தவர் எல்.ஏ.வேடல் (1925) என்பவராவார். இவரது ஆய்வில் சிந்துவெளிக் குறியீடுகளைச் சுமேரியரின்

பண்டைய எழுத்துகளுடன் ஒப்பிட்டுக் காணலாம் எனக் கருதினார். இவரது ஆய்வுகளை மேலாய்வு செய்தவர்கள் அவ்விரு பண்பாட்டிலும் இனம் காணப்பட்ட குறியீடுகளின் ஒப்புமைக் கூறுகள் என்பது இரண்டு விழுக்காடு அளவினதேயாகும் எனக் கருதுகின்றனர். ஆனால் தமிழகத்தில் கண்டறியப்பட்ட பண்டைய குறியீடுகளும் சுமேரியர், சுமேரியன்–அக்கேடியன், மைசீனியன் குறியீடுகளுடன் மிகுதியான ஒப்புமைக் கூறுகளுடன் உள்ளன என்பது புலனாகின்றது. சுமேரியன், அக்கேடியன், ஹிட்டைட் ஆகிய மூன்று தொன்மையான மொழி, எழுத்து மரபுகளுடன் தமிழகக் குறியீடுகளின் வடிவங்கள் பெரிதும் ஒப்புமையுள்ளனவாகவும் இருக்கின்றன. எனவே, பழந்திராவிடம் அல்லது தமிழ்ப் பண்பாடு பண்டைய மேலைப் பண்பாட்டுடன் இணையான வரலாற்றுச் சிறப்பையும் பண்பாட்டு ஆற்றல் சிந்தனைகளையும் பெற்றிருந்தது எனக் கருதத் தமிழகக் குறியீடுகளின் தொன்மையும் வடிவ ஒப்புமைகளும் உதவுகின்றன.

பண்டைய அயலகக் குறியீடுகளைத் தொகுத்துக் காணும்பொழுது தமிழகத்தில் கண்டறியப்பட்ட வரைவுகளும் குறியீடுகளும் ஒப்புமைக்குரியனவாக அமைந்துள்ளன என்பது தெளிவாகின்றது. தொன்மைக் காலச் சமுதாயத்தில் அம்மக்களால் பயன்படுத்தி வந்த வரைவுகளும் குறியீடுகளும் இடம், காலம், சூழல் ஆகிய மூன்றின் அடிப் படையிலும் நம்பிக்கை, சடங்கு, வழிபாடு ஆகிய தொன்மச் சிந்தனைகளின் அடிப் படையிலும் இடம்பெறுகின்றன. ஆயினும் தொல்லியல் ஆய்வுப் பொருட்கள் அவை உணர்த்தும் பொருட்சார் பண்பாடும் மற்றும் கணிதம் சார்ந்த அறிவியலும் இயற்கை சார்ந்த தொன்மங்களும் அக்கால மக்களின் அறிவியல் சார்ந்த தகவல் தொடர்பு குறியீடுகளாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பதை ஒரு பொதுமைக் கூறாகவும் கருதலாம். கிரேக்கம், எகிப்து, சுமேரியா, சீனம், சிந்து ஆகிய தொன்மைக் காலப் பண்பாட்டின் வெளிப்பாடுகள் ஏதேனும் ஒரு மரபு சார்ந்த தொடர்பினை ஒன்றுக்கொன்று பெற்றும் அவற்றைத் தொடர்ந்து பின்பற்றியும் வந்துள்ளன என்பதும் புலனாகின்றது. அத்தகைய பண்பாட்டினை அறிவதற்கும் உணருவதற்கும் பண்டைய தமிழகக் குறியீடுகள் துணை செய்பவையாக அமைகின்றன. மேலை, கீழைப் பண்பாடுகள் பண்டைய தமிழரின் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடைய மொழி, வரலாற்றுச் சான்றுகளாகத் தமிழகத்தின் பண்டைய வரைவுகளும் குறியீடுகளும் அமைகின்றன. அக்குறியீடுகள் மொழியின் தோற்றம், வளர்ச்சியுடனும் கலை வரலாற்றுடனும் இணைந்து வரும் தொல் அறிவியலாக வெளிப்படுகின்றன. உலகத்தின் பழமையான மொழிகளில் தமிழ் மொழி ஒரு தனிப்பெரும் செம்மொழியாகத் திகழ்ந்திருந்ததைப் பண்டைய தமிழகக் குறியீடுகள் உறுதி செய்கின்றன. எனவே தமிழகக் குறியீடுகளும் அயலகக் குறியீடுகளும் உயர் தனிச் செம்மொழியாம் தமிழின் வரலாற்றை அறிய உதவும் ஆவணங்களாக அமைகின்றன.

– உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட 'பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும்' நூலிலிருந்து....

* * *

# கிருமி வேடன் லூயி பாஸ்டேர்

**சு**மார் எழுது ஆண்டுகளுக்கு முன், பிரான்ஸ் நாட்டிலுள்ள சில கால்நடைப் பண்ணைகளில் பெரிய கலவரம் ஏற்பட்டது. சில ஆண்டுகளாக, ஆந்திராக்ஸ் என்னும் கொடிய நோயால் அந்நாட்டிலுள்ள ஆடு, மாடுகள் ஏராளமாக மாண்டு வந்தன. அனுபவம் முதிர்ந்த மருத்துவர்கள் அந்நோயைத் தடுக்கவும், குணப்படுத்தவும், மிக முயன்றும் பயன் இல்லை. பண்ணைக்காரர்களும் பிரான்ஸ் நாடும் அடைந்த சேதத்துக்குக் கணக்கே இல்லை.

அந்த நிலையில் லூயி பாஸ்டேர் அந்நோய்க்குச் சிகிச்சை முறையைத் தேடத் தொடங்கினார். அவர் இரசாயனத் துறையில் மிக்க தேர்ச்சி பெற்ற விஞ்ஞானி, பட்டுப் பூச்சிகளின் நோய் ஒன்றைத் தீர்த்து வைத்த அறிவாளி. தமது வாழ்க்கையில் பல துயரங்களை அவர் அனுபவித்திருந்தபடியால், அவருடைய மனமானது பிறருடைய துயரத்தைக் கண்டு இரங்கிற்று. அவர் ஆந்திராக்ஸ் நோயை ஆராயத் தொடங்கியது 1877ஆம் ஆண்டில்.

ஆந்திராக்ஸ் நோயானது பிராணிகளின் மண்ணீரலைப் பற்றும், பின்பு காய்ச்சலாகத் தோன்றும். ஒட்டுவார் ஒட்டியாகப் பரவி, பல்லாயிரக்கணக்கான ஆடு, மாடுகளை வதைக்கும். இப்படிப்பட்ட அதன் போக்கும் தன்மையும் பல வருடங்களுக்கு முன்பே தெரிந்திருந்தன.

1839ஆம் ஆண்டில் ஆந்திராக்ஸ் நோயால் இறந்த பிராணிகளின் இரத்தத்தை மைக்கிரோஸ்க்கோப்பின் மூலமாகச் சோதித்து, அதன் நோய் வித்துக்கள் சிலவற்றைக் கண்டார்கள். பின்னர், டவெய்ன் என்பவர் அவற்றை இன்னும் நுணுகி ஆராய்ந்து. ஆந்திராக்ஸ் நோயை விளைவிக்கும் உயிருள்ள நோய் வித்துக்களை 1863ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார். அதன் பின்பு, 1876ஆம் ஆண்டில் ஜெர்மனி நாட்டினரான காஹ் என்பவர் நோயுற்ற பிராணிகளின் உடலிலே காணப்படும் நோய் வித்துக்களை வெளியே எடுத்து. திரவமான போஷணைப் பொருளிலே வளர்த்து வந்தார். பின்பு அவற்றைச் சுண்டெலிகளின் உடலிலும், முயல்களின் உடலிலும் புகுத்தி, அப்பிராணிகள் நோயுறக் கண்டார். இவற்றைத் தவிர, இங்கிலாந்து நாட்டினராகிய ஜென்னெர் அம்மை குத்துவதால் வைசூரி நோயை அணுகவொட்டாமல் தடுக்கலாம் என்று 1796ஆம் ஆண்டில் கண்டுபிடித்திருந்தார். இச்செய்திகள் அனைத்தையும் பாஸ்ட்டேர் அறிந்திருந்தார். வைசூரியைத் தடுப்பதைப் போலவே, பிற ஒட்டுவாரொட்டி நோய்களையும் அம்மை குத்தித் தடுக்கக் கூடும் என்று பாஸ்ட்டேர் எண்ணினார்.

அவர் ஆராய்ச்சிகளைச் செய்து வரும்போது, தற்செயலாக நிகழ்ந்த

சம்பவம் ஒன்று அவருக்குத் துணை செய்தது. இதைக் குருட்டு அதிர்ஷ்டம் என்று சொல்வது பொருந்தாது. ஏற்கெனவே பாஸ்ட்டேர் பட்டுப்பூச்சி நோயின் தன்மைகளைப் பற்றியும், வைசூரியைப் பற்றியும், ஆந்திராக்ஸைப் பற்றியும், நுணுகி ஆராய்ந்து வந்திருந்தார். அத்துறையிலே பிறர் செய்துவந்த ஆராய்ச்சிகளைப் படித்துத் தெரிந்து கொண்டிருந்தார். அற்புதச் சக்திகள் வாய்ந்த தம்முடைய மனத்திலே அவற்றைப் பற்றி இடைவிடாமல் சிந்தித்து வந்தார். மேலும் இவ்வகையான ஆராய்ச்சிகளின் ஒவ்வொரு படியிலும் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியைப் பற்றியும், காணும் தோற்றங்களைப் பற்றியும். "இது என்ன ? ஏன் இப்படி நடக்கிறது ? ஏன் இது இவ்வாறு தோன்றுகிறது ? இது எவ்வாறு முடியப் போகிறது ?" என்றெல்லாம் ஆழ்ந்து ஆலோசனை செய்து வந்திருந்தார். ஆதலால் மனம் அறிவு நிரம்பியும் விழிப்பு மிக உடையதாயும், இருந்தது. ஆதலால் தான், ஏதோ ஒரு சமயம் தற்செயலாக நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியின் தன்மையை உடனே காணவும் அதைத் தம்முடைய காரியத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளவும், அவரால் முடிந்தது.

அந்தக் காலத்தில் மற்றோர் ஆராய்ச்சியிலும் அவர் ஈடுபட்டிருந்தார். கோழிக் குஞ்சுகளுக்கு ஒரு வகை வாந்திபேதி கண்டு, அவை ஆயிரக்கணக்காக மாண்டு வந்தன. அந்த நோயை உண்டாக்கும் நோய் வித்துக்களைப் பாஸ்ட்டேர் கோழிகளின் உடலிலிருந்து வெளியே எடுத்து,



சோதனைச்சாலையில் தக்க திரவங்களில் வளர்த்து வந்தார். ஒருமுறை அந்நோய் வித்துக்களைச் சில நாள் வரை உபயோகப்படுத்தாமல் வைத்திருக்க நேர்ந்தது. பின்பு, அவர் அந்த நோய் வித்துக்களைக் கொண்டு ஒரு கோழிக் குஞ்சை நோயுறச் செய்ய முயன்றபோது. அக்குஞ்சு வழக்கம் போல் பலமாக நோயுறவில்லை. அதன் உடல் நிலை இரண்டு நாள் ஏதோ ஒரு மாதிரியாக இருந்தது. பின்பு, அது சாகாமல், பழையபடி ஆரோக்கிய நிலையை அடைந்து விட்டது. இதுதான் தற்செயலாக நிகழ்ந்த நிகழ்ச்சி.

இதிலிருந்து பாஸ்ட்டேர் மேன்மேலும் சோதனைகளை நடத்திப் பார்த்ததில், கொடிய சக்தி வாய்ந்த விஷ நோய் வித்துக்களைச் சிலகாலம் வைத்திருந்தால், அவை தாமாகவே பலம் குன்றிப்போகின்றன என்றும், அப்படிப் பலம் குன்றிய நோய் வித்துக்களால் நோயுண்ட பிராணி பெறும் நோய் கடுமையாகத் தோன்றுவதில்லை என்றும், அவர் கண்டார். இவற்றைத் தவிர, மிக விந்தையான மற்றொன்றையும் கண்டார். அந்தப் பிராணியை, அதன் பின்பு, இவ்வகையைச் சார்ந்த எத்துணை கொடிய விஷக் கிருமியால் நோயுறச் செய்ய முயன்றாலும், அது நோயுறுவதில்லை என்றும், முதலில் சிறிதளவே அதைத் துன்புறுத்தி விட்டு, இலேசாக விலகிய நோய். அதற்கு ஓர் இரட்சையாக, பாதுகாப்பாக, அமைகிறது என்றும் அவர் தெரிந்து கொண்டார்.

ஆந்திராக்ஸ் நோய் பற்றும்போதும் இவ்வாறுதான் நேரவேண்டும் என்று, அவர்

1881ஆம் ஆண்டு. மே மாதத்தில் ஒரு முடிவு கொண்டார். பின்பு, இந்த விவரத்தை உலகத்தார் அறிந்து, ஒப்புக் கொண்டு, பின்பற்றுவதற்கான முயற்சியைத் தொடங்கினார்.

''ஒரு கால்நடைப் பண்ணையில் ஐம்பது ஆடுகளை வேறாகப் பிரித்து, அவற்றுள் இருபத்தைந்து ஆடுகளுக்கு மட்டும் பலம் குறைந்த ஆந்திராக்ஸ் விஷக்கிருமிகளைப் புகுத்தி, முதலில் இலேசாக நோயுற்றுப் பாதுகாப்புப் பெறச் செய்து. பின்பு அந்த ஐம்பது ஆடுகளின் உடலிலும், ஒன்று போல, பலம் மிகுந்த விஷக் கிருமிகளைப் புகுத்தினால், பாதுகாப்பு அளிக்கப்பெற்ற இருபத்தைந்து ஆடுகளும் சாகாமல் பிழைத்து விடும். மற்ற இருபத்தைந்தும் சாவது உறுதி. இதை நிரூபிக்க முடியும்'' என்று அவர் கூறினார்.

இதைச் சோதிக்கும் பொருட்டு, மேலூன் நகரத்துக்கு அருகில் புவாய் லி–ல–போர்ட் என்னும் இடத்திலுள்ள கால்நடைப் பண்ணையில் 1881ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் தேதி ஒரு கூட்டம் கூடிற்று. பாஸ்ட்டேரும் அவருடைய சீடர்களும் ஒரு புறம்: குடியானவர்களும். கால்நடைப் பண்ணைக்காரர்களும் மிருக மருத்துவர்களும் மற்றொரு புறம்: இப்பகுதியினர் பாஸ்ட்டேர் கூறிய விவரங்களில் நம்பிக்கை இல்லாதவர்கள். அவர் நடத்தப்போகும் சோதனையைப் பற்றி அவர்கள் பலவாறாகக் கேலி செய்து. ஏளனமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அன்று அந்தப் பண்ணையில் ஆரோக்கியமுள்ள ஐம்பது ஆடுகளைப் பொறுக்கி, அவற்றை இரண்டு பகுதிகளாகப் பிரித்தார்கள். ஒரு பகுதியில் மட்டிலுமுள்ள இருபத்தைந்து ஆடுகளின் உடலில் ஆந்திராக்ஸ் நோயின் பலவீனமான விஷக் கிருமிகள் செலுத்தப்பட்டன.

பன்னிரண்டு நாட்கள் சென்றன. மே மாதம் 17ஆம் தேதியன்று பார்த்தபோது, அந்த ஐம்பது ஆடுகளும் சௌக்கியமாகவே இருந்தன. ஏற்கெனவே, மிகவும் பலவீனமான விஷக் கிருமிகளுக்கு உள்ளாக்கப்பட்ட இருபத்தைந்து ஆடுகளின் உடலில் அன்று, மீண்டும் ஒருமுறை, முன்னிலும் சற்றே பலம் மிகுந்த விஷக் கிருமிகள் புகுத்தப்பட்டன. முதலிலேயே இவ்வளவு பலமுள்ள விஷக் கிருமிகளைப் புகுத்தியிருந்தால், அந்த ஆடுகளில் பேர் பாதியாவது நிச்சயமாக நோய்வாய்ப்பட்டு இறந்திருக்கும். ஆனால், ஏற்கெனவே அவை பலவீனமான நோய்க் கிருமிகளைப் பெற்றிருந்தபடியால், அவற்றுள் ஒன்றாவது பலமாக நோயுறவில்லை. இரண்டாவது முறையும் அவை இலேசாக மாளாமல் இருக்கக் கண்ட மக்கள் வியப்போடு பேசிக் கொண்டார்கள். கடைசி வரையில் எல்லாம் நன்றாக முடியவேண்டுமே என்ற கவலை பாஸ்ட்டேருடைய சீடர்களுக்கும் வீட்டிலுள்ளோருக்கும், இருந்தது. ஆனால் அவருக்கு மட்டும் சந்தேகமே இல்லை.

மே மாதம் 31ஆம் தேதியன்று, கடைசி சோதனை. அன்று மிகப் பெரிய கூட்டம் கூடி விட்டது. ''இவர் செய்வதில் ஏதோ ஏமாற்றம் இருக்கிறது. விஷக் கிருமிகள் கொண்ட திரவத்தில் மேலே தெளிந்த நீர் இருக்கக்கூடும். அந்தத் தெளிவில் விஷக் கிருமிகள் குறைவாக இருக்கும். அடிப்பகுதியில் விஷக் கிருமிகள் அதிகமாக இருக்கும். மேலுள்ள, விஷம் குறைந்த பகுதியைப் பாதுகாப்புப் பெற்ற ஆடுகளுக்கும், கீழுள்ள



விஷம் மிகுந்த பகுதியை அம்மை குத்தாத ஆடுகளுக்கும், அவர் உபயோகித்து, நம்மை ஏமாற்றி விடக்கூடும்'' என்று சிலர் கூறினார்கள். ''நோய்க் கிருமிகள் கொண்ட திரவத்தை உபயோகிக்கு முன்பு, அதை நன்றாகக் குலுக்க வேண்டும். மேலும் கீழும் உள்ள திரவம் ஒன்றாகக் கலந்த பின்பே உபயோகிக்க வேண்டும்'' என்று சிலர் வற்புறுத்தினார்கள். ''இந்தத் தடவை நோய்க் கிருமிகளைப் புகுத்தும்போது, பாதுகாப்பு அளிக்கப் பெற்ற ஆடும், பாதுகாப்பு அளிக்கப் பெறாத ஆடுமாக, மாறிமாறிக் குத்திக் கொண்டே போக வேண்டும்'' என்று சிலர் நிபந்தனைகளை இட்டார்கள். எல்லா நிபந்தனைகளுக்கும் அவர் உடன்பட்டார். அன்று, அங்குள்ள ஐம்பது ஆடுகளின் உடலிலும் மிகவும் பலமுள்ள ஆந்திராக்ஸ் நோய்க் கிருமிகள் புகுத்தப்பட்டன.

இரண்டு நாட்கள் சென்றன. ஜூன் மாதம் 2ஆம் தேதியன்று, அங்கு பலர் முன்னதாகவே ஆவலோடு வந்து கூடினார்கள். அவர்கள் கண்ட காட்சி அவர்களைத் திகைக்கச் செய்தது. பாதுகாப்பு அளிக்கப் பெறாத இருபத்தைந்து ஆடுகளில் இருபத்திரண்டு செத்துக் கிடந்தன: வேறு இரண்டு சாகும் தருவாயில் இருந்தன. மற்றொன்றுக்கு அப்பொழுது காய்ச்சல் வந்து கொண்டிருந்தது.

பாதுகாப்புப் பெற்ற ஆடுகள் யாவும் சௌக்கியமாகவே இருந்தன. அவற்றுள் ஒன்றாவது நோயுறவில்லை. அப்போது பாஸ்ட்டேர் அங்கே வந்தார். அவரைக் கண்டதும் அவர்கள் அனைவரும் மிக்க மகிழ்ச்சியோடு ஆரவாரம் செய்தார்கள்.

அன்று முதல் அவர் கண்டுபிடித்த அம்மை குத்தும் முறை வளர்ச்சியடைந்து. உலகெங்கும் கையாளப்பட்டு வருகிறது. அந்த ஆராய்ச்சி வெற்றி பெற்றது. ஆனால் பாஸ்ட்டேரின் ஆராய்ச்சிகள் அதோடு நிற்கவில்லை.

மனிதரைத் துன்புறுத்தும் மிகக் கொடிய நோய்களுள் வெறிபிடித்த நாய்க்கடியால் ஏற்படும் நோய் ஒன்று. அப்படிக் கடியுண்டவன், சில நாட்களில் (அதை இத்தனை நாட்களென்று இறுதியாகக் கூறமுடியாது) நோயுற்று, பலவகைத் துன்பங்களுக்கு உள்ளாகி, பரிதாபமாக மாளுவான். அவனுக்குத் தண்ணீர் வேட்கை இருந்து கொண்டேயிருக்கும். ஆனால் தண்ணீரைக் குடிக்க முடியாது. அதைக் கண்டாலே, உடலில் ஒரு விறைப்பு உண்டாகும். அதனால் இந்த நோய்க்கு ஆங்கிலத்தில் ஹைட்ரோஃபோபியா (தண்ணீர் அச்சம்) என்ற ஒரு பெயர் உண்டு. ரேபீயீஸ் என்பதும் இதற்கு மற்றொரு பெயர். இந்த நோய்க்கு வெகு

காலமாகச் சிகிச்சை முறையே தெரியாதிருந்தது. அந்தக் காலத்தில் அதற்கு செய்த முரட்டு சிகிச்சை முறை கடிவாய் ஒவ்வொன்றிலும் பழுக்கக் காய்ச்சிய இரும்புச் சலாகையைச் செருகி, அந்தப் புண்ணைத் தீய்ப்பதைத் தவிர, வேறில்லை. நோயால் இறந்தவர் சிலரும், இந்தக் கொடிய சிகிச்சை முறையால் இறந்தவர் சிலருமாக, இறந்தோரின் தொகை மிகுதியாகவே இருந்தது.

சென்ற நூற்றாண்டில், பிரான்ஸ் நாட்டில் இரசாயனத் துறையில் சிறந்த விஞ்ஞானியாக விளங்கியவர்களுள் லூயி பாஸ்ட்டேரும் ஒருவர். ஆனால் அவர் இரசாயனியாய் இருப்பத்தோடு மட்டும் அமையாது. நோய்க் கிருமிகள் சிலவற்றின் தன்மைகளையும் நுணுகி ஆராய்ந்து வந்தார். அப்படி ஆராய வேண்டிய சூழ்நிலையில் அவர் அகப்பட்டுக் கொண்டார். நாய்க்கடி நோய்க்கு ஒரு சிகிச்சை முறை தேட வேண்டும் என்னும் அவா அவருக்கு உண்டாயிற்று. அவர் இத்துறையில் இறங்குவதற்கு முன்பு. இதில் வேறு பலர் ஆராய்ச்சிகளை நடத்தி வந்த போதிலும், அவர்கள் யாதொரு வெற்றியும் பெறவில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. நோயை விளைவிக்கும் நோய் வித்து ஒருவருடைய கண்ணிலும் அகப்படாதது ஒரு காரணம். கடியுண்ட பின்பு எவ்வளவு காலத்துக்குப் பிறகு நோய்க் குறிகள் தோன்றும் என்பதற்கு யாதொரு வரையறையும் இல்லாதது மற்றொரு காரணம். நோய்வாய்ப்பட்டவர்கள் பிழைப்பதே இல்லையாதலால், அந்த நோயைக் கண்டு அஞ்சி, அறிஞர்களும் ஒதுங்கியது இன்னும் ஒரு காரணம். இந்த நோயைப் பாஸ்ட்டேர் முறையாக ஆராயத் தொடங்கினார்.

முதல் முதலாக, வெறி பிடித்த நாயின் உடலில் எந்தப் பகுதியிலே நோய்க் கிருமிகள் அதிகமாகக் காணப்படுகின்றன என்பதை அறிய முயன்றார். நாயின் கடியாலே இந்த நோய் பரவுவதால், நாயின் வாயிலுள்ள உமிழ் நீரே இக்கிருமிகளின் பிறப்பிடம் என்று பலர் கூறி வந்தார்கள். மேற்கொண்ட ஆராய்ச்சி பயன் பெறவேண்டுமாயின். முதலில் இதை உறுதியாகத் தெரிந்து கொள்வது அவசியம் அல்லவா ? பல சோதனைகளை நிகழ்த்திய பின்பு. நாயின் மூளைக்கும் முதுகில் உள்ள நடு நரம்புக்கும் இடையே இருக்கும் முகுளம் எனப்படும் பகுதியில்தான் நோய்க் கிருமிகள் அதிகமாகக் காணப்படுகின்றன என்பதை அவர் கண்டுபிடித்தார். வெறிபிடித்த நாயின் உமிழ்நீரை மற்றொரு நாயின் உடலில் புகுத்தியபோது. பலகால் நோய் தோன்றிய போதிலும், சில வேளைகளில் தோன்றவில்லை. ஆனால், முகுளப் பிரதேசத்திலிருந்து திரவத்தை எடுத்துப் புகுத்தினால், பெரும்பாலும் தவறாமல், நோய் தோன்றிற்று. உமிழ்நீரைப் புகுத்தினால் அந்த அளவுக்கு நோய் தோன்றவில்லை. இவற்றை எல்லாம் பாஸ்ட்டேர் சோதனைகளால் தெரிந்து கொண்டார்.

அதன் பின்பு, அவர் நாய்களின் உடலிலும், முயல்களின் உடல்களிலும், கணக்கற்ற சோதனைகளை நிகழ்த்திப் பார்த்தார். நோய்க் கிருமிகளைப் பெற்ற முயல்கள் நோயுற்று, படிப்படியாக மேன்மேலும் நோய்வாய்ப்பட்டன. ஆறாவது நாளில் மிகவும் மும்முரமான நோய்க் குறிகள் தோன்றுவதைக் கண்டார். அப்போது அவற்றின் உடலிலிருந்து எடுத்த நோய்க் கிருமிகள் மிகவும் பலமுள்ளவையாகவும், தவறாமல் உயிர்ச் சேதம் விளைவிக்க வல்லவையாகவும் இருப்பதை அவர் நன்கு அறிந்து கொண்டார்.

கோழிகளைத் துன்புறுத்தும் வாந்தி பேதியின் நோய்க் கிருமிகளைப் போலவும், ஆடு, மாடுகளைத் துன்புறுத்தும் ஆந்திராக்ஸின் நோய்க் கிருமிகளைப் போலவும், ரேபியீஸின் நோய் வித்துக்களும், இரண்டு வாரம் வைத்திருந்தால், தாமாகவே பலம் குன்றிப் போகக் கண்டார். இந்த அறிவைப் பயன்படுத்தி, மிகவும் பலம் குறைந்த நோய்க் கிருமிகள் முதல், படிப்படியாக உயர்ந்து பலம் மிகுந்த நோய்க் கிருமிகள் வரை சேகரித்து வைத்தார். அவற்றை நாய்களின் உடலில் புகுத்தி, சோதனைகளைச் செய்தார். மிகவும் பலம் குறைந்த கிருமிகளிலிருந்து தொடங்கி, மிகவும் பலம் மிகுந்த கிருமிகள் வரை, கொஞ்சம் கொஞ்சமாக, ஒரு நாயின் உடலிலே, படிப்படியாக அவற்றைச் செலுத்திக் கொண்டே போனால், அந்தச் சிகிச்சை முறை முடிவடைந்ததும், அந்த நாய் ஒரு வகையான பாதுகாப்பைப் பெற்றுவிடுகிறது என்பதும், அதன் பின்பு வெறிபிடித்த நாயின் விஷக் கிருமிகளால் அது நோயுறுவதில்லை என்பதும், தெரியவந்தன.

பின்பு, வேறு சில ஆராய்ச்சிகளை நிகழ்த்திப் பார்த்ததில், வெறிபிடித்த நாயால் கடிக்கப்படுவதற்கு முன்னால் தொடங்காமல், கடிக்கப்பட்ட பின்பே ஒரு நாய்க்கு இந்தப் பாதுகாப்பு முறையைத் தொடங்கினாலும் கூட, அப்பொழுதும் அவ்வாறு படிப்படியாக விஷக் கிருமிகளைப் பெற்ற நாய் நோயுறாமல் காக்கப்படுகிறது என்பதும் தெளிவாயிற்று. இவ்வகைச் சோதனைகளை மீண்டும் மீண்டும், சில ஆண்டுக் காலமாக, அவர் நிகழ்த்திப் பார்த்தார். ஒவ்வொரு தடவையிலும், வெறிபிடித்த நாயால் கடியுண்ட நாய்களில், மேற்கூறியவாறு பாதுகாப்பு அளிக்கப்பெற்ற நாய் பிழைப்பதையும், பாதுகாப்பு அளிக்கப் பெறாத நாய் இறப்பதையும் கண்டார். ஆயினும், இந்த முறையை மனிதரின் மீது உபயோகித்துப் பார்க்க அவருக்கு அச்சமாயிருந்தது. பிராணிகளின் மீது நல்ல பயனுள்ளவையாகக் காணப்பட்ட சிகிச்சை முறை மனிதனுக்கு என்ன செய்யும் என்பதை உறுதியாக முன்கூட்டிச் சொல்வதற்கில்லை. ஆனால் எதிர்பாராத விதமாக அவருக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

ஜெர்மனி நாட்டுக்கும் பிரான்ஸ் நாட்டுக்கும் இடையே உள்ள அல்ஸாஸ் என்னும் பிரதேசத்திலுள்ள ஜோஸஃப் மைஸ்ட்டர் என்னும் ஒன்பது வயதுச் சிறுவன் ஒருவன் வெறிபிடித்த நாயால் பதினான்கு இடங்களில் கடியுண்டான். அவனைக் கடித்த நாய் அன்றே தன்னுடைய எஜமானனையும் கடித்தது. அவன் அதைச் சுட்டுக் கொன்றான். அதன் உடலைச் சோதித்துப் பார்த்ததில், அதற்கு ரேபியீஸ் நோய் கண்டிருந்தது என்பது உறுதியாயிற்று. அந்தச் சிறுவனுடைய தாய் தன் மகன் சாவது உறுதி என்று எண்ணி, அளவில்லாத் துன்பம் அடைந்தாள்.

அப்பொழுது யாரோ ஒருவர் பாஸ்ட்டேரின் சோதனைகளைப் பற்றி அவளிடம் சொல்லவே, அவள் அவனையும் அழைத்துக் கொண்டு, உடனே பாரிஸ் நகரத்துக்கு வந்தாள். காயத்தினாலும், பயத்தாலும், தளர்ச்சியுற்ற அச் சிறுவனால் நடக்கக் கூட முடியவில்லை. அவனுடைய இரங்கத்தக்க நிலையைக் கண்ட பாஸ்ட்டேர் மனம் இளகி, அவனுக்குச் சிகிச்சை அளிப்பது தம்முடைய கடமை என்று கருதினார். ஆயினும் அதுவரை மனித உடலில் உபயோகித்துப் பார்த்து, பலன் தெரியாதிருந்த ஒரு புத்தம்புதிய சிகிச்சை முறையை இளம் பையன் ஒருவன்மீது புகுத்திச் சோதனை செய்ய அஞ்சினார். நாய்க் கடியால் அன்றித்

தம்முடைய வைத்தியத்தால் அச் சிறுவன் இறந்தால், அவ்வுயிர்க் கொலைக்குத் தாமே பொறுப்பாளியாகிவிடக் கூடும் என்னும் எண்ணம் அவருடைய மனத்தைத் துன்புறுத்தியது. ஆதலால், அந்த நோயை ஆராய்வதற்காக அந்நாட்டு அரசாங்கம் ஏற்படுத்தியிருந்த அங்கத்தினர்களுள் ஒருவராகிய டாக்டர் வல்ப்பியான் என்பவரோடு ஆலோசனை செய்தார். மருத்துவம் செய்யாவிட்டால் சிறுவன் இறப்பது உறுதி: மருத்துவம் செய்தால், அவன் ஒருகால் பிழைக்கக்கூடும். ஆதலால் பாதுகாப்பு முறையை உபயோகிப்பதே தகுதி என்று இருவருமாக முடிவு செய்தார்கள்.

அந்தச் சிறுவனது உடலிலே ரேபியீஸ் நோய்க் கிருமிகள் படிப்படியாகப் புகுத்தப்பட்டன. முதல் நாள் ஊசி குத்தும்போது அச் சிறுவன் சற்றே பயந்தான். அதன் பின்பு, அவனுக்கு அச்சம் தீர்ந்து விட்டது. நாய்க் கடியினால் உண்டான காயம் குணமாக ஆக, ஒவ்வொரு நாளும் தன்னைப் பார்க்கவரும் பாஸ்ட்டேரோடு அவன் பிரியமாக பேசி விளையாடி வந்தான். அவனுடைய மனதில் கொஞ்சம்கூடக் கவலை இல்லை. “இன்றுதான் கடைசி முறை ஊசி குத்தப்போகிறேன். இனிமேல் உன்னைத் தொந்தரவு செய்ய மாட்டேன்” என்று பாஸ்ட்டேர் கடைசி முறையாக ஊசி குத்தும்போது சொன்னதும், அந்தச் சிறுவன் மகிழ்ச்சியோடு, “மாமா, எனக்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டுப் போங்கள்” என்று முத்தம் வாங்கிக் கொண்டு, விளையாட ஓடி விட்டான்.

ஆனால் அன்று முழுவதும் பாஸ்ட்டேரின் மனம் பட்டபாடு சொல்லி முடியாது. இரவு முழுவதும் அவர் தூங்கவே இல்லை. “நாம் செய்த இந்தக் காரியம் எப்படி முடியுமோ ? இச் சிறுவன் பிழைப்பானோ ? அல்லது நாம் புகுத்திய நோய்க் கிருமிகளால் நோயுண்டு இறப்பானோ ?” என்றெல்லாம் ஏங்கி, அவருடைய மனம் குழம்பிற்று. நாய்க் கடியால் நோயுற்றோர் படும் கொடிய தாங்கொணாத் துன்பங்கள் எல்லாம் அவருடைய கண்ணெதிரே வந்து தோன்றி, அவருடைய மனத்தைக் கலக்கின.

அதன் பின்பு, சில நாட்கள் சென்றன. அந்தப் பையன் நோயுறவில்லை. பாஸ்ட்டேரின் மனம் அமைதியுற்றது. தாம் செய்த மருத்துவம் மனிதருக்கும் பயன் அளிக்க வல்லது என்பது நிரூபிக்கப்பட்டதைக் கண்டு, அவர் திருப்தியடைந்தார்.

இதற்குச் சில காலத்துக்குப் பின்பு, வெறிபிடித்த நாய் ஒன்று குழந்தைகளைத் துரத்தக் கண்ட ஜூபியே என்னும் ஓர் ஆட்டிடையன் குறுக்கிட்டு, அவர்களைக் காப்பாற்ற முயன்றான். அப்பொழுது அந்த நாய் அவர்களைவிட்டு விட்டு. அவனைப் பல இடங்களில் பலமாகக் கடித்துவிட்டது. கடிபட்ட ஆறு நாட்களுக்குப் பின்னர், அவன் பாஸ்ட்டேரிடம் வந்து சேர்ந்தான். அவன் மீது பாஸ்ட்டேருடைய சிகிச்சை முறை கையாளப்பட்டது. அவனும் நோயுறாமல் பிழைத்தான். அதன் பின்பு, அந்தச் சிகிச்சை முறை உறுதியாகப் பயன் தர வல்லது என்று பாஸ்ட்டேர் முடிவு செய்தார்.

பாஸ்ட்டேர் இவ்வாறு கண்டுபிடித்த நாய்க்கடி மருத்துவம் உலகெங்கும் பரவி. எண்ணிறந்த மக்களை மிகக் கொடிய நோயினின்று காத்துக் குணமளித்து வருகிறது.

மேற்கூறியவற்றைத் தவிர, இன்னும் பல அரிய சாதனைகளையும் லூயி பாஸ்ட்டேர் செய்து, பெரும் புகழ் பெற்றார். உயிரியல் இரசாயனத் துறையில் அக்காலம் வரை அவரைப்

போல் அரிய செயல்களைச் செய்தவர்கள் வேறு ஒருவரும் இல்லை. ''கிருமி ஆராய்ச்சித் துறையின் தந்தை'' என்று அவரைப் பலரும் பாராட்டி வருகிறார்கள்.

அவர் 1822ஆம் ஆண்டில், டிசம்பர் மாதம் 27ஆம் தேதியன்று, பிரான்ஸ் நாட்டில் டோல் என்னும் சிறிய ஊர் ஒன்றில் பிறந்தார். அவருடைய குடும்பத்தினர் தோலைப் பதனிடும் தொழிலைத் தம்முடைய வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிருந்தார்கள். அவருடைய தந்தையாரது பெயர் ஷீன் ஜோஸஃப் பாஸ்ட்டேர் என்பது அவர் இராணுவத்தில் சேர்ந்து, நெப்போலியனின் படைவீரரில் ஒருவராக இருந்தார். நல்ல துணிவு உடையவர். மனஉறுதி உடையவர். நெப்போலியன் அவருடைய வீரச் செயல்களைப் பாராட்டி அவருக்கு ஒரு பொற் பதக்கம் அளித்திருந்தார்.

ஜோஸஃப் பாஸ்ட்டேருக்குத் தம்முடைய மகன் பேரறிஞன் ஆகவேண்டும் என்று ஆசை பட்டார். தம்முடைய மகனுக்கு நல்ல கல்வி பெறுவதற்கான வாய்ப்புக்களை அவர் அளித்து வந்தார். லூயியை முதலில் தம் ஊரின் அருகில் உள்ள பள்ளி ஒன்றுக்கும், பின்னர் பாரிஸ் நகருக்கும், அவர் அனுப்பி வைத்தார்.

பாஸ்ட்டேரும் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டும். இயற்கையாகத் தமக்கு இருந்த திறமைகள், ஆசைகள் முதலியவற்றின் விளைவாகவும் நன்கு கற்று வந்தார். இரசாயனத் துறையில் அவருக்கு அதிக ஈடுபாடு இருந்தது. டாக்டர் பட்டம் பெற்றார். பின்பு ஆராய்ச்சியில் இறங்கினார். படிகங்களைப் பற்றி அவர் செய்த ஆராய்ச்சிகள் புகழ் பெற்றவை.

அவ்வாறு செய்துவரும்போது, உயிரியலுக்கும் இரசாயனத்துக்கும் பல வகைகளில் தொடர்பு இருப்பது அவருக்கு மேன்மேலும் தெரிய வந்தது. ஆகவே இரசாயனத் துறைக்கும் நுண்ணுயிர்த் துறைக்கும் உள்ள தொலைவு அதிகம் இல்லை என்பதை அவர் உணர்ந்தார். அந்தத் துறையிலும் ஈடுபடத் தொடங்கினார்.

முன்னாளில் அத்துறையில் அதிகம் ஈடுபட வழியில்லை. கண்ணுக்குத் தெரியாதவற்றை எப்படி ஆராய்வது என்று பலரும் மலைத்து ஒதுங்கினார்கள். மைக்ரோஸ்க்கோப்பு கண்டுபிடிக்கப்பட்ட பின் அத்துறையில் ஆராய்ச்சிகளை நடத்துவது சற்றே சாத்தியமாயிற்று.

ஒயின் புளித்துப் போதல், பட்டுப் பூச்சிகள் நோயுறுதல், ஆடுகளுக்குத் தோன்றிய கொடிய நோய், நாய்க்கடி நோய் முதலியவற்றில் அவர் செய்த ஆராய்ச்சிகள் மிகப் பல. அவருடைய பொறுமையும், துணிவும், தளரா மனப்பான்மையும், அரிய உழைப்பும், மிகவும் பாராட்டத்தக்கவை. அவர் வகுத்துக் காட்டிய வழியில் பின்னர், வேறு எத்தனையோ அறிஞர்கள் ஆராய்ச்சிகளை நடத்தி, வேறு பல நோய்களைத் தடுக்கவும், குணப்படுத்தவும், வழிகளைத் கண்டுபிடித்தார்கள். ஆனால் அத்துறையின் மாபெரும் முன்னோடி, பாஸ்ட்டேரே.

அவர் எழுபத்து மூன்று ஆண்டுக் காலம் வாழ்ந்தார். கிட்டத்தட்டக் கடைசி வரை அவர் விடாமுயற்சியோடும் ஊக்கத்தோடும் தீவிரமாக உழைத்து வந்தார். 1895ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 28ஆம் தேதியன்று, அவர் காலமானார்.

இக்காலத்தில் அவரது பெயரால் ஒவ்வொரு நாட்டிலும் ஆராய்ச்சி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் குன்னூரில் இத்தகைய நிலையம் ஒன்று இருக்கிறது. ❖

# சென்னையில் போக்குவரத்து தொடங்கிய கதை

கே.ஆர்.ஏ. நரசய்யா

மதராசபட்டினத்து அரசாங்க வருமானம் (1727) 64,000 பகோடாக்களாக இருந்தன, அதில் சரி பாதி கப்பல் சுங்க வரியிலிருந்தும், மற்ற பகுதி வேறு வரிகளிலிருந்தும் கிடைத்தன. இதிலிருந்து அன்றைய கடல்வழி வணிகத்தின் முக்கியத்துவமும் ஆங்கிலேயரின் வணிகத் திறமையும் புலப்படுகிறது. அப்போது கப்பல்கள் கரையினின்றும் சுமார் ஐந்து கி.மீ. தூரத்தில் நிறுத்தப்பட்டு, சரக்குகள் தோணிகள், மசாலா படகுகள் மூலம் கரைக்குக் கொண்டு வரப்பட்டன. அன்றைய பெருகிக் கொண்டிருந்த கடல்வழி வணிகம், இந்த முறையினால், பாதிக்கப்பட்டது. ஏனெனில் அப்படி வரும் சரக்குகள் பன்மடங்கு சேதம் அடைந்தன. இதைத் தவிர்க்க ஒரு நல்ல துறைமுகம் கட்டப்பட வேண்டும் என்பது உறுதியாயிற்று. 1796இல் முதல் கலங்கரை விளக்கம், தேங்காய் எண்ணெய்யால் எரியும் விளக்கு நிறுவப்பட்டது. இந்த விளக்கின் ஒளி 28 கி.மீ. தூரம்வரை தெரிந்ததாகச் சொல்லப்படுகிறது! (இந்தக் கலங்கரை விளக்கம் இப்போதுள்ள கோட்டை மியூசியத்தின் மேலே வைக்கப்பட்டிருந்து.

## கப்பல் வழி போக்குவரத்து

1859இல்தான் முதலாவதாக, சரக்கைக் கொண்டுவரும் மிதவைத்தளங்கள் (பார்ஜ்) அல்லது தோணிகள், போன்றவைகளைக் கொண்டுவந்து கட்ட வேண்டி, கடற்கரையில் ஒரு துறை கட்ட ஆரம்பித்தனர் கம்பெனியர். 1100 அடி நீளமான அந்தத் துறை 1861இல் முடிந்தது. இத்துறைக்கும் கப்பல்களுக்கும் இடையில் பல பெரிய தோணிகள் செல்ல வசதி இருந்தது. ஆகையால் சரக்குகள் சேதமடைவது குறைந்தது. 1868இல் இவர்களது வணிகம், எடையில் 3 இலட்சம் டன்னாகவும் மதிப்பில் 3 கோடி ரூபாயாகவும் இருந்தது. ஜூலை 31, 1868இல் சேம்பர் ஆஃப் காமர்ஸ் தனது கூட்டத்தில் ஒரு முடிவெடுத்தது. 1872இல் அந்த முடிவின்படி, வில்லியம் பார்க்ஸ் என்ற ஒரு துறைமுக ஆலோசகர் அழைக்கப்பட்டார். (இவர்தான் அப்போது கராச்சி துறைமுகத்தைக் கட்டியவர்) அவர் கொடுத்த ஆலோசனையின்கீழ் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது. 1875இல் இந்தத் திட்டம் அரசால் அங்கீகரிக்கப்பட்டது. டிசம்பர் 14, 1875 அன்று, அப்போதைய ஆங்கில மன்னராக ஆக விருந்த , பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ், இதற்கு அடிக்கல் நாட்டினார். (பின்பு இவர்தான் ஏழாவது எட்வர்ட் மன்னர் என அறியப்பட்டவர்). ஜேம்ஸ் மே என்பாரின் தலைமையில் பணி ஆரம்பமாயிற்று. இவர் இங்கிலாந்தின் பல துறைமுகங்களைக் கட்டிய ஜேம்ஸ் வாக்கர் என்பாருடன் பணிபுரிந்தவர். 1881இல் இரண்டு தடைச்சுவர்கள் (Break Waters) கிட்டத்தட்ட முடிவான நேரத்தில், ஒரு சீரிய புயல் அடித்தது.

அப்போது 2,500 அடி நீளத்திற்கு இவை கட்டப்பட்டிருந்தன. கிழக்கில் ஒரு 550 அடி நீள நுழைவாயில் விடப்பட்டிருந்தது. நவம்பர் 11, 1881இல் அடித்த இந்தப் புயலில், மிகுந்த சேதம் ஏற்பட்டது. அந்தச் சேதம் மிகுந்த நஷ்டத்தை ஏற்படுத்தியிருந்தது. தொடர்ந்து மனம் தளராது, அரசாங்கம், மூன்று சிறந்த பொறியாளர்களை அழைத்தது.

சிறந்த துறைமுகப் பொறியாளர்களைக் கொண்ட இந்தக் குழு, சர் ஜான் ஹேக்ஷா, சர் ஜான் கூட், ப்ரொபஸர் ஸ்டோக்ஸ் என்பவர்களைக் கொண்டிருந்தது. இந்த மூவரும் அளித்த ஆலோசனையின்படி ஒரு கட்டமைப்பு, இந்தத் துறைமுகத்தில் 1885இல் முடிக்கப்பட்டது. 1886இல்தான் அரசாங்கத் துறைமுக ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனாலும் துறைமுகத்துப் பிரச்சினைகள் தொடர்ந்தன. ஆகையால் சர் அலெக்சாண்டர் ரெண்டல் என்பவர் தலைமையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. இதை ஒரு பொற்காலம் என்றே கூற வேண்டும். ஏனெனில் அப்போது துறைமுகத் தலைவராயிருந்த சர் ஃப்ரான்சிஸ் ஸ்பிரிங் என்பார் ஒரு தீர்க்கதரிசி ஆவார். 1904இல் அப்பதவிக்கு வந்த இம்மனிதர் ஒரு துறைமுக பொறியாளர். அவர் பணிபுரிந்த பதினைந்து வருடங்களில் சென்னைத் துறைமுகம் படிப்படியாக முன்னேறியது.

இயற்கைத் துறைமுகமாக இல்லாத காரணத்தால், புயல்களாலும் இயற்கைச் சீற்றத்தாலும் மதராஸ் துறைமுகம் அடிக்கடி சேதங்களைக் கண்டது. ஆகையால், துறைமுகத் தலைவராக ஸ்பிரிங் பணிபுரிந்த காலத்தில்தான் துறைமுகம் மாற்றியமைக்கப்பட்டது: புதிதாக நான்கு துறைகளும் கட்டப்பட்டன. இவை மேற்குத் துறைகள் என அறியப்பட்டன. 11.5 ஏக்கர் நிலம் தென்மேற்குப் பக்கத்தில் ஆழம் ஆக்கப்பட்டு, துறைமுகம் விஸ்தரிக்கப்பட்டது. இந்த இடத்திற்கு அவர் பெயராலேயே ஸ்பிரிங்ஹேவன் பேசின் எனப் பெயரிடப்பட்டது. பிறகு மற்றொரு பேசின் கட்டப்பட்டு அது மர இறக்குமதிக்குப் பயன்பட்டது.

புயலுக்கும் கிழக்குக் கடற்கரைக்கும் ஒரு தொடர்பு எப்போதும் உண்டு. நவம்பர் 22, 1916இல் அடித்த ஒரு பெரும் புயலால், இந்தத் துறைமுகத்தின் வட கிழக்குப் பகுதிக்கு பெருத்த சேதம் ஏற்பட்டது. அப்போது நடந்துகொண்டிருந்த முதல் உலக மஹா யுத்தத்தால் உடனே பழுதுபார்க்கவும் இயலவில்லை. 1920இல் தான் அதாவது, நான்கு வருடங்களுக்குப் பிறகு, பராமரிப்பு செய்யப்பட்டது. 1924–28இல் தெற்குத் தடைச்சுவர், நீளப்படுத்தப்பட்டது. அதன் நீளம் 700 அடி அதிகரிக்கப்பட்டது. ஏனெனில் அப்போது மணல் வருவது அதிகமாகியிருந்தது. இந்த மணல் வருவதைத் தடுக்கத்தான் இந்தச் சுவர். இந்த நாட்களில், தமிழ்நாட்டிற்கு நிலக்கரி வடமாநிலங்களின்று வர ஆரம்பித்தது. இந்த நிலக்கரி முக்கியமாக அப்போது இரயில்வே பணிகளுக்கு வேண்டியிருந்தது. 1931இல் அதற்காக ஒரு பிரத்தியேக துறை கட்டப்பட்டது. முதல் தட்வையாக ஒரு துறை 1936இல் காங்கரீட் தளத்துடன் அமைக்கப்பட்டது. 1939லிருந்து 1945வரை இந்தத் துறைமுகம் முக்கியமாக இரண்டாவது உலகப்போருக்காக பயன்படுத்தப்பட்டது.

1945இல் யுத்தம் முடிந்த பிறகு, அரசாங்கம் ஒரு குழுவை நியமித்து, இந்தத் துறைமுகத்தை விரிவாக்கும் திட்டத்தை அறிவித்தது. அப்போது ஆர்ம்ஸ்ட்ராங்க் என்பவர் ஒரு பரிந்துரை அளித்தார். அதனை அப்போது ஏற்றுக்கொள்ள அரசால் இயலவில்லை. ஆயினும் போருக்குப் பிறகு தோன்றிய இயந்திர வளர்ச்சியால் எல்லா தேசங்களிலும் இரும்பும் எஃகும் அதிகம் தேவைப்பட்டது. உலகிலேயே அதிக இரும்புத் தாதுப்பொருள் கிடைக்கும் நாடுகளில் ஒன்று இந்தியா. பைலடில்லா என்ற மத்தியப்பிரதேச இரும்புத் தாதுப்பொருள் உலகிலேயே அதிக இரும்பைத் தன்னுள்

கொண்டது. ஆகையால் எல்லோராலும் விரும்பப்பட்டது. ஜப்பான் இப்போது திடீரென இயந்திர வளர்ச்சியில் முன்னேற ஆரம்பித்தது.

சென்னையிலிருந்து ஏற்றுமதியாகும் இரும்புத் தாதுப்பொருள் பெல்லாரி, ஹோஸ்பெட் என்ற இடங்களிலிருந்து வருவது. இந்த ஏற்றுமதி அதற்கு முன்பு கோவாவிலிருந்து மட்டும்தான் இருந்தது. கப்பலில் ஏற்றுவது தனியாரின் தொழிலாளிகளால் நடத்தப்பட்டது. அதற்கு வேண்டிய கருவிகள் ஒன்றும் இருக்கவில்லை. மாறாக பெரிய 'ராட்டன்' என்ற மூங்கிற் கூடைகளில் நிரப்பப்பட்டு, பளு தூக்கிகளால் கப்பலில் நிரப்பப்பட்டது. ஆரம்பத்தில் மனிதர்கள்தாம் மூட்டை தூக்கவும், மாட்டு வண்டிகள் தாம் பளுக்களை எடுத்துச் செல்லவும் பயன்பட்டன. காலம் செல்லச் செல்ல இவையெல்லாம் மாற்றப்பட்டு மதராஸ் துறைமுகம் கிழக்குக் கரையின் ஒரு முக்கியத் துறைமுகமாக வடிவெடுத்தது.

**கீழ்க்கண்ட அட்டவணை ஆரம்ப காலத்து மதராஸ் துறைமுக கடல்வழி வணிகத்தைக் காட்டும்.**

1639ஆம் வருடத்தில் துணிமணிகள் மட்டும் 25,000 ரூபாய் மதிப்பானது இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. அது 1939இல் 1,20,00,000 மதிப்பிற்கு உயர்ந்தது!

| | |
|---|---|
| லுங்கிகளும் சேலைகளும் | 48,00,000 |
| மெட்ராஸ் கைக்குட்டைகள் (இங்கிலாந்திற்கும் நைஜீரியாவுக்கும்) | 45,00,000 |
| மற்ற வகை பருத்தித் துணிகள் | 27,00,000 |

இந்த அட்டவணையே மதராசபட்டினத்துப் பருத்தித் துணிகளின் உலகளாவிய பெருமதிப்பிற்குச் சான்றாகும்!


துணிகளைத் தவிர மற்றவகைப் பொருள்களையும் இந்தத் துறைமுகம் வழியாக வணிக சமூகம் ஏற்றுமதி செய்து கொண்டிருந்ததாக அன்றைய பாரி அண்டு கம்பெனியின் டைரக்டரான ஜி.எச். ஹாட்ச்சன் என்பவர் கூற்றுப்படி, அவற்றையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் மொத்த ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்களின் மதிப்பு 16,00,00,000 ஆகும்!

1939ஆம் வருடத்திலேயே 700 கப்பல்கள் இந்தத் துறைமுகம் வழியே வந்து சென்றன. இந்தத் துறைமுகத்திற்குப் புகைவண்டிகள் வழியாக சாமான்கள் வந்து போக ஏதுவாக இருந்ததற்கு, 1856ஆம் வருடம் துவக்கப்பட்ட மெட்ராஸ் ஆற்காடு வழி முக்கிய காரணமாகும்.

அப்போதும் தென்னகத்தின் பருத்தித் துணிகளும் அவற்றின் வண்ண வேலைப்பாடுகளும் நல்ல மதிப்பை ஐரோப்பாவில் தொடர்ந்து பெற்றுக் கொண்டிருந்தது. அதேபோல இங்குத் தயாரிக்கப்பட்ட தேங்காய் நார் கயிறுகளும் பிரசித்தி பெற்றவையாக இருந்தன. துறைமுக சம்பந்தமான வரி சுங்கம் எல்லாமே 1875 ஆக்ட்டின் கீழ் (இது இந்தியன் போர்ட்ஸ் ஆக்ட் என்றழைக்கப்பட்டது) சுங்க இலாகாவால்தான் வசூலிக்கப்பட்டன.

இப்போதுள்ள துறைமுகக் கழகம் போல அன்றைய நாட்களில் "மெட்ராஸ் போர்ட் அண்ட் ஹார்பர் கமிட்டி" என்ற ஒரு அமைப்பு செயல்பட்டுக் கொண்டிருந்தது. இது அரசாங்கத்துக்குத் துறைமுக விவகாரங்களில் ஆலோசனை கூறும். அந்த அங்கத்தினர்கள் வெவ்வேறு நியமனங்களிலிருந்து நியமிக்கப்பட்டிருந்தனர். மூன்று அங்கத்தினர்கள் சேம்பர் ஆஃப் காமர்ஸ்ஸிலிருந்தும், இரண்டு பேர் வணிகப்

பெருமக்களின் பிரதிநிதிகளாகவும், ஒரு மனிதர் வங்கியொன்றிலிருந்தும், இருந்தனர். இவர்களைத் தவிர, மதராசபட்டினத்து கலெக்டர், மேல்நிலைப் பொறியாளர், காவல் துறைக் கமிஷனர், மாஸ்டர் அட்டெண்டண்ட் (இவர்தான் துறைமுகப் பொறுப்பை வகித்தவர்) ஹார்பர் பொறியாளர் மற்றும் அரசாங்க




வழக்குரைஞர் அங்கத்தினர்களாக இந்தக் கழகத்தில் இருந்தனர். கலெக்டர்தான் இந்த போர்டுக்குத் தலைவர். மாஸ்டர் அட்டெண்டண்ட்தான் காரியதரிசி. அதிகாரிகளல்லாத அங்கத்தினர்கள் 20 ரூபாய் கூட்டம் கூடுகையில் தரப்பட்டனர். மாஸ்டர் அட்டெண்ட்ண்ட்தான் இப்போதைய டெபுடி கன்சர்வேடர் போல இருந்தார். மாலுமிகளைப் பரீட்சித்து அவர்களுக்கு சான்றிதழ் தருவதும் இவரது வேலையாக இருந்தது. மற்ற சுகாதாரப் பொறுப்புகளும் இவருக்குத் தரப்பட்டிருந்தன.

பஞ்ச காலத்தில் ஒரு கால்வாய் வெட்டும் பணியும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தொடர்ந்து அதே கால்வாய் போக்குவரத்துக்கும் மேம்படுத்தப்பட்டது. இதை முதல் முதலாகத் திட்டமிட்டவர் டியூக் ஆஃப் பக்கிங்ஹாம் என்பவர். ஆகையால் அவர் பெயரிலேயே அழைக்கப்படும் இக்கால்வாய் கூவம் அடையாறு ஆறுகளுக்கிடையில் 1877–78ஆம் வருடங்களில் 30 இலட்சம் ரூபாய் செலவில் வெட்டப்பட்டது. பிற்காலத்தில் 163 கி.மீ. தூரம் தமிழ்நாட்டிலும் மற்ற பகுதி ஆந்திர மாநிலத்திலும், வெட்டப்பட்டு, அது ஒரு நீளமான படகுகள் செல்லக்கூடியதாக அமைந்தது. வடக்கில் காகிநாடாவையும், தெற்கில் மரக்காணத்தையும் இணைக்கும் இந்தக் கால்வாய் விறகு, உப்பு முதலிய சரக்குகளை எளிதாக எடுத்துச் செல்லப் பயன்பட்டது. தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டு கடைசிவரை நன்கு செயல்பட்டுவந்த இந்தக் கால்வாய் இருபதாம் நூற்றாண்டில் புயல்களால் பாதிக்கப்பட்டு செயலிழந்தது!

அடையாறு செம்பரம்பாக்கத்திலிருந்து உற்பத்தியாகி, 40 கி.மீ. தூரம் கடந்து, நந்தம்பாக்கத்தில் மதராசை அடைகிறது. அங்கிருந்து 13.5 கி.மீ. தூரம் நகரத்துக்குள் ஓடி கடலைச் சேருகிறது. இந்த ஆறும் போக்குவரத்துக்கு மிக்கப் பயனுள்ளதாய் இருந்ததாகும். இதன்மேல் கட்டப்பட்ட முதல் பாலம் சைதாப்பேட்டையில் இருக்கும் மர்மலாங்க் (இப்போது மறைமலை அடிகள்) பாலம்.

இரண்டாவது எல்பின்ஸ்டன் (இப்போது திரு. வி. க.) பாலம். இந்த ஆற்றின் வழியாகச் சமீப காலம்வரை காய்கறி போக்குவரத்து இருந்தது. இவ்விரண்டு பாலங்களும் சமீப காலத்தில்தான் மாற்றியமைக்கப்பட்டன.

## தரைவழிப் போக்குவரத்து

ஆங்கிலேயர்கள் வந்து தமது ஆட்சியை நிலைநாட்ட, சுமார் 200 வருடங்களுக்குப் பிறகுதான் வீதிகளும் தரைவழிப் போக்குவரத்திற்கான தேவைகளும் நிறைவேற்றப்பட்டன. ஆனால், தபால்–தந்தி இலாகா சற்று முன்னரே கவனிக்கப்பட்டது. இதற்கான முதல் குறிப்பு, 1736 ஜூலை 7ஆம் தேதியில் காணப்படுகிறது. அந்தக் குறிப்பு இவ்வாறுள்ளது: “சமீப காலமாக மதராசபட்டினத்திலிருந்து செல்லும் அல்லது வரும் கடிதங்களும் முக்கிய கடிதப்பைகளும் ஒன்றோ தொலைந்து போகின்றன, இல்லையெனில் அவை சரியாக விலாசதாரர்களுக்குச் சேர்வதில்லை. எங்கு எப்படி அவை தொலைந்து போகின்றன என்பதைத் தெரிந்துகொள்ளவும், அவ்வாறான நிகழ்வுகளைத் தடுப்பதற்கும் விதிமுறைகள் அமைக்க வேண்டியது தேவை. வங்காளத்திலும் அது போலவே செய்ய வேண்டும். கீழ்க்கண்ட விதிமுறைகள் அதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

1. தபால் உறைகள் சரியான முறையில் எண்களிடப்பட வேண்டும்.

2. தேதி தபால் உறை கொடுக்கப்பட்ட நேரம் முதலியவை ஒரு சீட்டில் குறிக்கப்பட்டு, அது அந்த உறையில் ஒட்டப்பட வேண்டும்.

3. அவற்றைப் பெறுபவர் முறையாக பெற்ற விவரத்தைத் தெரியப்படுத்த வேண்டும்.

4. அப்படி ஏதாவது சரியாகச் சேர்ப்பிக்கப்படவில்லையெனில் உடனே இரு புறத்திலிருந்தும் சரியாக விவரங்கள் அறியப்பட வேண்டும்.

### தொலைபேசி

1881ஆம் ஆண்டில்தான் முதல் எக்ஸ்சேஞ்ச், பிளிக்கர்ஸ் தெருவில் ஆரம்பிக்கப்பட்டது. 1910ஆம் வருடத்தில் தொலைபேசி வைத்திருப்போரின் எண்ணிக்கை 350ஆக இருந்தது. அந்த நாட்களில் ஐரோப்பாவில்கூட அதிகமானவர்கள் தொலைபேசி வைத்திருக்கவில்லை. பழைய ‘மாக்னடோ’ வகை தொலைபேசிகள்தாம் அப்போது இருந்தன. 1900ஆம் வருட ஆரம்பத்தில் இந்த எக்ஸ்சேஞ்ச் எர்ரபாலு தெருவுக்கு மாற்றப்பட்டது.

1922ஆம் வருடத்திலிருந்து தொலைபேசி அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. தொலைபேசி வாடிக்கையாளர்கள் இந்த வருடத்தில் 1,300ஆக உயர்ந்திருந்தனர். 1925ஆம் வருடம் எஸ்பிளனேடில் டெலிபோன் ஹவுஸ் (தொலைபேசி நிலையம்) கட்டப்பட்டது. 1926இல்தான் தொலைபேசி முறை ‘ஆடோமேடிக்’’ ஆனது. இதில் முக்கியமான விஷயம் என்னவெனில் இந்தியாவிலேயே முழுதும் தானியங்கியாகச் செயல்பட்ட முதல் “எக்ஸ்சேஞ்ச்’’ மதராசில்தான்! பார்க்கப்போனால், உலகின் பல சிறந்த நகரங்களில் இந்த விஷயத்தில் மதராஸ் முன்னோடியாக இருந்தது.

ஆனால் அதற்குப் பிறகு சுமார் 40 வருடங்கள் கழித்துத்தான் 1774 ஆம் ஆண்டு போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் என்ற ஒரு பதவி உண்டாக்கப்பட்டு, அதற்காக ஒரு அதிகாரியும் நியமிக்கப்பட்டார். அப்போதுதான் முதன் முறையாக பொதுமக்களுக்குத் தபால் முறை விஸ்தரிக்கப்பட்டு, (அதுவரை இம்முறைகள் அரசுக்கு மட்டும்தான் பயன்பட்டு வந்தது) அதற்கான கட்டணமும் விதிக்கப்பட்டது. இதுதான் இன்றைய தபால் இலாகாவின் தோற்றம்.

ஆனால், தொடங்கப்பட்டவுடன் அதிவேகமாக இந்த இலாகா வளர ஆரம்பித்தது. ஏனெனில் இதனால் பொதுஜனங்களுக்குப் பயனுள்ளது என்பதை யாவரும் உணர ஆரம்பித்தனர். ஆகையால் மற்ற இலாகாக்களைவிட இதன் முன்னேற்றம் வேகமாகவே இருந்தது. 1785ஆம் வருடத்தில் இந்த இலாகாவின் விதிமுறைகள் பொதுமக்களுக்கு அறியும்படி தெரிவிக்கப்பட்டன. 1786ஆம் வருடத்தில் இரு வாரங்களுக்கு ஒரு முறை மதராசுக்கும் பம்பாய்க்கும் கல்கத்தாவுக்கும் இடையிலான தபால் அனுப்பும் முறை இயக்கப்பட்டது. இந்த நிலை அவ்வாறே வேறு மாற்றங்கள் எதுவுமின்றி சுமார் 50 வருடங்களுக்கு நீடித்தது.

அப்போது தரைவழி வீதிகள் அமைப்பதற்குச் சரியான அமைப்பு இருக்கவில்லை. மராமத்து இலாகா என்றழைக்கப்பட்ட ஒரு இலாகாவுக்குத்தான் இப்பொறுப்பு விடப்பட்டிருந்தது. அந்த இலாகா அவ்வந்த ஜில்லா (மாவட்ட) கலெக்டர்கள் பொறுப்பில் இருந்தனர். பின்னர்தான் பொறியாளர்கள் இந்த வேலைக்கு அமர்த்தப்பட்டனர். 1819ஆம் வருடம் தெருக்கள் பராமரிப்பு குறித்து எடுத்துக்கொண்ட முயற்சிகளின் விளைவாக, பொறியாளர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் “சூபரின்டெண்ட் ஆஃப் டேங்க்ஸ்” என்ற அதிகாரியின் கீழ் நிறுவப்பட்டனர். தொடர்ந்து “இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் சிவில் எஸ்டிமேட்ஸ்” என்ற பெயருள்ள அதிகாரி நியமிக்கப்பட்டார். இவருக்குக் கீழ் எல்லாப் பொதுப்பணித்துறையின் வேலைகளும் வந்தன. 1825ஆம் வருடத்தில் மராமத்து இலாகா “போர்ட் ஆஃப் ரெவின்யூ”வின் கீழ் கொண்டு வரப்பட்டது. 1836ஆம் வருடத்தில்தான் சீஃப் என்ஜினீயருக்கு எல்லாப் பொறுப்பும் தரப்பட்டது. இவரும் “போர்ட் ஆஃப் ரெவின்யூ”வில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். முன்னர் கூறிய “இன்ஸ்பெக்டர் ஜெனரல்” என்ற பதவி நீக்கப்பட்டது. பொதுப்பணித்துறையும் முதன்மைப் பொறியாளரும் இப்போது பொறுப்பேற்றுக் கொண்டனர். 1856ஆம் வருடத்தில் ஒரு கமிஷன் அமைக்கப்பட்டு அதன் மூலம் பொதுப்பணித்துறையின் பொறுப்புகளெல்லாம் பரிசீலிக்கப்பட்டன. அப்போது அந்த கமிஷன் கொடுத்த அறிக்கை, இன்றுகூடப் பொருந்தும்; அது இவ்வாறிருந்தது.

“நாங்கள் கண்டதிலிருந்து, இங்கிலாந்தைவிட இரண்டரை மடங்கு அதிக பரப்பும் அந்நாட்டைவிட அதிக மக்கள் தொகையுமுள்ள இந்த ராஜதானிக்கு, 3,400 மைல்களுக்குத்தான் “தெருக்கள்” என்றழைக்கப்படுகிற அமைப்புகள் உள்ளன. அவைகூட உண்மையில் சரியாக அமைக்கப்பட்ட வீதிகளே அல்ல! வெறும் கை அல்லது மாட்டுவண்டிகள் செல்லக்கூடிய வழிகள்தான்! தரை கெட்டியாகக் கோடைக்காலத்தில் இருக்கும்போது மட்டுமே அவை வீதிகளாகப் பயன்படுகின்றன. ஆனால், அவை மராமத்து செய்யப்பட வேண்டியவை. பாலங்களும் சரியாகக் கட்டப்படவில்லை.

இவையெல்லாமே கவனிக்கப்படுவதில்லை யெனவேத் தெரிகிறது. படை வீரர்களுக்காகவும் அவர்கள் போக்குவரவுக்கும் கட்டப்பட்டவைதான் வீதிகளாகத் தெரிகின்றன. ஆனால், அவையும்கூட சரியாகப் பழுது பார்க்கப்படுவதில்லையென அறிகிறோம்! இவை வீதிகளுமல்ல; பாலங்கள் என இருப்பவை பாலங்களே அல்ல!''

மற்றொரு இடத்தில் விரிவாகச் சொல்லப்படும் நில அளவு முறை "த கிரேட் இண்டியன் டிரிகனோமெட்ரிகல் சர்வே'' எனப்பட்ட உலகிலேயே சிறந்த முறையில் செய்யப்பட்டது, சுமாராக 1800ஆம் ஆண்டில்தான் தொடங்கப்பட்டது. ஆகையால் அந்த நேரத்தில்தான் பெருவழிப்பாதைகளும் அமைக்கப்பட்டன. 1845ஆம் வருடத்தில், "டிரங்க் ரோட் டிபார்ட்மெண்ட்'' என்றழைக்கப்பட்ட இலாகா செயலுக்கு வந்தது. ஆனால், இந்தியாவின் இரயில் வழிப்பாதை, மற்ற நகரங்களுக்கு வந்து விட்டபோதிலும் மதராசபட்டினத்திற்கு 1876ஆம் வருடத்தில்தான் வந்தது. அப்போது ஆரம்பிக்கப்பட்ட "சௌத் இந்தியன் ரெயில்வே'' முதல்முதலாக மெட்ராஸ் பார்க் ஸ்டேஷனையும் திண்டிவனத்தையும் இணைத்தது. அப்போது "மெட்ராஸ் அண்டு சௌத் மராத்தா ரெயில்வே'' இயங்கிக் கொண்டிருந்தது. 1879ஆம் வருடத்தில் மதராஸ் பார்க் ஸ்டேஷனும் பழைய மதராஸ் பீச்சு ஸ்டேஷனும் இணைக்கப்பட்டன. அந்த தூரம் சுமார் இரண்டு மைல்கள்தான்! 1900ஆம் வருடத்தில்தான் பழைய மதராஸ் பீச்சு ஸ்டேஷனும் மதராஸ் பீச்சு ஜங்ஷனும் இணைக்கப்பட்டன.

தபால் இலாகாவும் வளர ஆரம்பித்தது. 1853ஆம் வருடத்தில் "ரயில்வே மெயில் சர்வீஸ்'' ஆரம்பிக்கப்பட்டது. 1854ஆம் வருடம்தான் ஸ்டாம்பு விற்பது ஆரம்பமாயிற்று. இதுதான் இன்றைய தபால் முறையின் சரியான ஆரம்பம் எனலாம். 1864ஆம் வருடத்தில் மதராசில் ஒன்பது தபால் ஆபீசுகள் இருந்தன. 1871ஆம் ஆண்டில் இரயில் போக்குவரத்து அதிகரிக்கப்பட்ட பின்னர், தபால் இலாகா சீராகத் தனது பணியை ஆற்ற ஆரம்பித்தது. 1870–1880 ஆண்டுகளில்தான் மற்ற சேவைகளும் இந்த இலாகாவில் ஆரம்பிக்கப்பட்டன. அரசு கடிதங்கள் தனியாக அனுப்பப்பட்டன. அவற்றிற்கு ஸ்டாம்ப் விலைகள் தனியாக வரையறுக்கப்பட்டன. "மணியார்டர் முறையும் ஆரம்பிக்கப்பட்டது.

1892ஆம் வருடத்தில் "மதராஸ் டிராம்வே கம்பெனி'' ஹட்சின்சன் அண்டு கம்பெனி என்ற தனியார் ஸ்தாபனத்தால் ஆரம்பிக்கப்பட்டது. அப்போதைய அதன் முதலீடு, 100.000 பவுண்டுகள் ஆகும். ஆரம்பித்து மூன்று வருடங்களுக்குப் பின்னர் தான் (1895) பொதுமக்கள் பயனுக்கு இது விடப்பட்டது. "த மெட்ராஸ் எலெக்ட்ரிக் டிராம்வேஸ்'' 1895ஆம் வருடம் துவக்கப்பட்டது. இதுதான் இந்தியாவிலேயே முதலாவதாக ஓட்டப்பட்ட டிராம் வண்டியாகும். இதற்குப் பிறகு ஆறு வருடங்கள் கழித்துத் தான் மற்ற நகரங்களில் இந்த மாதிரியான போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது என்பது பெருமை தரக்கூடிய ஒரு விஷயமாகும். லண்டனில்கூட அப்போது இவ்வளவு விரிவாக டிராம் கார் இயங்கவில்லை! கார்ப்பரேஷனைப் போல இந்த விஷயத்திலும் மதராசபட்டினம் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

ஆனால், பணப்பற்றாக்குறை காரணமாக, இந்தக் கம்பெனி 1900 ஆம் ஆண்டு விற்கப்பட்டது. அதை வாங்கியவர்கள் "த எலெக்ட்ரிக் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி

லிமிடெட்'' என்பவர்கள். அவர்கள் இந்தப் போக்குவரத்தை நான்கு வருடங்கள்தான் நடத்தினார்கள். 1904ஆம் வருடத்தில் "த மெட்ராஸ் எலெக்ட்ரிக் டிராம்வேஸ் (1904) லிமிடெட்'' என்ற கம்பெனி இதை வாங்கியது. அப்போதிருந்து கடைசிவரை இந்தக் கம்பெனியை நன்றாகவே நடத்தி வந்தனர். விஸ்தரிப்புகள் தொடர்ந்து 1905, 1911, 1919ஆம் வருடங்களில் நடந்தன. இறுதியில் இந்தப் போக்குவரத்து 11 மைல்கள் இரண்டு வழிகளாகவும், 5 மைல்களுக்கு மேலாக ஒரு வழியாகவும் இருந்தது. சென்னை வாசிகளுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருந்தது!

## பேருந்துகள்; இரயில் மார்க்கம்

மெசர்ஸ் சிம்சன் அண்டு கோ 1910ஆம் ஆண்டிலேயே சில பேருந்துகளை பொதுமக்களுக்காக விட முயன்றது. ஆனாலும் 1925–27இல்தான் இந்தப் போக்குவரத்து முறை சீர்படுத்தப்பட்டது. முன்னரே கூறப்பட்ட மெட்ராஸ் எலெக்ட்ரிக் டிராம் வேஸ் (1904) லிமிடெட், இப்போது 50 பேருந்துகளை இயக்கிச் சீராகப் போக்குவரத்தைக் கவனித்துக்கொண்டது. ஆனால், 1928ஆம் வருடம், மற்ற பேருந்து இயக்குனர்களின் போட்டியால் இந்தக் கம்பெனி பேருந்து போக்குவரத்தை நிறுத்திக்கொண்டது!

1845ஆம் வருடத்தில் இங்கிலாந்தில் "மெட்ராஸ் இரயில்வே கம்பெனி'' ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து நிறுவப்பட்ட புதிய கம்பெனிதான் 1853ஆம் வருடத்தில் இரயில் பாதை கட்டத் துவங்கியது. அதற்காக போடப்பட்ட பாதை ஆற்காட்டையும் மதராசின் ராயபுரத்தையும் இணைப்பதாக இருந்தது, தெற்கிலும் கிழக்கிலும் நீட்டப்பட்ட இந்தப் பாதை. மொத்தத்தில் 67 மைல் நீளமுடையதாய் இருந்தது. இது போக்குவரத்துக்காக 1856ஆம் வருடம் ஜூலை முதல் தேதி அன்று திறக்கப்பட்டது. (அதாவது முதல் இந்திய இரயில் பாதையான பம்பாய் தாணா இரயில் பாதை நிறுவப்பட்ட மூன்று வருடங்களில்) தென்னிந்தியாவில் வண்டிகள் சிம்சன் கம்பெனியால் செய்யப்பட்டவையாகும். ராயபுரத்தில் கட்டப்பட்ட ஸ்டேஷன் கட்டிடம் 1901ஆம் வருடம் வரை மாற்றப்படாமல் இருந்தது. 1873ஆம் வருடத்தில் இப்போதிருக்கும் இடத்திலேயே, சென்ட்ரல் ஸ்டேஷன் மதராசபட்டினத்திற்காக நான்கு நடைமேடைகளுடன் சிறியதாகவே கட்டப்பட்டது. வியாசர்பாடி மெட்ராஸ் இடையில் போக்குவரத்து அதே வருடத்தில் துவக்கப்பட்டது. ஜார்ஜ் ஹார்டிஞ்ச் என்பவரால் அமைக்கப்பட்ட இந்தக் கட்டிடம் 1878 வரை புதுப்பிக்கப்பட்டுக்கொண்டே இருந்தது. இப்போதிருக்கும் கட்டிடம் முழுமையாக அமைக்கப்பட்டது 1900 வருடத்தில்தான்.

அப்போது பல தனியார் கம்பெனிகள் இந்தப் பொறுப்பை ஏற்றிருந்தன. 1908ஆம் வருடம்தான் மெட்ராஸ் அண்டு சவுத் மராத்தா கம்பெனி சிறிய கம்பெனிகளையெல்லாம் சேர்த்துக் கொண்டு ஒரே கம்பெனியாகச் செயல்படத் துவங்கியது. அப்போது அதன் அலுவலகங்கள் ராயபுரத்திலிருந்துதான் பணியாற்றிக் கொண்டிருந்தன. 1922ஆம் ஆண்டில்தான் அலுவலகம் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு அடுத்த இடத்திற்கு மாற்றப்பட்டது. அந்த நேரத்தில் இந்த நிறுவனம், சுமார் 3,000 மைல்களுக்கு மேலேயே இரயில் பாதையைக் கொண்டதாய் இருந்தது. ஆகையால் இராயபுரம்தான் தென்னகத்தின் முதல் இரயில் நிலையமெனக் கொள்ளலாம்.

இரயில் பாதை போடுவதும் அதைப் பராமரிப்பதும் செய்து கொண்டிருந்த நிறுவனம், இங்கிலாந்தில் 1853ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 'த கிரேட் சதர்ன் இன்டியன் இரயில்வே கம்பெனி'யாகும். இந்த நிறுவனமும், 'கர்நாடிக் இரயில்வே கம்பெனி' என்ற நிறுவனமும் கலந்து ஒன்றாகி "சௌத் இன்டியன் இரயில்வே" என்ற ஒரு புதிய நிறுவனமாக ஆன பின்னர், தெற்கில் பாதை அமைக்கும் திட்டம் துவங்கப்பட்டது. இந்தக் கம்பெனி லண்டனில் பதிவு செய்யப்பட்டுத் திருச்சிராப்பள்ளியைத் தனது தலைமையகமாகக்கொண்டு செயல்படத் துவங்கியது. ஆரம்பத்தில் அதற்குத் தென்னகத்தில் 1850 மைல் ரயில் பாதை இருந்தது.

சென்னையில் இப்போதிருக்கும் ரயில்வே தலைமையகம் டி. சாமிநாத பிள்ளையென்பவரால் கட்டப்பட்டதாக முத்தய்யா தமது நூலில் கூறுகிறார். அவர்தான் பின்னர் எழும்பூரின் 'சௌத் இன்டியன் ரெயில்வே' அலுவலகத்தையும் கட்டினாரெனக் கூறுகிறார் முத்தய்யா. 17 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட அந்த கட்டிடம் 1908ஆம் ஆண்டில் செயல்படத் துவங்கியது.

திடீரெனப் பெருக ஆரம்பித்த ஜனத்தொகை, போக்குவரத்து முக்கியத்துவத்தை உணர்த்தத் தொடங்கியது. இதன் காரணமாக, சௌத் இந்தியன் ரெயில்வே, பொதுமக்களுக்கு இந்த வகையில் உதவ முன் வந்தது. 1931ஆம் ஆண்டுதான் இது ஒரு வழி கண்டது. தாம்பரத்திற்கும் மெட்ராஸ் பீச் ஸ்டேஷனுக்கும் இடையில், அப்போது போடப்பட்டிருந்த இரயில் லைன் அருகிலேயே இரண்டு வழிப்பாதை அமைத்து மீட்டர் கேஜ் இரயில்களை ஓட்ட ஆரம்பித்தது. மக்கள் நடுவில் இது பெரும் பயனைத் தருவதாக அமைந்தது. படிப்படியாக அந்தப் போக்குவரத்து அதிகரிக்கப்பட்டு, மிக்கப் பயனுள்ளதாக அமைந்தது.

## மெட்ராசில் ஆகாய விமானம்

'ஹிந்து' நாளிதழில் 1911ஆம் வருடம், பிப்ரவரி 3 ஆம் தேதியில் ஒரு செய்தி காணப்படுகிறது. இதில்தான் முதன் முதலாக மதராசபட்டினத்துச் செய்தியில் ஆகாயவிமானம் குறித்துப் பேசப்படுகிறது. அன்றைக்கு முதல் நாள், பெங்களூரில், பேரன் பியர் டி கேடர்ஸ் (Baron Pierre de Caters) என்பவர் 25,000 பார்வையாளர்களுக்கு முன்னர் விமானத்தில் ஆகாயத்தில் பறந்தார். இந்த நிகழ்ச்சி மிஸ் டாசன் என்பவரால் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த நேரத்தில் மதராசபட்டினத்து மனிதர் ஒருவரும் அதைப் பார்க்க நேர்ந்தது. அவர் பெயர் வில்லிஸ்; அடிசன்ஸ் கம்பெனியைச் சேர்ந்தவர்.

இந்த நிகழ்ச்சியால் தாக்கம் பெற்ற சிலரது முயற்சியால், மதராசபட்டினத்தில் இதே போன்ற நிகழ்ச்சி அதே வருடம் அதே மாதம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதைக் குறித்து ஹிந்து ஒரு செய்தியை பிப்ரவரி 15ஆம் தேதி வெளியிட்டது. அதன்படி, ஜே. டைக் என்பவர் தனது விமானத்தில் அப்போதைய மதராஸ் கனவான்களுக்கு முன்னிலையில் பறந்தது ஒரு பெரிய அதிசயமாகப் பார்க்கப்பட்டது. அது பிளெரியாட் (Mr. J Tyck's Bleriot) என்ற கம்பெனியின் விமானம். அங்கிருந்து வந்திருந்த உதவியாளர்கள் அந்த விமானம் சுமார் இருபது கஜம் முன்னோக்கி ஓடி ஆகாயத்தில் மிதக்க ஆரம்பித்தது. ஆனால், காற்று சரியாக இல்லாததால் உடனே இறங்கிவிட்டது. மறுநாள் இந்த டைக் என்பவர் டி ஆஞ்சலிஸ் என்ற ஹோட்டலில் ஒரு விருந்து

ஏற்பாடு செய்திருந்தார். அந்த விருந்தின்போது, சிவகிரி ஜமீந்தார் கலந்துகொண்டார். அப்போது டைக் மறுபடியும் பறந்து காட்டப்போவதாகச் சொன்னார். அதே மாதம் சில நாட்களில் இந்நிகழ்வு நடந்தேறியது. இதையும் ஹிந்து இவ்வாறு குறிப்பிட்டது: (ஹிந்து, பிப்ரவரி 18).

"காலையில் நல்ல கூட்டம் நிறைந்திருக்கையில், சுமார் ஏழு மணியளவில் டைக் தனது விமானத்தை ஓட்ட ஆரம்பித்தார். அப்போதைய கவர்னரும் தனது மனைவியுடன் வந்திருந்தார். எல்லோருடைய முகங்களிலும் ஆச்சரியமும் ஆவலும் நிறைந்திருக்க, அந்த விமானம் 2,400 அடி உயரம்வரை பறந்து திரும்பியது! இது கோட்டையில்தான் நடந்தது. டைக் கவர்னரால் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டார். அன்றிரவு, சிவகிரி ஜமீந்தார் ஒரு விருந்து, டி ஏஞ்சலீஸ் ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தார். அன்றைய விமானத்து எஞ்சின், ஏழு சிலிண்டர்களைக் கொண்டதாக இருந்தது.

விமானம் பறப்பதைப் பார்க்க, அன்றைய கவர்னரும் அவரது மனைவியும், (லாலி தம்பதிகள்) அடிசன் கம்பெனியின் ஆரல் ஜான்சன் காரில் வந்தனர்! டைக்குக்குக் கவர்னர் பதக்கம் அணிவித்தார். இந்தப் பதக்கங்கள் சிவகிரி ஜமீந்தாரால் கொடுக்கப்பட்டது. ஆகையால் மதராசபட்டினம் ரைட் சகோதரர்கள் தமது கிட்டி ஹாக்கில் பறந்த எட்டு வருடங்களுக்குள் மதராசிலும் விமான அரங்கேற்றம் ஆயிற்று!"

**விமான பயிற்சி**

1929ஆம் வருடம் அக்டோபர் ஜி. வியாஸ்டோ என்ற விமானப் பைலட் ஒருவர், மதராசில் விமானப் பயிற்சிப் பள்ளியைத் துவக்க முற்பட்டார். இந்த முயற்சிக்காக பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் இருந்த "மெட்ராஸ் கார்ட்ஸ் இன்ஸ்டிட்யூட்"டில் ஒரு கூட்டம் நடைபெற்றது. சிட்டி என்பவர் தலைமையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில், விங் கமாண்டர் கூப்பர் என்பவர் உரையாற்றினார். அப்போது அந்த முயற்சிக்கு நல்ல வரவேற்பு இருந்தது. 1930ஆம் வருடம் மார்ச்சு மாதம் "மெட்ராஸ் ஃபிளையிங் கிளப்" உருவாகிற்று. ஆறு வணிகர்களும், ஒரு இராணுவ அதிகாரியும், அங்கத்தினர்களானார்கள். அவர்கள் முறையே, டபிள்யூ. எம். ப்ரௌனிங், கே. ஆர். சிம்சன், கேப்டன் பூட்டில் வில்பிராஹிம், ஈ. எஃப். லோமேன், ஜே. எஸ். குட்வின், எஸ். ஏ. ஏ. அண்ணாமலை செட்டியார் மற்றும் ஏ. எஸ். காலிமோர் ஆவர்.

அங்கத்தினர்களாக ஆரம்பத்தில் சேர்ந்தவர்கள் பட்டியலில் பெயர் பெற்றுள்ளவர்கள் 71 பேர்; அதில் 14 இந்தியர்கள் அவர்களில் குறிப்பிடும்படியானவர்கள்: சி. பி. இராமசுவாமி அய்யர், ராவ் பஹதூர் நி.வி. கிருஷ்ணசாமி செட்டி, எஸ்.ஏ.ஏ. அண்ணாமலை செட்டியார், ராவ் பஹதூர் அப்பாசாமி முதலியார், டி. ராஜமன்னார், டி. ராஜகோபால் அய்யங்கார், எஸ். பழனிச்சாமி செட்டியார் மற்றும் கே. கோவிந்தாச்சாரி முதலியோர். நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் முன்னுதாரணம் காட்டியவர்கள் அவர்களில் மூவர் போற்றப்படவேண்டியவர்கள். அவர்கள் முறையே, ஆவுடையப்ப செட்டியார், அண்ணாமலைச் செட்டியார் மற்றும் சோலையப்ப செட்டியார். (ஆவுடையப்ப செட்டியார் இருந்த இடம் கீரைத் தோட்டம் என்றழைக்கப்பட்டது. அங்கு இன்றும் அவரது குமாரனான ராமனாதன் செட்டியார், தன் தந்தையின் பழைய விமானத்தின் எலும்புக்கூடு போன்று காட்சியளிக்கும் பகுதிகளைப் போற்றி வைத்துள்ளார்.

இந்தப் பயிற்சி நிலையத்தின் ஆரம்ப விழா 20ஆம் தேதியன்று நடக்க, முதல் பயிற்சி 21 ஜூலை 1930 அன்று நடந்தேறியது! பிளைட் லெப்டினண்ட் ஹாகர்தான் முதல் பயிற்சியாளர். எம். வி. ஹூல்காப் என்பவர்தான் இஞ்சினீயர். அப்போது கவர்னராக இருந்த பிரெடரிக் ஸ்டான்லி துவக்கி வைக்க அவரது மனைவியார் முதல் பயிற்சி விமானங்களுக்கு முறையே 'கருடா' 'புஷ்பக்' என்ற பெயர்களைச் சூட்டினார்! இந்தப் பயிற்சி நிலையத்தின் முதல் வருடத்திலேயே ஏழு விமானிகள் தேர்வு பெற்றார்கள் என்பதிலிருந்து இவர்களது உண்மை முயற்சி புலப்படும். இந்தக் கிளப்பின் சில நல்ல செயல்பாடுகள்:

1. டாடா கம்பெனி அப்போது நடத்திக் கொண்டிருந்த விமான தபால் சர்வீசுக்கு உதவி.

2. 14 பிப்ரவரி 1936இல், வைஸ்ராய் கோப்பைக்கு இங்கிருந்து போட்டி ஆரம்பிக்க ஏற்பாடுகள்.

3. எவரெட் என்பவரின் கொழும்புவிலிருந்து மதராசுக்கு பறந்த சாதனை.

4. கேப்டன் வி. சுந்தரம் 1935ஆம் வருடத்திலும் புய்யன் 1937லும் அகில இந்திய விமானப் பயணம் செய்தது.

5. டிண்டால் பிஸ்கோ கீழ் பல பைலட்டுகள் பயிற்சி பெற்றது.

ஆரம்ப காலத்தில் எல்லா பயிற்சியாளர்களும் ஆங்கிலேயர்களாகத்தான் இருந்தனர். பின்னர் இந்தியர்களே பயிற்சியாளர்களாகவும் பணியாற்றினர். அவர்களுள் முக்கியமாகக் கருதப்படுகிறவர்கள் திண்டேல் பிஸ்கோவும் பின்னர் வந்த கேப்டன் முகம்மது இஸ்மாயில் கானும், கேப்டன் ராமச்சந்திரனும் கேப்டன் நரேந்திராவும் ஆவர்.

அப்போது ஹவாய் சிப்பாய்கள் என்றழைக்கப்பட்ட பெஷாவரிலிருந்த விமானப்படையில் சேர்வதற்குப் பலர் ஆவலாக இருந்தனர். 1919ஆம் ஆண்டு ஆப்கன் போரில் அங்கிருந்துதான் இவர்கள் பங்கேற்றனர். அது ஒரு பெருமைக்குரிய விஷயமாகக் கருதப்பட்டது. முன்னரே கூறியது போல செட்டிநாட்டார் அதிகமாக இங்கு விமானப் பயிற்சியில் சேர்ந்தனர். இந்த செட்டிநாட்டுப் பிரமுகர்கள் கானாடுகாத்தான் என்ற தமது ஊரில் ஒரு விமானத் தளமும் அமைத்தனர்! (இந்த விமான தளத்தில்தான் பிற்காலத்தில் அளகப்ப செட்டியார் தமது பொறியியல் கல்லூரியை காரைக்குடியில் அமைந்தபோது, பண்டித ஜவஹர்லால் நேருவை தமது ஜூபிடர் விமானக் கம்பெனியின் விமானத்தில் கொண்டு வந்து இறக்கிக் கல்லூரி விழாவுக்கு அழைத்துச் சென்றார்) மூன்று செட்டியார்கள் ஆவுடையப்ப செட்டியார், அண்ணாமலை செட்டியார் மற்றும் சோலையப்ப செட்டியார் விமானங்கள் தாங்களே வாங்கி வைத்துக் கொண்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது. இரண்டாவது உலகப் போரின்போது இந்தத் தளம் போர் விமானங்களுக்காக பயன்படுத்தப்பட்டது. இங்கிருந்துதான் விமானங்கள் மலேசியா, சிங்கப்பூர், டச்சு, கிழக்கு இந்தியத் தீவுகள் முதலிய இடங்களைத் தாக்க அனுப்பப்பட்டன. துரதிருஷ்டவசமாக அதற்குப் பின்னர் எவருமே இந்தத் தளத்தை அதிகம் கவனிக்கவில்லை! இப்போது பரந்த இடம்தான் மிகுந்துள்ளது!

–*'மதராசபட்டினம்'* நூலிலிருந்து



# பால்வினை நோய்களைப் பற்றி தெரிந்துக் கொள்வோம்!

**பா**துகாப்பற்ற உடலுறவினால், நோயுள்ளவரிடமிருந்து மற்றவருக்குப் பரவுவதுதான் பால்வினை நோய்கள், ஏறக்குறைய 30–க்கும் மேற்பட்ட பால்விளை நோய்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்நோய்களில், அபாயகரமான, மிக முக்கிய நோய்களாகக் கருதப்படுபவை "வெட்டை நோய்" (Gonorrthoea), "கிராந்தி" (Syphillis), "கிளமிடியா" (Chalamydia), "எர்பிஸ்" (Genital Herpes) "மருக்கள்" (Genital Warts) "கேண்டைடோஸிஸ்" (Candidosis) "டிரைகோமோனி யாஸிஸ்" (Trichomoniasis) ஆகியவை.

தற்பொழுது அதிக ஆபத்தை விளைவிக்கக் கூடியதாகவும் குணப்படுத்த இயலாததாகவும் உள்ள எய்ட்ஸ் நோயும் ஒரு வகையான பால்வினை நோய்தான். பலவித தொற்று நோய்க்கிருமிகள், உடலுறவின் மூலம் எளிதாகப் பரவ வாய்ப்புள்ளது. பலருடன் உடலுறவு கொள்ளும் நபருடன் உடலுறவு கொண்டால், இன்றில்லாவிடினும், என்றாவது ஒரு நாள் பால்வினை நோய்கள் உங்களை தாக்கக்கூடும். கவனம் தேவை.

ஒருவர் பால்வினை நோயினால் பாதிக்கப்பட்டிருப் பாராயின், எய்ட்ஸ் நோய் வர காரணமான எச்.ஐ.வி கிருமிகள் அவரது உடலுக்குள் எளிதாய் புகுந்து அதிக அளவில் தாக்கவல்லது என நிரூபிக்கப்பட்டுள்ளது.

பால்வினை நோயான கிரந்தி நோய் தாக்கியவரின் இரத்தத்தை உடலினுள் செலுத்தினால், தாயிடமிருந்து கருவிலிருக்கும் குழந்தைக்கும் இந்நோய் பரவும். ஒருவருக்கு உபயோகப்படுத்திய சுத்திகரிக்கப்படாத ஊசியை அடுத்தவருக்கு உபயோகப்படுத்துவதாலும் இந்நோய் பரவும்.

**பால்வினை நோய்களின் அறிகுறிகள் (பெண்களுக்கு)**

- பிறப்புறுப்பில் எப்பொழுதும் இல்லாத அளவுக்கு நீர் அல்லது சீழ் வடிதல், ஒரு வகையான துர்நாற்றம் வீசுதல்.
- பிறப்புறுப்பைச் சுற்றிலும் நமைச்சல், எரிச்சல் அரிப்பு ஏற்படும்.
- அடிவயிற்றிலும் பிறப்புறுப்பிலும் தொடர்ந்து வலி இருத்தல்.
- பிறப்புறுப்பில் மாதவிலக்கு அல்லாத நாட்களிலும் இரத்தம் வடிதல்,
- உடலுறவின்போது தாங்க இயலாத வலி ஏற்படுதல்.

### பால்வினை நோய்களின் அறிகுறிகள் (ஆண், பெண் இருபாலருக்கும்)

- ❖ பிறப்புறுப்பிலும், அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும், வாயிலும் புண்கள், சொறி, சிரங்கு, வீக்கம் முதலானவை வருதல்.
- ❖ சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல், வலி இருக்கும், அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டுமென்ற உணர்வு ஏற்படும்.
- ❖ தொண்டை சிவந்து காணப்படுதல், கழுத்தைச் சுற்றிலும் வீக்கம்.
- ❖ பிறப்புறுப்பிலும் அதன் பக்கங்களிலும் வீக்கம்.
- ❖ ஆண் குறியில் சீழ் வடிதல்.
- ❖ சில வகையான பால்வினை நோய்கள், பெண்களுக்கு எவ்வித அறிகுறிகளையும் வெளிக்காட்டாமல் உடலினுள் வாழும் தன்மை உடையது. (எ.கா) வெட்டை நோய், கிளமிடியா, இந்நோய்கள் இவர்களைத் தாக்கியிருப்பினும், அறிகுறிகள் இல்லாமல் ஆரோக்கியமாக இருப்பது போலவே காணப்படுவர். ஆனாலும், நோய் மற்றவருக்குப் பரவும் சாத்தியக்கூறுகள் உண்டு. கிரந்தி நோயினால் பாதிக்கப்பட்டவர்க்கு சமயத்தில் சரியான சிகிச்சையளிக் காவிடினும் அறிகுறிகள் மறைந்து போய்விடும். நமக்கு நோய் தானாகவே சரியாகிவிட்டது என நாம் எண்ணியிருக்கும் அதே சமயம், நோய் உடலின் பல பாகங்களையும் தாக்கி இருதய நோய், பக்கவாதம், செவிட்டுத்தன்மை போன்ற விளைவுகளை உருவாக்கலாம்.

> “பால்வினை நோய்களை உரிய நேரத்தில் சரியான முறையில் குணப்படுத்தாவிடில் அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தும். இந்நோய்க் கிருமிகள் உடலின் பல பாகங்களிலும் ஊடுருவி, பல அவயங்கனையும் பாதித்து, செயலிழக்கச் செய்யும்.
>
> சிலவகை நோய்கள் பெண்களின் கருவிலிருக்கும் குழந்தையைப் பாதிக்கும். பிரசவத்தின் போதும் கூட குழந்தை பாதிக்கப்படலாம். பால்வினை நோயினால் பாதிக்கப்பட்டால் எச்.ஐ.வி. நோய்க்கிருமிகள் பத்து மடங்கு அதிகம் தாக்கும் என்பது மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். ”

### பால்வினை நோய்கள் பற்றிய பொதுவான மூடநம்பிக்கைகள்

- ❖ பால்வினை நோய்கள் பாதுகாப்பற்ற உடலுறவினால் நோயுள்ளவரிடமிருந்து மற்றவருக்குப் பரவுகிறது என்பதே நிரூபிக்கப்பட்ட உண்மை. ஆனால் இந்நோய்கள் பற்றிய பொதுவான மூடநம்பிக்கைகள் மக்கள் மத்தியில் நிலவி வருகின்றன. இவற்றைக் களைவது நம் கடமையாகும்.
- ❖ பொதுக் கழிப்பிடங்களை உபயோகிப்பதால் இந்நோய் பரவுவதில்லை.
- ❖ நோயுற்றவரைக் கடித்த பூச்சிகள், நம்மைக் கடிப்பதால் இந்நோய் பரவாது.
- ❖ போன ஜென்மத்து பாவம் என்று நினைப்பதெல்லாம் தவறு.
- ❖ சுய இன்பத்தினாலெல்லாம் பரவு வதில்லை.
- ❖ மரங்கள் அடியில் சிறுநீர் கழிப்பதால் வருவதில்லை.
- ❖ உடற்சூட்டை அதிகப்படுத்தும் உணவு வகைகளைச் சாப்பிடுவதல் வருவதில்லை.
- ❖ கடவுளின் சாபத்தினால் இந்நோய் வருவதில்லை.

❖ சூடான சூழ்நிலையில் வேலை பார்ப்பதால் பரவுவதில்லை.

**பால்வினை நோய்களை உரிய நேரத்தில் குணப்படுத்தாவிடில் என்னென்ன விளைவுகள் ஏற்படும் ?**

❖ பால்வினை நோய்களை உரிய நேரத்தில் சரியான முறையில் குணப்படுத்தாவிடில் அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தும். இந்நோய்க் கிருமிகள் உடலின் பல பாகங்களிலும் ஊடுருவி, பல அவயங்களையும் பாதித்து, செயலிழக்கச் செய்யும். சிலவகை நோய்கள் பெண்களின் கருவிலிருக்கும் குழந்தையைப் பாதிக்கும். பிரசவத்தின் போதும் கூட குழந்தை பாதிக்கப்படலாம். பால்வினை நோயினால் பாதிக்கப்பட்டால் எச்.ஐ.வி. நோய்க் கிருமிகள் பத்து மடங்கு அதிகம் தாக்கும் என்பது மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். (எச்.ஐ.வி. கிருமி எய்ட்ஸை பரப்பும் வைரஸ்)

**பால்வினை நோயால் பாதிக்கப்பட்டால் வரும் பின்விளைவுகள்**

❖ மாதக்கணக்கில் தொடர்ந்து அடிவயிற்றில் வலி

❖ பிறப்புறுப்புகளில் கெட்ட நீர், சீழ் ஒழுகியபடி இருத்தல்

❖ மலட்டுத்தன்மை (ஆண், பெண் இருவருக்கும்)

❖ இருதய நோய், முடக்குவாதம்

❖ செவிட்டுத்தன்மை, பேச்சு வராமல் தடுமாறுதல்

❖ மூளைக் கோளாறு, பக்கவாதம்

❖ கருப்பை அல்லாத மற்ற இடங்களில் கருவுறுதல்

❖ கரு கலைதல், பிறந்தவுடன் குழந்தை இறந்து விடுதல், குறைப்பிரசவம்

**பால்வினை நோயிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வது எப்படி ?**

❖ பால்வினை நோயிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதென்பது மிகவும் எளிது. இதற்கு முக்கியத் தீர்வு, ஆணுறை. ஆணுறை உபயோகிப்பதால் பால்வினை நோயை உருவாக்கும் கிருமிகள், வைரஸ்கள், பாக்டீரியாக்கள் உங்களை அணுகாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

❖ உடலுறவின்போது ஆணுறை உபயோகிப்பதால் மட்டுமே உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

❖ உடலுறவின்போது ஒவ்வொரு முறையும் ஆணுறை உபயோகியுங்கள்.

**ஆணுறையை உபயோகிக்க சரியான வழிகள்**

❖ ஆணுறை வாங்கும்போது தயாரிப்பு தேதிக்குட்பட்டதா என சோதித்து வாங்கவும்.

❖ குறைந்த வெப்பம் உள்ள இடத்தில் ஆணுறையை வைக்கவும்.

❖ ஆண் உறுப்பு விறைப்பானபின் ஆணுறையை மாட்டவும்.

❖ ஆணுறையை கிழிந்து விடாமல், ஆண் குறியின் மேல் ஓர் அரை அங்குலம் நீண்டிருக்குமாறு வைத்து (காலுக்கு உறை அணிவது போல்) மாட்டவும்.

❖ உபயோகித்தபின் ஆணுறை நழுவி விடாமலும் விந்து சிந்தி விடாமலும் கவனத்துடன் நீக்கி எரித்தோ மண்ணினுள் புதைத்தோ, கழிவறையில் போட்டுத் தண்ணீர் விட்டோ அப்புறப்படுத்தலாம்.

❖ எக்காரணத்தை முன்னிட்டும், விந்து வெளி வந்தாலும், வராவிட்டாலும் ஒரு முறை உபயோகித்த ஆணுறையை மறுமுறை உபயோகிக்கக்கூடாது.

❖ பாதுகாப்பான உடலுறவினால் பால்வினை நோயிலிருந்தும் எய்ட்ஸ் நோயிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

❖ பால்வினை நோய்களுக்கு மருந்து உண்டு, எளிதில் குணமாக்க முடியும்.

நன்றி: சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சங்கம்.

★ ★ ★




**நெற்பயிரில் பூச்சி மற்றும் நோய் நிருவாக மேலாண் முறைகள்**

மீஞ்சூர் வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர் வளர்ச்சி மற்றும் பூக்கும் பருவத்தில் உள்ளன. குளிர்ந்த தட்பவெப்பநிலை மற்றும் காற்றின் ஈரப்பதம் அதிக அளவில் பரவலாகத் தென்படுகிறது. மேலும் இந்நிலை நீடித்தால் பூச்சி மற்றும் நோய்கள் பெருக வாய்ப்பு உள்ளது. இத்தருணங்களில் வேளாண் பெருமக்கள் தகுந்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு கீழ்க்காணும் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்தி மகசூலில் இழப்பைத் தவிர்க்கலாம்.

**பூச்சி மற்றும் நோய் அதிக அளவில் பரவாமல் இருக்க கடைபிடிக்க வேண்டிய முக்கிய வழிமுறைகள்**

- ❖ பத்தி நடவு செய்யாதவர்கள் நீக்கல் போடுவதன் மூலம் தேவையான வெளிச்சம் பயிரின் தூர்களுக்கு போகும். இதனால் நன்மை செய்யும் பூச்சிகள் அதிக அளவில் பெருகி புகையான்களை உண்ணும் சாத்தியக்கூறு உள்ளது. மேலும் அத்தகைய வயல்களில் மருந்து தெளிப்பது மிகவும் எளிது. எலிகளினால் ஏற்படும் சேதத்தை தவிர்க்கலாம்.
- ❖ பாதிக்கப்பட்ட வயல்களில் உடனடியாக நீரை வடிப்பதன் மூலம் புகையான்கள் ஒரு வயலிலிருந்து மற்றொரு வயலுக்கும் பரவுவதை தவிர்க்கலாம். புல் பூண்டுகள் இல்லாமல் வயலை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். இதனால் பூச்சி மற்றும் நோய் மேலும் பரவுதலைத் தவிர்க்கலாம்.
- ❖ விதை நேர்த்தி செய்து விதைத்தல் அவசியம்.
- ❖ தழைச்சத்தை அளவுக்கு அதிகமாக இடுதல் கூடாது. மேலுரம் இடும்போது தழைச்சத்துடன் 5:1 என்ற விகிதத்தில் யூரியாவுடன் வேப்பம்புண்ணாக்கு கலந்து இடுவது பூச்சி பெருக்கத்தை தவிர்க்கும்.
- ❖ முறையான நீர் மேலாண்மை மிகமிக அவசியம்.

❖ விளக்குப்பொறி அமைத்து (மாலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை) அந்துப் பூச்சிகளைக் கண் காணித்து அழிக்கலாம். வட்டாரத்தில் அனைத்து பகுதி களிலும் மழைக்காலங்களில் நெற்பயிரில் கீழ்க்காணும் பூச்சி நோய்கள் தாக்க வாய்ப்புள்ளது.

**பூச்சி**

1) குருத்துப்பூச்சு 2) இலைமடக்குப் புழு 3) புகையான்

**நோய்கள்**

1) குலை நோய் 2) தண்டு அழுகல் நோய் 3) இலை உரை கருகல் நோய் 4) பாக்டீரியா இலை கருகல் மற்றும் கீற்று நோய் 5) நெல்மணி நிறம் மாறும் (அ) கருகல் நோய்.

மேற்சொல்லப்பட்ட பூச்சி நோய்களில் தற்போது வட்டாரத்தில் அனைத்து பகுதிகளிலும் குருத்துப்பூச்சி இலைமடக்குப்புழு மற்றும் பாக்டீரியா இலைக்கீற்று நோய் தாக்குதல் பரவலாக காணப்பட்டு வருகிறது. இவைகளை கட்டுப்படுத்த கீழ்க்காணும் முறைகளை கடைபிடிக்க வேண்டும்.

கீழ்க்காணும் பூச்சிக்கொல்லி மருந்துகளில் ஏதாவது ஒன்றை வயலில் நீரை வடித்து பயிர் முழுவதும் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும்.

| பூச்சியின் பெயர் | பூச்சி மருந்தின் | ஏக்கருக்கு பெயர் |
|---|---|---|
| இலை மடக்குப்புழு, புகையான் | வேப்பம் பருச்சாறு | 5 % |
| இலை மடக்குப்புழு, புகையான் | குளோரி பைரியாஸ் | 500 மிலி |
| இலை மடக்குப்புழு, கதிர் நாவாய் பூச்சி | டைகுளோர் வாஸ் | 250 மிலி |
| இலை மடக்குப்புழு | புரோபினோ பாஸ் | 400 மிலி |
| குருத்துப் பூச்சி, பச்சைத் தத்துப்பூச்சி குருத்துப்பூச்சி இலைமடக்குப்புழு புகையான், ஆனைக் கொப்பன் | பாஸ் போமிடான் 40 எஸ். எல் | 500 மிலி |



**பாக்டீரியா இலைக்கீற்று நோய்**

கீற்றுகள் நோய் தீவிரம் அடையும்போது இலைகள் பழுப்பு அல்லது மஞ்சள் கலந்த பழுப்பு நிறமாக மாறும், நாளடைவில் இலைகள் கரிந்து மடிந்து விடும்.

**கட்டுப்பாடு**

ஏக்கருக்கு ஸ்டெரெப்டோமைசின் சல்பேட் & டெட்ரா சைக்ளின் 120 கிராம் & காப்பர் ஆக்ஸி குளோரைடு – 500 கிராம் (அ) ஏக்கருக்கு ஸ்டெரெப்டோசைக்ளின் 16 கிராம் & காப்பர் ஆக்ஸி குளோரைடு 500 கிராம் 15 நாட்கள் இடைவெளியில் இரு முறை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா)**

**செம்மை நெல் சாகுபடி**

**செம்மை நெல் சாகுபடியின் அவசியம்**

- ❖ நெல் உற்பத்தியை பெருக்க
- ❖ சிக்கன நீர்ப்பாசனம் மூலம் பாசன நீர் தட்டுப்பாட்டை குறைக்க
- ❖ சாகுபடி செலவை குறைக்க
- ❖ அதிக மகசூல் பெற்று கூடுதல் இலாபம் ஈட்ட

**செம்மை நெல் சாகுபடியின் கோட்பாடுகள்**


- ❖ குறைந்த விதையளவு
- ❖ இளம் நாற்று – அதிகப்படியாக 14 நாட்கள்
- ❖ அதிக இடைவெளியில் சதுர நடவு.
- ❖ கோனோ களைக் கருவி உபயோகித்து மண்ணைக் கிளறி விடுதல்.
- ❖ சிக்கன நீர்ப்பாசன முறையான காய்ச்சலும் பாய்ச்சலும் முறையைக் கையாளுதல்.

**செம்மை நெல் சாகுபடி நாற்றங்கால்**

- ❖ ஒரு ஏக்கர் நடவு செய்ய ஒரு சென்ட் (40 ச.மீ) நாற்றங்கால் போதுமானது.
- ❖ ஒரு ஏக்கருக்கு 2–3 கிலோ விதை போதுமானது.
- ❖ நாற்றங்காலை தோட்டக்கால் அல்லது தொழி (சேறு) முறையில் அமைக்கலாம்.
- ❖ நாற்றங்காலை வயல் மண் அல்லது மண்ணுடன் நன்கு மக்கிய தொழு உரம் கலந்து அமைக்கலாம்.

**செம்மை நெல் நாற்றங்கால் அமைப்பதால் கிடைக்கும் பயன்கள்**

- ❖ குறைந்த விதை அளவு



- ❖ நாற்றங்காலுக்கு இடத்தேவை குறைவு.
- ❖ நாற்றங்கால் பராமரிப்பு செலவு குறைகிறது.
- ❖ நாற்றுக்களை நடவுக்கு எடுத்துச் செல்வது எளிது.
- ❖ எளிதாக ஒற்றை நாற்றுக்களை பாதிப்பின்றி பிரிக்கலாம்.
- ❖ நாற்றின் வேர்களுக்கு பாதிப்பின்றி நடவு செய்யலாம்.
- ❖ நாற்றுக்கள் விரைவாக உயிர் பிடித்து பசுமையாக இருக்கும்.

**செம்மை நெல் சாகுபடி – சதுர நடவு**

- ❖ இளம் நாற்றுக்களை குறைந்தது 25 x 25 செ.மீ. என்ற அளவில் சதுர முறையில் நடவு செய்ய வேண்டும்.
- ❖ ஒரு குத்துக்கு ஒரு நாற்று
- ❖ சதுர முறையில் நடவு செய்ய மார்க்கர் கருவி மூலம் குறியீடுகள் அமைத்து நடவு செய்யவேண்டும்.
- ❖ நாற்றுக்களை ஆழமாக நடாமல் மேலாக நடவு செய்ய வேண்டும்.
- ❖ நாற்றுகளின் வேர்கள் மேல் நோக்கி இல்லாமல் படுக்கை வசத்தில் இருக்குமாறு நடவு செய்யவேண்டும்.

**சதுர நடவு செய்வதால் ஏற்படும் பயன்கள்**

- ❖ பயிர்கள் நன்கு வளர்வதற்குத் தேவையான இடைவெளி கிடைக்கிறது.
- ❖ களைக்கருவியை குறுக்கும், நெடுக்குமாக உபயோகிக்க வழி வகுக்கிறது.
- ❖ பயிர்களுக்குத் தேவையான சூரிய ஒளி, காற்று மற்றும் சத்துக்கள் தடையின்றி கிடைக்கிறது.
- ❖ அதிக தூர்கள் மற்றும் கதிர்கள் மூலம் மகசூல் அதிகமாக கிடைக்கிறது.

**செம்மை நெல் சாகுபடி – களைக்கருவி**

- ❖ கோனோ களைக் கருவி கொண்டு களைகளை அமுக்கி மண்ணை கிளறி விட வேண்டும்.
- ❖ களைக் கருவியினை களையிருந்தாலும் இல்லாவிட்டாலும் நட்ட 10 நாள் கழித்து 10 நாட்களுக்கு ஒரு முறை நான்கு தடவை குறுக்கும் நெடுக்குமாக உபயோகிக்க வேண்டும்.
- ❖ ஒரு நபரே களைக் கருவியினை எளிதாக உபயோகிக்கலாம்.
- ❖ ஒவ்வொரு முறையும் உபயோகிக்க ஒரு ஏக்கருக்கு 2 – 3 ஆட்கள் தேவை.



❖ கோனோ களைக் கருவி – எடை 7.5 கிலோ விலை உத்தேசமாக ரூ.850.

**களைக் கருவி உபயோகிப்பதால் ஏற்படும் பயன்கள்**

❖ களைகளைக் கட்டுப்படுத்தி இயற்கை உரமாக மாற்றுகிறது.

❖ மண்ணை புரட்டி விடுவதால் மண்ணில் அதிக காற்றோட்டம் ஏற்படுகிறது.

❖ பயிர்களில் புதிய வேர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

❖ மேலுரத்தை மண்ணுடன் கலந்து இடுவதால் உர விரயம் தடுக்கப்படுகிறது.

❖ பயிர்களுக்கு ஊட்டச்சத்துக்கள் அதிகம் கிடைக்கிறது.

**செம்மை நெல் சாகுபடி – நீர் நிருவாகம்**

❖ பஞ்சு கட்டும் பருவம் வரை காய்ச்சல் பாய்ச்சல் முறையில் நீர் நிருவாகம் செய்ய வேண்டும். அதாவது 2.5 செ.மீ உயரம் நீர்கட்டி பின்னர் இலேசான கீறல் வெடிப்புகள் தோன்றிய பின் மறுபடியும் 2.5 செ.மீ. நீர் கட்டவேண்டும்.

❖ பஞ்சு கட்டிய பின் 2.5 செ.மீ. நீர் மறைந்தவுடன் மறுபடியும் நீர் கட்டவேண்டும்.

**சிக்கன நீர்ப்பாசனத்தை கடைபிடிப்பதால் ஏற்படும் பயன்கள்**

❖ மண்ணில் காற்றோட்டம் அதிகரிக்கிறது.

❖ வேர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

❖ நீர்த் தேவை 40 – 50 விழுக்காடு குறைகிறது.

**செம்மை நெல் சாகுபடியின் நன்மைகள்**

❖ இளம் நாற்றை நடுவதால் அதிக தூர் பிடிக்கிறது.

❖ பயிர்களின் வளர்ச்சி மற்றும் வேர்களின் வளர்ச்சி அதிகரிப்பதால் பயிர்கள் இறுதிவரை சாய்வதில்லை.


❖ அதிக ஊட்டச்சத்துக்கள் கிடைப்பதால் பயிர்கள் அறுவடை சமயத்திலும் பசுமையாக இருக்கும்.

❖ அதிக தானியம் மற்றும் வைக்கோல் மகசூல் கிடைக்கிறது.

❖ நீரின் தேவை 40 – 50 விழுக்காடு குறைகிறது.

(தரவு : வேளாண்மைத்துறை)

★ ★ ★



# தமிழ் – பிராமி கல்வெட்டுகளின் அமைவிடம்

தமிழ்–பிராமி கல்வெட்டுகள் பெரும்பாலானவை சமணம் தொடர்பானவை. சமண முனிவர்கள் மக்களையும் ஊர்களையும் விட்டு ஒதுக்கி மிக எளிமையாக வாழும் தன்மையினர். இல்லற வாழ்வினைத் துறந்த அம்முனிவர்கள் வாழத் தேர்வு செய்த பகுதிகள் மலைகளில் இயற்கையாய் அமைந்த குகைத்தளங்களாகும். அவர்களது அறநெறி வழிகாட்டலில் ஈர்க்கப்பட்ட மக்கள் அவர்களிடம் பெருமதிப்பு கொண்டமை காரணமாக அவர்கள் வாழ்ந்த குகைத்தளங்களில் எளிமையான கற்படுக்கைகள் அமைப்பதும், மழைநீர் குகைத்தளத்தினுள் செல்லாது வடிந்திட குகைத்தள முகப்புப் பகுதிகளில் நீர்வடி விளிம்புகள் வெட்டிக் கொடுப்பதும், குடிநீருக்காக நீர்ச்சுனைகள் அமைத்துக் கொடுப்பதுமான செயல்களைத் தர்மமாகக் கருதினர். அத்தர்மச் செயல்களைக் கல்வெட்டுகளாகவும் பதிந்தனர். மாங்குளம் கல்வெட்டுகள் இச்செயல்களைத் ‘தம்மம்’, ‘தமம்’ என்ற சொற்களால் குறிப்பிடுகின்றன. நெகனூர்பட்டிக் கல்வெட்டு ‘அறம்’ என்றே குறிப்பிடுகிறது. அதனால் தமிழ்–பிராமி கல்வெட்டுகள் ஊரை விட்டு ஒதுங்கிய பகுதிகளில் சிறிய பெரிய குன்றுகளில் அமைந்த இயற்கைக் குகைத்தளங்களிலேயே இன்று கிடைக்கின்றன.

இக்குகைத் தளங்கள் எளிமையானவை, ஒதுக்குப் புறமானவை. எனினும் அக்குகைத் தளங்களிலிருந்து பார்க்கும் போது அவற்றின் எதிரே மிகப் பரந்த சமவெளியினைக் காணமுடியும். நெடுந்தூரத்து நிகழ்வுகளை நோக்கும் வணிகச் சிறப்புடைய ஊர்களை அடுத்தும் இருப்பதைக் காணலாம்.

அழகர் மலைக் கல்வெட்டு சோழநாட்டிலிருந்த பாண்டி நாட்டிற்கு வரும் அன்றைய பெருவழியில் அமைந்துள்ளது. சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகி ஆகியோருடன் திருவரங்கத்திலிருந்து மதுரை வரும் கௌந்தி அடிகள் அழகர் மலை வழியாக மதுரை வருவதாகவே குறிப்புள்ளது. புகளூர் கல்வெட்டு காவிரிக் கரையில், காவிரியைக் கடக்கும் வசதியான இடத்தில் உள்ளது. அன்று பல்லவருக்கும் பாண்டியருக்கும் இதே இடத்தில் கரையின் இருமருங்கிலும் போர் நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன. சென்ற நூற்றாண்டின் ஐம்பதுகளில் இங்குக் காவிரியின் ஊடே பாலம் வண்ணம் அவற்றின் குறுக்கே எவ்விதத் தடைகளுமில்லாத குகைத்தளங்களாக அவை அமைந்திருப்பதைக் காணலாம். தமிழ்–பிராமி கல்வெட்டுள்ள இடங்கள் பெருவழிகளை அடுத்தும் பண்டையத் தலைநகரங்கள், பெருநகரங்கள் மற்றும்

அமைக்கும் வரை பரிசல் (படகு) போக்குவரத்து இருந்தது. இன்று கன்னியாகுமரியிலிருந்து மதுரை, திண்டுக்கல், கரூர், நாமக்கல், சேலம், பெங்களூர் வழியாகக் கர்நாடகம் செல்லும் பெருவழியும் இவ்விடத்திலேயே ஆற்றைக் கடப்பதும் நோக்கத்தக்கது. கீழவளவு கல்வெட்டு மதுரை–தொண்டிச் (பண்டைய துறைமுகம்) சாலையில் அமைந்துள்ளது. மன்னார்கோயில் கல்வெட்டு திருநெல்வேலிப் பகுதியில் கேரளம் செல்லும் மலைவழிச்சாலைப் பகுதிக்குச் சற்றுத் தொலைவில் உள்ளது.

பாண்டியர் தலைநகரமான மதுரையைச் சுற்றியுள்ள குன்றுகள் பெரும்பாலானவற்றில் தமிழ் பிராமி கல்வெட்டுகள் உள்ளன. சேரர் தமிழ் பிராமி கல்வெட்டுள்ள புகளூர், சேரர் தலைநகரான கரூர் அருகில் உள்ளது. அதியமான் கல்வெட்டுள்ள ஜம்பை மலையைமான்களின் தலைமையிடமான திருக்கோயிலூர் அருகில் உள்ளது. தூசி மாமண்டூர் தொண்டைமான்களின் தலைநகரான காஞ்சிபுரம் அருகில் உள்ளதாகும். திருச்சிராப்பள்ளியில் உள்ள கல்வெட்டு சோழர் தலைநகரான உறையூரை அடுத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்–பிராமி கல்வெட்டுள்ள குன்றுகள் பெரும் ஏரிகள், ஆறுகளை அடுத்து சற்று தொலைவில் உள்ளன. மதுரைப் பகுதியில் உள்ள குன்றுகள் வைகையின் இருமருங்கிலும் அமைந்தவை. காவிரியை அடுத்து புகளூர், ஐயர்மலை திருச்சிராப்பள்ளி ஆகிய தமிழ்–பிராமி கல்வெட்டுள்ள குன்றுகள் உள்ளன. பெண்ணையாற்றுக்கு சற்றுத் தொலைவில் ஜம்பை தமிழ்–பிராமி கல்வெட்டுள்ள குன்றுள்ளது. தாமிரபரணி ஆற்றுக்கு சற்றுத் தொலைவில் மன்னார்கோயில், மறுகால் தலை கல்வெட்டுகள் உள்ளன. அழகர்மலை முதலிய குன்றுகளில் நீர் சுனைகள் இருப்பதும் மாமண்டூர், விக்கிரமங்கலம் முதலிய இடங்களில் பெரும் ஏரிகள் அமைந்துள்ளமையும் இங்கு நோக்கத்தக்கன.

கல்வெட்டுள்ள குகைத் தளங்கள் சிலவிடங்களில் மிகப் பரந்த உட்பகுதியைக் கொண்டவை. அதனால் ஏராளமான கற்படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. கொங்கற்புளியங்குளம் குகைத்தளத்தில் 50க்கு மேற்பட்ட கற்படுக்கைகளைக் காணலாம். தற்பொழுது மாங்குளம் குகைத்தளத்தில் மேடிட்டிருந்த மண்ணை அகற்றியபோது 34 கற்படுக்கைகள் அறியப்பட்டுள்ளன. மாமண்டூர் போன்ற இடங்களில் குகைத்தள உட்பரப்பு மிகக் குறைவானது. அதனால் இரண்டு மூன்று கற்படுக்கைகளே உள்ளன.

குகைத்தளங்களின் உள் உயரம் முகப்புப் பகுதியில் அழகர்மலை, வரிச்சியூர் போன்ற இடங்களில் மிக உயரமானது. இங்குத் தமிழ்–பிராமி கல்வெட்டுக்கள் முகப்புப் பகுதியில் மிக உயரத்தில் உள்ளன. அவற்றைச் சாரங்கள் கட்டியும் ஏணிகள் வைத்துமே விரல் தடவிப் படிக்க இயலும். இவ்விதம் உயரமான முகப்புடைய குகைத்தளங்களில் நீர்வடி விளிம்புகளும் காற்று, வெய்யில், மழைச் சாரல் ஆகியவற்றிலிருந்து தடுப்பு ஏற்படுத்தப்பட்டதுடன், அவற்றின் முன்னதாக கால்கள் நடப்பட்டு பந்தல்கள் அமைக்கப்பட்டன. இதனைப் பலகுகைத் தளங்களின் முகப்பு விளிம்புப் பகுதிகளில் அமைந்த கற்துளைகளும் தரைப்பகுதியில் அமைந்த குழிகளும் காட்டுகின்றன. திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில் தரைப்பகுதியில் பாறையில் சிறிய நீரோடு கால்கள் வெட்டப்பட்டுள்ளன. இவை தரைவழியாக நீர் குகைத்தளத்திற்குள்

செல்லாது அமைக்கப்பட்ட ஏற்பாடுகளாகும்.

இவ்விதம் தமிழ்நாட்டில் சமண முனிவர்கள் வாழும் உறைவிடங்கள் பெருவழிகளிலும் முக்கிய நகரங்களைச் சுற்றியமைந்த குன்றுகளிலும் நல்ல விளைச்சல் பகுதிகளிலும் மேற்சொன்ன எளிமையான வசதிகளுடன் காணப்படுகின்றன. இவ்வகை இடத்தேர்வுகள் இம்முனிவர்கள் சமயத்தைப் பரப்புவதற்கும் அவர்களுக்கு நகரப்பகுதியின் பாதிப்பில்லாமல் இருப்பதற்கும் உதவின. இதுபோன்ற இடங்களிலேயே முனிவர்கள் சிந்தனை செய்து மனிதகுல வரலாற்றிற்கு உதவும் நூற்களை இயற்றியிருக்க வேண்டும். தொடக்க காலத்தில் இக்குகைத்தளங்கள் முனிவர்கள் வாழ்விடங்களாகவே இருந்தன. பின்னர் பொதுமக்களின் வழிபாட்டுத் தலமாக மாறின. இதுபோன்ற இடங்களுக்கு மக்களும் அச்சமயத்தைப் பின்பற்றுவோரும் வந்து முனிவர்களிடம் அறிவுரை கேட்டுத் திரும்பும் சூழ்நிலைகள் உருவாகின.

முனிவர்களது உறைவிடங்கள் கீழ்க்கண்ட பெயர்களில் தமிழ்–பிராமி கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன.

1. பாளிஇய், பாளிய், பாளி
2. அதிட்அனம், அதட்அனம், அதிட்டானம், அதிடானம்.
3. கரண்டை
4. முழாகை, நல்முழஉகை
5. கல்காஞ்சனம்
6. அறுத்த கல், அறுபிதகல்
7. உறை, உறையுள்
8. பள்ளி

பாளி என்பதும் பள்ளி என்பதும் தங்குமிடம், துயிலுமிடம் என்பதைக் குறிக்கும் சொற்களாகும். பாளி என்பது கி.பி. முதல் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட கல்வெட்டுகளில் பள்ளி என்றே குறிப்பிடப்படுகிறது. பள்ளி கொள்முதல் உறங்குதல் என்பதைக் குறிக்கும் கற்படுக்கையே பள்ளி எனப்படுகிறது எனலாம். அதிட்டானம் என்பது அடித்தளம், இருக்கை, வாழ்விடம், புனிதமான இடம் என்பதைக் குறிக்கும் சொல்லாகும்.

இயற்கையான குகைத்தளத்தினை உளியால் செதுக்கி உறைவிடமாக உருவாக்கினர். இது கல்லினை அறுத்துச் செய்த செயல் என்றும் புகளூர் கல்வெட்டு குறிப்பிடுகிறது. ‘அறுபிதகல்’ ‘அறுத்தகல்’ என்று அங்குள்ள முனிவர்களது இருப்பிடம் அழைக்கப்பட்டுள்ளது. ‘கரண்டை’ என்பது முனிவர்கள் உறையும் இடம் என்று தமிழ் நிகண்டுகள் தெரிவிக்கின்றன. இச்சொல் திருமலைக் கல்வெட்டில் உறைவிடத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. வரிச்சியூர், அரிட்டாபட்டியிலுள்ள கல்வெட்டுகள் குகைத்தளம் என்ற பொருளைக் குறிக்கும். ‘முழாகை, முழஉகை’ என்ற சொற்களால் குன்றுகளிலுள்ள குகைளில் வாழ்ந்த முனிவர்களது இருப்பிடங்களைக் குறிக்கின்றன. மறுகால்தலையிலுள்ள கல்வெட்டு இதனைக் கல்லால் செய்த காஞ்சனம் என்று குறிப்பிடுகிறது. மேட்டுப்பட்டியிலுள்ள கல்வெட்டு முனிவர் இருப்பிடத்தை ‘உறை’ என்றும் ஆனைமலையிலுள்ள கல்வெட்டு ‘உறையுள்’ என்றும் அழைக்கின்றன. அய்யனார்குளம் (மன்னார்கோயில்) தமிழ்–பிராமி கல்வெட்டில் முனிவர்கள் இருப்பிடத்தைக் குறிக்கும் ‘பள்ளி’ என்ற சொல் காணப்படுகிறது.

குகைத்தளங்களைப் பொதுவாகக் குறிக்கும் சொல்லோடு குகைத் தளத்தின் பகுதிகளைக் குறிக்கும் சொற்களும் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. அவற்றை உருவாக்கிக் கொடுத்தோர் பற்றியும்

கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. குகைத்தளத்தின் முகப்பிலுள்ள புருவத்தை வெட்டிக் கொடுத்ததைக் கொங்கர்புளியங்குளம் கல்வெட்டுகள் 'குற கொடுபிதவன்' என்றும் 'குறகொடல்கு இத்தவன்' என்றும் குறிப்பிடுகின்றன. அழகர்மலை குகைத்தளத்தின் முகப்பில் வெட்டப்பட்ட நீர்வடி விளிம்பை அல்லது அங்குள்ள சுனையை 'தார் அணி' என்று குறிப்பிடுகின்றது. மாமண்டூரில் தச்சன் ஒருவன் குகைத்தளத்தின் 'ஆசிர் செய்தது பற்றிக் கல்வெட்டு கூறுகிறது. ஆசி என்பது குகைத்தளத்தில் கூரையைத் தாங்கும் பந்தல்கால் குழிகள் (ஆசி–Support Prop) என்று ஐராவதம் மகாதேவன் ஆய்வுக் குறிப்பு தந்துள்ளார். புகளூர் கல்வெட்டில் வரும் 'முன்று' என்ற சொல் குகைத்தளத்தின் முன்பமைந்த முற்றம், முன்றில் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

## தமிழ்– பிராமி கல்வெட்டுகளின் கண்டுபிடிப்புகள்

தமிழகத்தில் இதுகாறும் பல ஊர்களிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ள தமிழ்பிராமி கல்வெட்டுகள் பல அரிய தகவல்களைத் தருகின்றன. இவற்றைக் கண்டுபிடிப்பதிலும், அவற்றைச் சிறப்பான முறையில் படித்துப் பொருள் அறிவதிலும் பல அறிஞர்கள் பெரிதும் உழைத்திருக்கிறார்கள். அதனை இங்கு சுருக்கமாகக் காண்போம்.

## மாங்குளம் கல்வெட்டுகள்

முதன்முதலாக ராபர்ட் சீவல் என்பவர் 1882இல் மதுரைக்கு அருகில் மாங்குளம் என்னும் சிற்றூரில் கழுகுமலை என அழைக்கப்படும் மலையின் குகைகளில் தமிழ்–பிராமி கல்வெட்டுகள் உள்ளன என்று கண்டறிந்தார். இங்குள்ள சமணப்படுக்கைகளைப் பஞ்ச பாண்டவர் படுக்கை என்றும் மக்கள் கூறுவர். கழுகுமலை என்பதற்கு ஓவாமலை என்றும் ஒரு பெயருண்டு. இம்மலைக்கு அருகிலேயே மீனாட்சிபுரம் என்ற ஊரும் இருப்பதால் சிலர் இக்கல்வெட்டுகளை மீனாட்சிபுரம் கல்வெட்டுகள் என்றும் கூறுவர்.

மாங்குளம் என்ற சிற்றூர் மதுரைக்கு வடகிழக்கில் சுமார் இருபது கி.மீ. தொலைவிலும், மேலூருக்கு மேற்கில் 10. கி. மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. முதலில் கண்டறிந்த சீவல் மற்றும் பிரான்சிஸ் ஆகியோர் இங்குள்ள கல்வெட்டுகளை மாங்குளம் கல்வெட்டுகள் என்றே அடையாளம் கண்டனர். ஆனால் 1906–07இல் வெளிவந்த மைய அரசின் தொல்லியல் பரப்பாய்வுத் துறை வெளியிட்ட ஆண்டறிக்கையில் (இ.க. 1906–07) இவற்றை அரிட்டாபட்டிக் கல்வெட்டுகள் எனக் குறித்துள்ளனர். 1919இல் திரு. கிருஷ்ண சாஸ்திரி என்பார் இக்கல்வெட்டுகள் அரிட்டாபட்டி என்ற ஊரில் இல்லை. மாறாக அரிட்டாபட்டிக்கு 6 கி. மீ. தொலைவில் உள்ள மாங்குளம் கல்வெட்டுகளே இவை எனச் சுட்டினார். இதனையடுத்து ஆண்டறிக்கையைப் பின்பற்றி கே. வி. சுப்பிரமணிய அய்யரும், டி.வி. மகாலிங்கமும் அரிட்டாபட்டிக் கல்வெட்டுகள் என்றே மீண்டும் தவறாகக் குறித்தனர். 1966இல் ஐராவதம் மகாதேவன் இவை மாங்குளம் கல்வெட்டுகளே என்று நிலை நாட்டினார். ஆயினும் இரா. நாகசாமி இவற்றை மீனாட்சிபுரம் கல்வெட்டுகள் என்றே தனது நூலில் (1972) குறிப்பிட்டுள்ளார்.

கிருஷ்ண சாஸ்திரியார் இருவேறு கல்வெட்டுகளின் படிகளைத் தவறுதலாக

ஒன்றாகக் கொண்டபடியால், பின்னர் படித்த கே. வி. சுப்பிரமணிய அய்யர், டி. வி. மகாலிங்கம் ஆகியோரும் இக்கல்வெட்டுகளைச் சரியாகப் படிக்கவில்லை. இவை நேரடியாக கல்வெட்டுகளைச் சென்று பார்க்காது மைப்படிகளைக் கொண்டே ஆய்வு செய்வதில் உள்ள பெரிய குறைபாடாகும். ஐராவதம் மகாதேவன் மேற்கொண்ட நேரடிக்கள ஆய்வின் காரணமாக இக்குறைபாடு களையப்பட்டுச் சரியான வாசிப்பு பெறப்பட்டது.

## எடக்கல் கல்வெட்டுகள்

கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில் சுல்தான் பத்தேரி என்னுமிடத்திற்குத் தென்மேற்கில் 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது எடக்கல் குன்று. கடல் மட்டத்திலிருந்து 4,000 அடி உயரமுள்ள இக்குன்றில் 1894இல் மலபார் மாவட்டத்தில் காவல்துறை கண்காணிப்பாளராகப் பணியாற்றிய பாவீட் என்பவர் ஒரு குகையைக் கண்டறிந்து அதில் இருந்த கல்வெட்டுகளையும் பாறைக் கீறல்களையும் புகைப்படமெடுத்தும், வரைந்தும் அரசு கல்வெட்டாய்வாளர் உல்ட்சு அவர்களுக்கு அனுப்பிவைத்தார். உல்ட்ஸ் உடனடியாக அவற்றைப் படி எடுக்க ஏற்பாடு செய்து அவை பற்றிய ஒரு சிறு குறிப்பை 1896–97ஆம் ஆண்டறிக்கையில் (இ.க. 1896–97) வெளியிட்டார். இதன் அடிப்படையில் 1901ஆம் ஆண்டு பாவீட் அவர்களும் ஒரு கட்டுரையை வெளியிட்டார். உல்ட்ஸ் இங்கு நான்கு குகைக்கல்வெட்டுகள் உள்ளன என்றும் அவற்றில் இரண்டு படிக்க இயலாதவாறும் ஒன்று தமிழிலும் மற்றொன்று சமஸ்கிருதத்திலும் இருப்பதாகவும் கூறியள்ளார்.

சுமார் ஒரு நூறு ஆண்டுகாலம் மறந்து போய்விட்ட இக்கல்வெட்டுகளை 1995–96இல் ஐராவதம் மகாதேவன் தலைமையிலான குழுவினர்கள் மீளாய்வு செய்து மேலும் இரண்டு புதிய கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர். எனினும் பழைய இருகல்வெட்டுகள் உருகுலைந்து படிக்க இயலாது போய்விட்டன.

## கீழவளவு கல்வெட்டு

மதுரைக்கு வடகிழக்கே 38 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சிற்றூர் கீழவளவு. 1903இல் வெங்கோபராவ் என்பவர் இங்கிருக்கும் மலையில் உள்ள குகையின் மேல் முகட்டில் ஒரு தமிழ்–பிராமி கல்வெட்டிருப்பதைக் கண்டறிந்தார். முக்கியத்துவம் வாய்ந்த இக்கல்வெட்டு பற்றி 1909 வரை வெளியிடப்பட்ட ஆண்டறிக்கைகளில் வெங்கையா மற்றும் கிருஷ்ண சாஸ்திரி ஆகியோர் எதுவும் குறிப்பிடவில்லை. 1910இல் வெளியிடப்பட்ட அறிக்கையில் கிருஷ்ணசாஸ்திரி இக்கண்டுபிடிப்பைப் பற்றிக் குறித்துள்ளார். முதன்முதலாக இதன் மைப்படி 1967இல் டி.வி. மகாலிங்கம் அவர்களால் வெளியிடப்பட்டது. இக்கல்வெட்டு வலமிருந்து இடமாகவும் எழுத்துக்கள் தலைகீழாகவும் வெட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சரியான வாசிப்பு ஐராவதம் மகாதேவன் நூலில் (2003) வெளியிடப்பட்டுள்ளது.

## அடுத்தடுத்த கண்டுபிடிப்புகள்

மேட்டுப்பட்டி என்னும் சிற்றூர் மதுரைக்கு வடமேற்கே 40 கி.மீ. தொலைவில் உள்ளது. 1906இல் பிரான்சிஸ் என்பவரால் இங்குள்ள தமிழ்–பிராமி கல்வெட்டுகள் சில கண்டறியப்பட்டன. இதே ஆண்டில் திருநெல்வேலி உதவி மாவட்ட ஆட்சியர் கெமைடு என்பவரால் மறுகால்தலை என்னுமிடத்தில்

ஒரு கல்வெட்டு கண்டறியப்பட்டது. கே. வி. சுப்பிரமணிய அய்யர் மதுரைக்கு அருகிலுள்ள ஆனைமலையில் இதே ஆண்டில் ஒரு கல்வெட்டைக் கண்டறிந்தார். இவர் 1906இல் மாங்குளத்தைப் பார்வையிட்டு மீண்டும் சில கல்வெட்டுகளை அறிந்தார். 1908இல் வெங்கய்யா மேட்டுப்பட்டியில் மேலும் சில கல்வெட்டுகளைக் கண்டறிந்தார். வரிச்சியூர், திருப்பரங்குன்றம், அழகர்மலை ஆகிய இடங்களில் 1908இல் சில கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. குன்றக்குடிக் கல்வெட்டு 1909இலும், கொங்கற்புளியங்குளம், முத்துப்பட்டி ஆகிய ஊர்களில் 1910 ஆம் ஆண்டும் கருங்காலக்குடியில் 1911 இலும், சித்தன்னவாசலில் 1914 இலும் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. வரிச்சியூர்க் கல்வெட்டுகள் மதுரை மாவட்ட கூடுதல் நீதிபதி திரு. விபெர்ட் அவர்களாலும், கருங்காலக்குடிக் கல்வெட்டு மதுரை மாவட்ட ஆட்சியராலும் கண்டறியப்பட்டன. புதுக்கோட்டையில் கல்வித்துறை அலுவலராகப் பணியாற்றிய திரு. ராதாகிருஷ்ண அய்யர் சித்தன்னவாசல் கல்வெட்டைக் கண்டறிந்தார். மற்றவை மைய அரசின் கல்வெட்டாய்வாளர்களால் கண்டறியப்பட்டன. கே. வி. சுப்பிரமணிய அய்யர் நடுமுதலைக்குளம், விக்கிரமங்கலம் (உண்டாங்கல்) கல்வெட்டுகளையும், கிருஷ்ணசாஸ்திரி கொங்கற்புளியங்குளம் கல்வெட்டுகளையும் கண்டுபிடித்தனர். இக்கண்டுபிடிப்புகளுக்குப் பிறகு இவற்றைப்பற்றிய ஆய்வுகளிலும் வெளியீடுகளிலும் கவனம் செலுத்தப்பட்டது. அதன் பயனாக கிருஷ்ணசாஸ்திரியும் (1919) கே. வி. சுப்பிரமணிய அய்யரும் (1924) தங்களது ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டு அடுத்தக்கட்ட ஆய்வுகளுக்கு அடித்தளம் அமைத்தனர்.

அடுத்த நாற்பது ஆண்டுகால இடைவெளியில் ஐந்து ஊர்களில் 17 கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. இவை விக்கிரமங்கலம், திருப்பரங்குன்றம், புகழூர், திருச்சி, மாமண்டூர் ஆகிய இடங்களில் நடுவண் அரசின் கல்வெட்டாய்வாளர்களால் கண்டறியப்பட்டவையாகும். விக்கிரமங்கலம் கல்வெட்டுகள் 1927 இலும் புகழூரில் 1928 இலும், திருச்சியில் 1938 இலும் மாமண்டூரில் 1943 இலும், திருப்பரங்குன்றத்தில் 1952 இலும் இக்கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. புகழூரில் 1963–64 இல் முன்னர் கல்வெட்டு கண்டு பிடிக்கப்பட்ட அதே குகையில் மேலும் இரண்டு கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றை ஐராவதம் மகாதேவன் 1965இல் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து சரியான வாசிப்புகளை ஆய்வு உலகிற்கு வழங்கினார்.

இத்தருணத்தில் இக்கண்டுபிடிப்புகளை மீளாய்வு செய்யும் முயற்சியில் கல்வெட்டாய்வாளர்கள் ஈடுபட்டனர். அதன் விளைவாக, மேலும் சில புதிய கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர். மாங்குளம், முத்துப்பட்டி, அழகர்மலை, விக்கிரமங்கலம், புகழூர் ஆகிய இடங்களில் முன்னர் கண்டது தவிர மேலும் சில கல்வெட்டுகள் கிடைத்தன. இக்காலத்தில் வரலாற்று ஆய்வில் ஆர்வம் கொண்ட பல பேராசிரியர்களும் புதிய கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர். அறச்சலூரில் 1961–62இல் திரு. எம். எஸ். வெங்கடசாமி மற்றும் ஈரோடு புலவர் செ. இராசு ஆகியோர் ஒரு கல்வெட்டைக் கண்டறிந்தனர். திருவாதவூரிலும்

குன்றக்குடியிலும் 1965–66 இல் ஐராவதம் மகாதேவன் கல்வெட்டுகளைக் கண்டறிந்தார். தமிழ்நாடு அரசு தொல்லியல்துறையின் அலுவலர் மா. சந்திரமூர்த்தி அய்யர்மலையில் ஒரு கல்வெட்டை 1973–74இல் கண்டுபிடித்தார். சென்னை மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் கே.வி. ராமன் மற்றும் எ. சுப்பராயலு ஆகியோரால் அரிட்டாபட்டியில் 1971இல் ஒரு கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. விக்கிரமங்கலம், முதலைக்குளம் கிராமங்களில் கிப்ட் சிரோமணி மற்றும் ஜெபராஜன் ஆகியோர் 1978–79இல் சில கல்வெட்டுகளைக் கண்டனர். தருமபுரி மாவட்டம் கடத்தூரைச் சேர்ந்த தமிழாசிரியர் புது. பொ. வெங்கட்ராமன் சேலத்தை அடுத்த அம்மன் கோயில்பட்டியில் சுனை ஒன்றுக்கு அருகில் 1979–80 இல் ஒரு கல்வெட்டைக் கண்டுபிடித்தார்.

கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் சில புதிய இடங்களில் தமிழ்–பிராமி கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அலுவலர்களும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்களும் இக்கண்டுபிடிப்புகளில் முக்கியப் பங்கு வகித்துள்ளனர். கே. செல்வராஜ் என்னும் மாணவர் 1981இல் திருக்கோயிலூருக்கு அருகில் உள்ள ஜம்பை என்னுமிடத்தில் அதியமான் நெடுமான் அஞ்சியின் பெயருடன் கூடிய கல்வெட்டு ஒன்றைக் கண்டுபிடித்தார். இக்கல்வெட்டு ‘சத்யபுத்ர’ என்னும் பிரிவினர் யார் என்பதற்கு விடையளிக்கும் வகையில் அமைந்த மிக முக்கியமான கண்டுபிடிப்பாகும். சிவகங்கை மாவட்டம் திருமலையில் 1989இல் தமிழகத் தொல்லியதுறையின் அலுவலர்கள் சு. இராசகோபால், வெ. வேதாசலம், சொ. சாந்தலிங்கம் ஆகியோர் புதிய கல்வெட்டுகள் இரண்டைக் கண்டனர். 1991 இல் மா. சந்திரமூர்த்தி தொண்டூர் என்னுமிடத்தில் ஒரு புதிய கல்வெட்டைக் கண்டறிந்தார். நெகனூர்ப்பட்டி என்னும் ஊரில் 1992 இல் சு. இராசவேலு மற்றும் சி. வீரராகவன் ஆகியோர் ஒரு கல்வெட்டைக் கண்டனர். புதுக்கோட்டையை அடுத்துள்ள குடுமியான்மலையில் 1981இல் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அலுவலர்கள் பொ. இராசேந்திரன், சொ. சாந்தலிங்கம் ஆகியோர் ஒரு கல்வெட்டைக் கண்டனர். ஆனால் அதில் ஒரு சில எழுத்துக்களை மட்டுமே அப்போது அவர்களால் படிக்கமுடிந்தது. அவர்கள் அளித்த தகவலின் அடிப்படையில் ஐராவதம் மகாதேவனின் குழு 1999இல் அக்கல்வெட்டை முழுமையாகப் படித்து அறிந்தது.

திருநெல்வேலி மாவட்டம் மன்னார்கோயிலுக்கு அருகிலுள்ள அய்யனார்குளம் என்னுமிடத்தில் குற்றாலம் கல்லூரி ஆய்வு மாணவி மனோகரி கொடுத்த தகவலின் பேரில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அலுவலர்கள். மா. செந்தில் செல்வக் குமரனும், சொ. சந்திரவாணனும் இரு கல்வெட்டுகளைக் கண்டுபிடித்து வெளிப்படுத்தினர். இவைதவிர 2004இல் மதுரை மாவட்டம் அரிட்டாபட்டியில் முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கு மிக அருகிலேயே தமிழ்நாடு அரசு தொல்லியல்துறையின் மதுரைப்பிரிவு அலுவலர்கள் பொ. இராசேந்திரன், வெ. வேதாசலம், சொ. சாந்தலிங்கம் ஆகியோர் புதிய கல்வெட்டை ஒன்றைக் கண்டனர்.

ஐராவதம் மகாதேவன் 2003இல் வெளியிட்ட 'Early Tamil Epigraphy' என்ற ஆங்கில நூலில் அரிட்டாபட்டியில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கல்வெட்டு ஒன்றைத் தவிர மற்ற அனைத்தும் வெளியிடப்பட்டு விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன. நூல் வெளிவந்த பிறகு கண்டறியப்பட்ட கல்வெட்டு அரிட்டாபட்டி இரண்டாம் கல்வெட்டாகும்.

இன்னும் ஆய்வாளர்களின் பார்வைக்குச் சிக்காத கல்வெட்டுகள் எங்கேனும் இருக்கக் கூடும். எதிர்கால ஆய்வாளர்களின் முயற்சிகளால் அவை வெளிப்படவும் வாய்ப்புள்ளது.

தமிழ்–பிராமி கல்வெட்டு கண்டுபிடிப்புகள்

(ஆண்டு வரிசையில்)

1882 மாங்குளம்

1894 எடக்கல்

1903 கீழவளவு

1906 மேட்டுப்பட்டி

1906 மறுகால்தலை

1906 யானைமலை

1906 மாங்குளம் (கூடுதல் கல்வெட்டு)

1908 வரிச்சியூர்

1908 மேட்டுப்பட்டி

1908 திருப்பரங்குன்றம்

1908 அழகர்மலை

1909 குன்றக்குடி

1910 முத்துப்பட்டி

1910 கொங்கர்புளியன்குளம் (கூடுதல் கல்வெட்டு)

1911 கருங்காலக்குடி

1914 சித்தன்னவாசல்

1926 விக்கிரமங்கலம்

1928 புகளூர்

1938 திருச்சிராப்பள்ளி (கூடுதல் கல்வெட்டு)

1940 மாமண்டூர்

1952 திருப்பரங்குன்றம் (கூடுதல் கல்வெட்டு)

1962 அரச்சலூர்

1964 புகளூர் (கூடுதல் கல்வெட்டு)

1964 மாங்குளம் (கூடுதல் கல்வெட்டு)

1964 விக்கிரமங்கலம்

1965 திருவாதவூர்

1971 அரிட்டாபட்டி

1974 ஐயர்மலை

1978 விக்கிரமங்கலம் (கூடுதல் கல்வெட்டு)

1978 முதலைகுளம்

1979 அம்மன்கோயில்பட்டி

1981 ஜம்பை

1986 மேட்டுப்பட்டி

1989 திருமலை

1991 தொண்டூர்

1991 குடுமியான்மலை

1992 நெகனூர்பட்டி

1996 எடக்கல்

2000 மன்னார்கோயில்

2003 அரிட்டாபட்டி

(கூடுதல் கல்வெட்டு)

**தமிழ்–பிராமி எழுத்துக்கள்**

தொல் மாந்தர் நிகழ்ந்த நிகழ்வுகளை நினைவுபடுத்திக் கொள்ளவும், தங்கள் எதிரில் இல்லாதவர்க்கு காலம்–இடம் கடந்து செய்தி தரவும், தங்கள் மனதில் பதிந்த மாந்திரீக நம்பிக்கைகளை வெளிப்படுத்தவும், படங்களையும், குறியீடுகளையும் எதேச்சையாக வரையத் தொடங்கினர். இதுவே எழுத்துக்களின் உருவாக்கத்திற்கு அடித்தளமிட்டது. காலம் கடக்கக் கடக்க எழுத்து மனிதனது பட்டறிவை அடுத்த தலைமுறைக்கு மேலெடுத்துச் செல்லும் ஊடகமாகப் பயன்படத் தொடங்கியது. படங்களும் குறியீடுகளும் சித்திரம், சித்திர எழுத்து கருத்தெழுத்து, ஒலி எழுத்து என ஒன்றடுத்து ஒன்றாகப் பரிணமித்து இன்று நடைமுறையில் உள்ள அகர வரிசை எழுத்துக்களாயின.

இந்திய அளவில் பாறை ஓவியங்கள் தொன்மையானவை. தமிழகத்தில் தருமபுரி, கோயம்புத்தூர், விழுப்புரம், மதுரை, விருதுநகர் எனப் பல மாவட்டங்களில் பாறை ஓவியங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இந்திய அளவில் தொன்மையான எழுத்துக்கள் எனப்படுபவை இதுவரை படித்தறிய முடியாதிருக்கும் சிந்துவெளி எழுத்துக்களாகும். தமிழகத்தில் பானை ஓடுகளில் காணப்படும் கீறல் குறியீடுகள் தொன்மையானவை. சில கீறல்களுக்கும் சிந்துவெளி எழுத்துக்களுக்கும் ஒற்றுமை காணப்படுகிறது. தமிழ்பிராமி எழுத்துக் கீறப்பட்ட பானை ஓடுகளும், இவ்வகைக் குறியீட்டு கீறல் உடைய பானை ஓடுகளும் அகழாய்வுகளில் கிடைத்துள்ளன. இவ்வகழாய்வுகளில் குறியீடுகள் கீழடுக்கிலும், தமிழ்–பிராமி எழுத்துக்கள் மேல் மண் அடுக்கிலும் கிடைப்பதால் ஒன்றடுத்து ஒன்றாகக் காலக்கணிப்பும், குறியீட்டிலிருந்து எழுத்து வந்தது என்றும் குறியீடுகள் பயன்பாடு குறைந்து எழுத்துக்கள் பயன்பாட்டிற்கு வந்தன என்றும் கருத இடமேற்படுகிறது.

இந்திய அளவில் இன்றுள்ள பல்வேறு எழுத்துக்களுக்கு முன்னோடியாக விளங்குபவை கரோஷ்டி, பிராமி என்ற இரு தொன்மை எழுத்துக்களேயாகும். பெருமளவு இன்று வழக்கிலுள்ள இடமிருந்து வலமாக எழுதும் எழுத்துக்களுக்கு முன்னோடி பிராமி எழுத்தாகும். வலமிருந்து இடமாக எழுதும் அரபி, பாரசீகம் முதலிய எழுத்துக்களுக்கு முன்னோடி கரோஷ்டியாகும்.

பிராமி எழுத்து இந்திய அளவில் பரவலாகப் பெருமளவில் பயன்பாட்டில் இருந்ததால் வட்டார மொழி உச்சரிப்புகளுக்கு ஏற்ப சொற்ப வரிவடிவ வேறுபாடுகளுடன் பயன்படுத்தப்பட்டது. எனினும் அடிப்படையில் வரிவடிவ வேறுபாடுகள், உச்சரிப்பு வேறுபாடுகள் உள்ளன. எனவே ஐராவதம் மகாதேவன் பின்வருமாறு பெயர் கொடுத்து வகைப்படுத்துகின்றார்.

பிராமி : சிந்துவெளி எழுத்துக்கள் நீங்கலாக இந்திய எழுத்துக்களில் முதற்கட்ட எழுத்தைக் குறிக்கும் பெயர். இந்நிலையில் அசோகன் கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்துக்கள் அசோகன்–பிராமி என்றும் பிற மௌரியர் கல்வெட்டுகளில் உள்ளவை மௌரிய–பிராமி என்றும் பெயர் பெறும்.

வடபிராமி: மௌரியர் காலத்திற்குப் பிறகு வடமேற்கு, வடகிழக்கு, நடுப் பகுதிகள் உள்ளடங்கிய வட இந்தியப் பகுதியில் விளங்கிய எழுத்து வட–பிராமி எனப்படும்.

தென்பிராமி: மௌரியருக்குப் பிறகு மேற்குத் தக்காணம் உள்ளடங்கிய தக்காணப் பகுதியில் விளங்கிய எழுத்து தென்–பிராமி எனப்படும். எனினும் தக்காணத்தில் அடங்கிய பட்டிபுரோலுவில் தனித்துக் காணப்படும் பிராமி எழுத்து இதனில் சேராது.

பட்டிபுரோலு பிராமி : ஆந்திரப் பிரதேசத்தில் பட்டிபுரோலு என்ற இடத்தில் பௌத்த ஸ்தூபியில் அறியப்பட்ட கற்பேழைகளில் எழுதப்பட்டுள்ள தனிப்பட்ட வகை பிராமி எழுத்து பட்டிபுரோலு–பிராமி என்று பெயர்பெறும்.

சிங்கள–பிராமி: இலங்கையில் குகைத்தளங்களில் சிங்கள–பிராகிருத மொழிக்கேற்ப எழுதப்பட்ட பிராமி வகை எழுத்துக்கள் சிங்கள–பிராமி எனப் பெயர் பெறும்.

தமிழ்–பிராமி: தமிழகத்தில் தமிழ் மொழியினை எழுதப் பயன்படுத்தப்பட்ட தொன்மையான எழுத்து தமிழ்–பிராமி எனப்படும். இவ்வெழுத்து மற்ற பகுதிகளில் வழங்கிய பிராமி எழுத்துப் போலல்லாது இந்திய–ஆரியமல்லாத திராவிட மொழிகளை எழுதமட்டுமே பயன்பட்ட எழுத்தாகும். இதனைக் கருத்தில் கொண்டே பண்டைய சமண பௌத்த சமயம் சார்ந்த நூல்களான 'பண்ணவாணாசுத்த' 'சமவயங்க சுத்த', 'லலிதவிஸ்தர' ஆகியவை இவ்வகைத் தனி எழுத்தை 'தாமிழி' 'திராவிடீ' என்று பெயர் குறிப்பிட்டுச் சுட்டுகின்றன.

பிற ஆய்வாளர்கள் தொன்மையான தமிழ் எழுத்தைத் 'தமிழி' என்றும், 'பண்டைத் தமிழ் எழுத்துக்கள்' என்றும் அழைத்திட வேண்டும் என்று வலியுறுத்துவர். எனினும் இந்நூலில் அண்மையில் வெளிவந்த ஐராவதம் மகாதேவன் நூலின் அடிப்படையில் தமிழ்–பிராமி என்ற பெயர் பயன் படுத்தப்படுகிறது.

தமிழ்–பிராமி எழுத்துக்கள் தமிழகத்தில் 30 ஊர்களில் மலை சார்ந்த குகைத்தளங்களில் அறியப்பட்டுள்ளன. 30 இடங்களில் 90 கல்வெட்டுகள் அறியப்பட்டுள்ளன. குறைந்தது ஒரு கல்வெட்டு. அதிகபட்சம் 12 கல்வெட்டுகள் என இவை இந்த 30 இடங்களில் கிடைக்கின்றன.

தமிழ்–பிராமி கல்வெட்டுகள் காணப்படுமிடங்கள் சிறுகுன்றுகள் மற்றும் உயர்ந்த மலைகளில் இயற்கையாக அமைந்த குகைத்தளங்களாகும். குகைத்தளங்களில் கற்படுக்கைகள் அமைத்தும் குகைகளின் உள்ளே மழை நீர் சென்றுவிடாது நெற்றிப்பகுதிகளில் புருவம் வெட்டியும் தமிழ்–பிராமி கல்வெட்டுகளைப் புருவத்தின் கீழும், மேலும், படுக்கையிலும் பொறித்துள்ளனர்.

பாறைக் கல்வெட்டுகள் தவிர ஏராளமான பானை ஓடுகளில் தமிழ்–பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. தொன்மைச் சிறப்புடைய இடங்களில் மேற்பரப்பாய்விலும், அகழாய்விலும் கிடைத்துள்ள இவை மண் பானை ஓடுகளில் உள்ளவை. ஆதலால் பெரும் பகுதி உடைந்துள்ளன. முழுமையான வாசகங்களுடன் காணப்படவில்லை. மேலும் ஆற்றுப்படுகைகளிலும், தற்செயலாக வெளிப்படும் புதையல்களிலும் கிடைத்திடும் காசுகள், மோதிரங்கள், முத்திரைகள் ஆகியவற்றிலும் தமிழ்–பிராமி எழுத்துச் சொற்கள் காணப்படுகின்றன. கடல் கடந்து எகிப்து, தாய்லாந்து, இலங்கை ஆகிய இடங்களிலும் பானை ஓடுகள், பொற்கொல்லரின் உறைகள், காசுகள் ஆகியவற்றிலும் தமிழ்–பிராமி எழுத்துக்கள் கிடைக்கின்றன.

**காலம்**

இவ்வெழுத்துக்களின் காலம் அசோகனது

எழுத்துக்களுக்கு முற்பட்டது எனப் பல்வேறு விவாதங்கள் நிகழ்ந்துள்ளன. அண்மையில் ஐராவதம் மகாதேவன் தனது நூலில் தமிழ்–பிராமி எழுத்துக்களின் வளர்ச்சியினை இரண்டு நிலைகளாகப் பகுத்துள்ளார். முதல் நிலை முற்காலத் தமிழ்–பிராமி, கிறித்து பிறப்பதற்கு முந்திய இரு நூற்றாண்டுகள் மற்றும் கிறித்து பிறந்து முதல் நூற்றாண்டு எனவும் இரண்டாம் நிலை (பிற்காலத் தமிழ்–பிராமி) கி.பி. 2–4 ஆகிய நூற்றாண்டுகள் என்றும் ஆய்வு முடிவு தந்துள்ளார். இக்காலப்பகுப்பிலும் காலத் தொன்மையிலும் பல விவாதங்கள் எழுந்துள்ளன. இருந்தபோதிலும் அவ்விவாதங்கள் அவரது கருத்தின் அடிப்படையில் ஏற்படுவதால் அவரது காலப்பகுப்பே இந்நூலில் காட்டப்படுகிறது. அவர் தனது அண்மை நூலில் சொல்லியுள்ள காலப்பகுப்பு அவர் முன்பு குறிப்பிட்ட கி.மு. 3 ஆம் நூற்றாண்டு என்ற கருத்திலிருந்து முன்னெடுத்து அவரால் கி.மு. 2ஆம் நூற்றாண்டு எனத் திருத்தப்பட்டுள்ளது என்பதும் இங்குக் குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

**எழுத்துக்கள்**

தொல்காப்பியரின் எழுத்ததிகார முதல் நூற்பா

எழுத் தெனப்படுப


அகரமுதல னகர இறுவாய்

முப்பஃ தென்ப

என்று உயிர்–12, மெய்–18 ஆக 30 எழுத்துக்கள் என்று வரையறுத்துள்ளது. ஆனால் தமிழ்–பிராமி கல்வெட்டுகளில் உயிர் எழுத்துக்களில் 12 வடிவங்களும் இல்லை. மெய் எழுத்துக்களின் 18 வடிவங்களும் உள்ளன.

**உயிரெழுத்துக்கள்**

உயிரெழுத்துக்கள் பின்வருமாறு எட்டு வடிவங்களில் மட்டுமே உள்ளன.



**அ ஆ இ ஈ உ ஊ எ ஒ**

இவற்றில் ஈ எழுத்தின் வடிவம் ‘இகரத்தைக் குறிக்கவும் பயன்பட்டுள்ளது. ‘ஐ’க்கான வடிவம் கிடைக்கவில்லை. எனினும் ‘ஐ’ இணைந்த உயர்மெய் எழுத்துக்கள் உள்ளன. ‘ஃ’ எழுத்து வடிவம் கிடைக்கவில்லை. அதுபோல ‘ஔ’ விற்கான வடிவமும் கிடைக்கவில்லை, எ,ஏ இரண்டிற்கும் ஒரு வரி வடிவமே உள்ளது. அதுபோலவே ஒ, ஓ இரண்டிற்கும் ஒரு வரி வடிவமே உள்ளது.

**மெய் எழுத்துக்கள்**

மெய் எழுத்துக்களின் வரி வடிவங்கள் பின்வருமாறு தமிழ் பிராமி கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.




*கஙசஞடணதநபமயரலவழளறன*

**உயிர்மெய் எழுத்துக்கள்**

பொதுவாகத் தமிழ்–பிராமி உயிர்மெய் வடிவங்களைப் பின்வருமாறு காணலாம். மெய் ‘க்’ உயிர் எழுத்துக்கள் இணைந்து இவ்வாறு இருக்கும்.



இது போலவே பிற மெய்யெழுத்துக்களுடன் உயிர் எழுத்துக்கள் சேர்ந்து எளிமையான இடது–வலது, மேல்–கீழ் பக்கக் கோடுகளால் உணர்த்தப்படும்.




*புள்ளி இல்லா எல்லா மெய்யும்*
*உருவு உருவு ஆகி அகரமோடு உயிர்த்தலும்*
*ஏனை உயிரோடு உருவு திரிந்து உயிர்த்தலும்*
*ஆ ஈர் இயல உயிர்த்தல் ஆறே*

என்று கூறி, புள்ளியில்லாத மெய்யெழுத்துக்கள் அகரமோடு ஒலிக்கும் போது அதே வடிவாக அமையும் பாங்கினையும், ஏனைய உயிர்களோடு ஒலிக்கும் போது வடிவம் திரிந்து அமைவதையும், தெளிவாக்குகிறார் தொல்காப்பியர். இதன்படி, தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களில், அகரக் குறிலுக்கு எவ்விதக் குறியும் இடாமலும், ஆகார நெடிலுக்கு ஒரு கோடு மட்டும் இட்டும், மற்றவற்றில் குறிலுக்கு ஒரு கோடும், நெடிலுக்கு இருகோடுகளிட்டும் எழுதியுள்ளதைப் பல கல்வெட்டுக்களில் காணலாம். அகர நெடிலுக்கும், இகரக் குறிலுக்கும், ஈகார நெடிலுக்கும் எழுத்தின் மேற்பகுதியில் வலப்புறம் கோடிட்டும், உகரக் குறிலுக்கும், நெடிலுக்கும் எழுத்தின் கீழ் வலப்புறம் கோடிட்டும் எகரத்திற்கு மேல் இடப்புறம் கோடிட்டும், ஒகரத்திற்கு மேல் இடப்புறமொன்றும், மேல் வலப்புறம் ஒன்றுமாகக் கோடுகளிட்டும் எழுதியிருப்பதைப் பல கல்வெட்டுகளில் பார்க்கலாம். இவ்வாறு இடப்பட்ட எளிமையான கோடுகளே காலப்போக்கில் காலாகவும், வளை கோடுகளாகவும் கொம்புகளாகவும் உருமாறின.

சில தமிழ்–பிராமிக் கல்வெட்டுக்களில் அகரத்தோடு கூடிய உயிர்மெய்யைக் குறிக்கவும், ஆகாரத்தோடு கூடிய ஊர் மெய்யைக் குறிக்கவும் வேறுபாடின்றி எழுத்தின் மேற்பகுதியில் வலப்புறம் ஒரு கோடு மட்டும் இட்டெழுதப்பட்டுள்ளமையையும் காணமுடிகிறது. இவ்வகைக் கல்வெட்டுக்களில் அடிப்படை வரிவடிவம் மெய்யைக் குறிக்கும். இவற்றை, இவ்வெழுத்தமைதியினைக் கொண்டு காலத்தால் முற்பட்ட கல்வெட்டுக்களெனக் கணிப்பர்.

இவ்வகை எழுத்துக்கள் முதன் முதலில் பட்டிபுரோலு என்ற இடத்தில் புத்தபிரானின் புனித எலும்பு வைக்கப்பட்டிருந்த கற்பேழையில் டாக்டர் பியூலரால் கண்டறியப்பட்டதால், இம்முறையில் எழுதப்பட்டவற்றைப் ‘பட்டிப்புரோலு எழுத்துவகை’ எனவும் வகைப்படுத்துவர். இவ்வகை எழுத்துக்களில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் தொல்காப்பியர் காலத்திற்கும் முற்பட்டவையாகக் கருதப்படுகின்றன.

**புள்ளி**

மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் **(15)**
மெய்ஈறு எல்லாம் புள்ளியொடு நிலையம் **(104)**

என்பது தொல்காப்பிய விதி, இதன்படி மெய்யெழுத்து ஒரு சொல்லின் இடையில் வந்தாலும், ஈற்றில் வந்தாலும் புள்ளி பெற்று அமைய வேண்டும். ஆனைமலைக் கல்வெட்டில் 'அரட்ட' என்ற சொல்லில் 'ட்' என்ற மெய்யெழுத்தைச் சுட்ட புள்ளி வைக்கப்பட்டுள்ளமை இதற்கோர் எடுத்துக்காட்டு. இருப்பினும், தமிழ்–பிராமி கல்வெட்டுக்களில் பெரும்பாலான இடங்களில் மெய்யெழுத்துக்கள் புள்ளியின்றியே எழுதப்பட்டுள்ளன. இது கல் மற்றும் ஓலைச் சுவடிகளில் புள்ளி வைப்பதன் நடைமுறை இடர்பாடாகலாம். இதே போன்று 'ஏ', 'ஓ' ஆகிய நெடிலெழுத்துக்களைப் புள்ளியிட்டுக் குறிலாக்கும் மரபுமிருந்திருக்கிறது. இதனைத் தொல்காப்பிய நூற்பா, "எகர ஒகரத்து இயற்கையும் அற்றே" (16) என்று உறுதிப்படுத்துகிறது.

*எழுத்துப் புணருத்தான் மணிய்*
*வண்ணக்கன் தேவன் சாத்தன்*

என்றுள்ள அரச்சலூர்க் கல்வெட்டில் எனக் காணப்படும் முதலெழுத்தாகிய 'எ' குறிலில் வைக்கப்பட்டுள்ள புள்ளி. இம்மரபிற்கோர் எடுத்துக்காட்டாகும்.

– தொல்லியல் துறை வெளியிட்ட
தமிழ் – பிராமி கல்வெட்டுகள் நூலிலிருந்து...

❖

# தெரியுமா ?

**மாதுளை**



★ மாதுளம்பழம் மகாராஷ்ரா, குஜராத், கர்நாடகா மற்றும் ராஜஸ்தானில் தோன்றிய பழவகை ஆகும்.

**அன்னாசி**

★ அன்னாசிப்பழம் அமெரிக்கா, பிரேசில் மற்றம் பாராகுவே நாடுகளில் தோன்றிய பழவகை ஆகும்.



★ இது இந்தியாவில் மேற்கு வங்காளம், அஸ்ஸாம், கர்நாடகா, மேகாலயா, மணிப்பூர், பீகார் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் விளைவிக்கப்படுகிறது.

★ தோராயமாக ஆண்டு ஒன்றுக்கு 12 முதல் 13 இலட்சம் டன் வரை உற்பத்தி செய்யப்படுகிறது.

**பப்பாளி**

★ பப்பாளிப்பழம் மெக்சிகோ தெற்கு மற்றும் கோஸ்டாரிகாவில் தோன்றிய பழவகை ஆகும்.

இது இந்தியாவில் கர்நாடகா, குஜராத், ஒரிசா, மேற்கு வங்காளம், அஸ்ஸாம், கேரளா, மத்தியப் பிரதேசம் மற்றும் மகாராஷ்ரா ஆகிய மாநிலங்களில் விளைவிக்கப்படுகிறது.

தோராயமாக ஆண்டு ஒன்றுக்கு 25 முதல் 26 இலட்சம் டன்கள் வரை உற்பத்தி செய்யப்படுகிறது.


**சப்போட்டா**

★ சப்போட்டாப்பழம் அமெரிக்காவில் தோன்றிய பழவகை ஆகும்.



இது இந்தியாவில் கர்நாடகா, குஜராத், ஆந்திரப்பிரதேசம், மகராஷ்டிரா மற்றும் ஒரிசா ஆகிய மாநிலங்களில் விளைவிக்கப்படுகிறது.

தோராயமாக ஆண்டு ஒன்றுக்கு 10 முதல் 11 இலட்சம் டன்கள் வரை உற்பத்தி செய்யப்படுகிறது.



# மனமுவந்து இரத்த தானம் செய்யுங்கள்

**எந்த வயதில் இரத்த தானம் செய்யலாம்?**

நல்ல ஆரோக்கியத்துடன், நீங்கள் 18 முதல் 60 வயதுக்குள் இருந்தால், தாராளமாக இரத்த தானம் செய்யலாம்.

**ஏன் ஒருவர் 18 வயது ஆவதற்கு முன் இரத்த தானம் செய்யக் கூடாது?**

18 வயது, உடலியல் ரீதியாக இரத்த தானம் அளிப்பதற்கு வலிமையுடையதாக கருதப்படக் கூடிய வயது. அதுமட்டுமின்றி, 18 வயது நிறைவடைந்த வருக்கே, நம் நாட்டில் அங்கீகாரம் அளிக்கப் பட்டுள்ளது.

**60 வயதுள்ளவர் இரத்த தானம் செய்யலாமா? அதற்கான உடல் ஆரோக்கியம் அவரிடம் இருக்குமா?**

அளிக்கலாம். மருத்துவ ரீதியாக அவர் இரத்த தானம் அளிப்பதில் தவறேதும் இல்லை.

**நான் உருவத்தில் மிகச் சிறியவனாக இருக்கிறேன்!**

உங்கள் எடை 45 கிலோவிற்கு மேல் இருந்தால், அது போதுமானது.

**ஒருவரின் உடல் எடை 45 கிலோவிற்குக் குறைவாக இருந்தால், இரத்த தானம் செய்யலாமா?**

செய்வது நல்லதல்ல, ஆனால் சில நேரங்களில் அவசரம் மற்றும் தேவையின் அடிப்படையில் இரத்த தானத்தின் அளவு நம்முடைய எடை X 8 மிலி அளவிற்கு நிகராகவோ அல்லது அதற்கும் குறைவாகவே இருத்தல் வேண்டும்.

**என்னை இரத்த தானம் செய்யும்படி யாரும் கேட்டதில்லை!**

இப்பொழுது அதற்காக உங்களை வரவேற்கிறோம்.

**உங்களுக்கு எனது இரத்தம் வேண்டியிருக்காது. சாதாரண ஓ பிரிவைச் சேர்ந்தது!**

எங்களுக்கு எல்லாப் பிரிவைச் சேர்ந்தவர்களின் இரத்தமும், எப்போதும் தேவைப்படுகிறது.

**நான் இப்போதுதான் நோய்வாய்ப்பட்டிருந்தேன்!**

நீங்கள் மறுபடியும் நலம் பெறும்வரைக் காத்திருங்கள். சந்தேகம் ஏற்பட்டால் எங்கள் மருத்துவ அதிகாரியைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**எனக்கு இரத்த சோகை உள்ளது!**

ஒவ்வோர் இரத்த தானத்திற்கு முன்பும், நாங்கள் இரந்த சோகைக்கான பரிசோதனையைச் செய்கிறோம்.

**எனக்கு முன்பு மஞ்சள் காமாலை நோய் வந்திருந்ததே!**

நலம்பெற்று ஓராண்டு சென்றபின், உங்கள் இரத்தம் ஏற்றுக்கொள்ளத் தக்கதாகிறது.

**எனக்கு ஊசிகளே பிடிக்காது!**

நீங்கள் அதை உணர மாட்டீர்கள்! இரத்தம் எடுக்கும் பகுதியை, உணர்விழக்கச் செய்யும் மருந்துகள் எங்கள் வசம் உள்ளன.

**இரத்த தானம் என்னைப் பலவீணமாக்கி விடுமோ ?**

சிறு ஓய்வு மற்றும் சிற்றுண்டிக்குப் பின்னர் நீங்கள் சாதாரணப் பணிகளுக்குத் திரும்பிச் செல்லலாம்.

**இரத்தம் கொடுப்பது பாதுகாப்பானதா ?**

எல்லா உபகரணங்களும் முழுவதும் சுத்திகரிக்கப்பட்டவை. ஒருமுறை பயன்படுத்திய பின்னர் தூக்கியெறியப்படுபவை.

**எனக்கு வேலை அதிகம், மேலும் இது மிகவும் தொந்தரவானது!**

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இரத்த தானம் செய்ய 10–15 நிமிடம் மட்டுமே தேவை.

**இரத்த தானம் செய்யத் தேவையான தகுதிகள்**

வயது – 18 முதல் 60 வயது வரை ஆரோக்கியமான ஆண்/பெண்.

எடை – 45 கிலோவும் அதற்கு மேலும்.

ஹீமோகுளோபின் அளவு – 12.5. gm %

இரத்த அழுத்தம் – 100/50 mm Hg முதல் 180/100 mm Hg வரை

இரத்த தானத்திற்கு இடைவெளி – மூன்று மாதங்கள்.

**இரத்த தானம் செய்வதை எப்போது தவிர்க்க வேண்டும்**

❖ மது அருந்தியவர்கள் 24 மணி நேரத்திற்குத் தவிர்க்க வேண்டும்.

❖ பெரிய அறுவை சிகிச்சை செய்துகொண்ட பின் ஆறு மாதங்கள் வரை.

❖ சிறிய அறுவை சிகிச்சை செய்துகொண்டபின் மூன்று மாதங்கள் வரை.

❖ கருச்சிதைவு செய்துகொண்ட பெண்கள் ஆறு மாதங்கள் வரை.

❖ கருவுற்றிருக்கும் போதும், தாய்ப்பால் ஊட்டும் போதும், தாய்மார்கள் தவிர்க்கவும்.

❖ இரத்தம் ஏற்றிக்கொண்ட நபர்கள் 12 மாதங்கள் வரை.

❖ பால்வினை நோயாளிகள் சிகிச்சை முடிந்து ஓராண்டு வரை.

❖ மஞ்சள் காமாலை சிகிச்சைபெற்று ஓராண்டு வரை.

❖ காசநோய் (TB) சிகிச்சை முடிந்து, ஐந்து ஆண்டுகள் வரை.

❖ ஹெப்படிடிஸ் – B / ஹெப்படிடிஸ் – C / எய்ட்ஸ் நோயுள்ளோர் வாழ்நாள் முழுவதும்.

❖ இதய நோய் / சிறுநீரக நோய் கொண்டவர்கள் தவிர்க்கவும்.

❖ பலருடன் உடலுறவு கொள்பவர்கள் தவிர்க்கவும்.

❖ போதை ஊசிப் பழக்கம் உள்ளவர்கள் தவிர்க்கவும்.

❖ தைராய்டு மற்றும் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தவிர்க்கவும்.

நன்றி: சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சங்கம்)

# பழைய நாடுகளும் புதிய பெயர்களும்

| பழைய நாடு | – | புதிய பெயர் |
|---|---|---|
| வடரொடீஷியா | – | ஜாம்பியா |
| தென்ரொடீஷியா | – | ஜிம்பாப்வே |
| டச்சுகயானா | – | சுரினாம் |
| அப்பர் வோல்டா | – | புர்க்கினாஃபாஸோ |
| அபிசீனியா | – | எத்தியோப்பியா |
| கோல்டு கோஸ்ட் | – | கானா |
| பெக்குவானாலாந்து | – | போட்ஸ்வானா |
| அப்பர்பெரு | – | பொலிவியா |
| சாண்ட்விச் தீவுகள் | – | ஹாவாய் |
| டச்ஈஸ்ட் இண்டீஸ் | – | இந்தோனேஷியா |
| பாலஸ்தீனம் | – | இஸ்ரேல் |
| மலகாஸி | – | மடகாஸ்கர் |
| மலாவாய் | – | நியூசிலாந்து |
| ஹாலந்து | – | நெதர்லாந்து |
| பார்மோஸா | – | தைவான் |
| சயாம் | – | தாய்லாந்து |
| மெஸபடோமியா | – | ஈராக் |
| பாரசீகம் | – | ஈரான் |
| கம்பூச்சியா | – | கம்போடியா |
| கிழக்கு பாகிஸ்தான் | – | பங்களாதேஷ் |
| சிலோன் | – | ஸ்ரீலங்கா |
| பர்மா | – | மியான்மர் |
| சோவியத் யூனியன் | – | ருஷ்யா |
| சாயிர் | – | காங்கோ |
| கோட்டேடி ஐவோயர் | – | ஐவரி கோஸ்ட் |
| சான்ஸிபார் | – | தான்சானியா |

# கோடை காலத்தில் வெப்பத்தின் தாக்கம்...

'**சித்திரை**' என்றாலே, வாட்டும் வெயில் தான் நம் நினைவிற்கு வருகிறது. மார்கழி, தை மாதங்களில் கடுங்குளிர் காலம் முடிந்த உடன், மாசி, பங்குனி மாதம் முதல் வெயில் காலம் துவங்குகிறது. சித்திரை மாதத்தில் மெல்ல, மெல்ல வெயில் உச்சத்தை அடைகிறது. வெயிலின் கொடுமை உச்சத்தை அடையும் போது 'கத்திரிவெயில்' என்றும் 'அக்னி நட்சத்திரம்' என்றும் கூறுகிறோம். இவை இரண்டும் காரணப் பெயர்கள் தான்.

வெயிலின் அதிகபட்ச வெப்பம் நம் உடலைத் தீண்டும் போது கத்திரிக்கோலினால் நம் உடலை வெட்டுவது போன்ற உணர்வை நாம் உணர்வதால், 'கத்திரி வெயில்' என்றும், வெப்பக்கதிர்கள் நெருப்பாய் சுடுவதால் 'அக்னி நட்சத்திரம்' என்றும் அழைக்கிறோம்.

**வெயில் காலத்தைக் கண்டு நாம் அச்சம் கொள்வது ஏன்?**

பொதுவாக, நம் உடலின் வெப்பநிலை என்பது நம் இரத்தத்தின் வெப்ப நிலையைத்தான் குறிக்கிறது. சாதாரணமாக நமது உடலின் வெப்பநிலை 98.4 டிகிரி F ஆக இருக்கிறது. ஆனால், வெயில் காலத்தில் இந்த வெப்ப நிலை அதிகரிக்கும்.

அதனால் அந்த அதிக வெப்பத்தினால் நமது உடலில் மேற்புறத் தோலின் அடிபாகத்தில் உள்ள இரத்தக் குழாய்கள் அதிகமாக விரிவடையும். அதன் விளைவாக இருதயத்தில் இருந்து, வழக்கமான அளவை விட அதிக இரத்தம் தோலின் மேற்புறப் பகுதிக்கு பாய்ச்சப் படும்போது, முக்கிய உறுப்புகளான மூளை, இருதயம் போன்ற பகுதிகளுக்கு இரத்த விநியோகம் குறைந்துவிடும். மேலும் தோல் வழியாக அதிக வியர்வை மூலம் இரத்தத்தில் உள்ள நீர்ச்சத்தும், உப்பு மற்றும் தாதுக்களும் ஆவியாகிவிடுகின்றன.

அப்போது நமது முக்கிய உடல் உறுப்புகளின் செயல்பாடுகள் இயல்பு நிலையில் இருந்து குறைவதற்கு வாய்ப்புள்ளது.

அதனால்

★ தலைவலி

★ சோர்வு

★ மயக்கம்

★ நீரிழப்பு

★ அதிர்ச்சி நோய் (Sun Stroke)

★ மாரடைப்பு

ஏற்படலாம் அதன் விளைவாக மரணம் கூட சம்பவிக்கலாம்.

**வெயில் காலத்தில் ஏற்படும் இதர பாதிப்புக்கள் யாவை?**

(அ) வெயில் காலத்தில், அதிக வெப்பத்தால் காற்று லேசாகி, நீர்த்தன்மையிழந்து வறண்டு போய்விடும். மேலும் மண்ணில் ஈரப்பதம் குறைந்து வெப்பக் காற்றில் மண், தூசு முதலியவை பறக்கும். அதனுடன், மண் துகள்களில் கலந்துள்ள நோய்க் கிருமிகளும் காற்றில் எளிதில் கலந்து விடும். பின் அவை நம் தோலின் மேல் பகுதியில் அழுக்காக படியும். வேர்வையில் கிருமிகள் அடங்கிய தூசு நம் உடலில் படியும் போது, வியர்வைத் துவாரங் களை அடைத்து விடும். இதனால் தோல் உள்ள செல்களில் கிருமி தொற்று ஏற்பட்டு,

★ வியர்க்குரு

★ கொப்புளங்கள்

★ வேனல் கட்டிகள்

★ அம்மை நோய்கள்

போன்றவை ஏற்படும்

(ஆ)மேலும், வெயில் காலங்களில் நீர் நிலைகளில் (குளம், ஏரி) தண்ணீர் ஆவியாகி வற்றிப்போய், நீரின் அளவு குறைந்து விடுவதால், நீர் நிலைகளின் அடிப்பகுதியில் உள்ள மண், சேறு நீருடன் கலக்க வாய்ப்புள்ளது. அதனால், நீர் மாசு அடைகிறது. அந்த நீரை நாம் பருகினால்

★ வயிற்றுப்போக்கு

★ வாந்தி

★ சீதபேதி

★ காலரா

போன்ற நோய்கள் ஏற்படும். அது தவிர, இந்த வெயில் காலங்களில் எளிதாக கிடைக்கக் கூடிய திறந்த வெளியில் உள்ள ஈ மொய்த்த அசுத்தமான மாம்பழம், பலாப்பழம் ஆகியவற்றை வாங்கி உண்ணும் போது மேற்கூறிய நோய்கள் வரலாம்.

(இ) வெயில் காலங்களில், அதிக நீர் நம் உடலை விட்டு வியர்வையாக வெளியேறுவதால், (அதை ஈடு செய்யும் வகையில்) நம் உடலை விட்டு வெளியேறும் சிறுநீரின் அளவு வெகுவாகக் குறைந்து விடும். வியர்வை அதிகமாகி சிறுநீர் குறைவதால்,

★ நீர்ச் சுருக்கு

★ நீர்க் கடுப்பு

★ மலச்சிக்கல்

போன்ற நோய்கள் ஏற்படலாம்.

**வெயில் காலத்தில் ஏற்படும் உடல் உபாதைகளை எவ்வாறு தடுக்கலாம்?**

வெயில் காலத்தில் ஏற்படும் உடல் உபாதைகள் பெரியவர் முதல் சிறியவர் வரை எந்த வயதினரையும் பாதிக்கலாம். எனவே, நாம் கீழ்க்கண்ட தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் அவசியம்.

1. முதலில், நம் உடலின் மீது நேரடியாக வெயில் படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

2. வியர்வை வழியாக வெளியேறும் நீரை சரிக்கட்ட நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். பொதுவாக சாதாரண காலங்களில் நாம் குறைந்த பட்சம் 2 லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும். வெயில் காலத்தில் 3–4 லிட்டர் தண்ணீர் குடிக்கலாம்.

3. வெறும் தண்ணீர் குடிப்பதை விட, தேவைப்பட்டால் நமது உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்ப (இரத்த அழுத்த நோய், நீரிழிவு நோய் உள்ளவர்கள் தவிர்க்கவும். தண்ணீரில் சிறிது சர்க்கரை (அ) தேன், உப்பு, எலுமிச்சம் சாறு கலந்து குடிப்பது மிகவும் நல்லது.

4. நீரிழப்பு ஏற்படுவதுடன், உப்புச்சத்து, தாது இழப்பு ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும்.

5. வியர்வை வருவதைத் தவிர்க்க, விசிறி அல்லது காற்றடிகளைப் பயன்படுத்தலாம்.

6. முக்கியமாக சர்க்கரை நோய், இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் வெயிலின் உச்சநேரத்தில் நேரடி வெயில் படும்படி வெளியிடங்களில்

நடமாடுவதைத் தவிர்க்க வேண்டும்.

7. வெயிலுக்கு ஏற்ற திரவ உணவுகளான மோர், இளநீர், தர்பூஸ், வெள்ளரிப்பழம், கிருணிப்பழம் போன்ற 'தாகத் தணிப்பு' உணவுப் பொருட்களைப் பயன் படுத்தலாம்.

8. நம் உடலின் வியர்வையை உறிஞ்சக் கூடிய, வெளிர் நிறத்தில் உள்ள பருத்தியிலான ஆடை களைப் பயன்படுத்துவது சாலச்சிறந்தது.

**நீரிழப்பு மற்றும் சூரிய அதிர்ச்சி நோய் (Sun Stroke) ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?**

1. நீரிழப்பினால் பாதிக்கப் பட்டால், அரசு மருத்துவ மனைகளில் கிடைக்கக் கூடிய ஓ.ஆர்.எஸ் பொட்டலங் களை வாங்கி, அதிலுள்ள அறிவுரைப்படி பயன்படுத்த வேண்டும்.

2. குளிர்ந்த நீரிலோ அல்லது ஐஸ் கட்டி நீரிலோ ஒரு சிறு துணியையோ அல்லது பஞ்சையோ நனைத்து நெற்றியில் பற்று போட வேண்டும்.

3. உடலின் நெஞ்சு பகுதியை மட்டும், துணியினால் மூடிவிட்டு, கை, கால், வயிற்றுப் பகுதி, அக்குள், தொடை இடுக்குகளை குளிர் நீரில் நனைத்து எடுத்த துவாலையினால் துடைக்க வேண்டும்.

இது போன்ற முதலுதவிகளைச் செய்தால் உடல் சூடு குறைந்து, உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு மரணம் சம்பவிப்பதைத் தவிர்க்கலாம்.

4. தீவிர சூரிய அதிர்ச்சி நோய் ஏற்படும் போது;

மேற்கூறிய சிகிச்சைகள் தருவதுடன், கால்களை உயர்த்திப் பிடித்து, தலையைக் கீழ் நோக்கி தாழ்த்தும்போது மூளையின் இரத்த அழுத்தம் சரி செய்யப்படும்.

5. தேவைப்பட்டால், உடனே அருகிலுள்ள மருத்துவரை அணுகி தகுந்த சிகிச்சை பெற வேண்டும்.

* * *

தாய்கோ வங்கி

TAICO BANK

# தமிழ்நாடு
# தொழிற் கூட்டுறவு வங்கி லிட்.

தாளமுத்து–நடராசன் மாளிகை, நெ.1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை–600 008.
தொலைபேசி எண் : 044-28411643 / 28547952 தொலை நகல்: 044–28416456
மின்னஞ்சல் : taico@dataone.in, taico@vsnl.net, இணைய தளம்: www.taicobank.com

தாய்கோ வங்கி – 46 ஆண்டுகளாக மக்கள் சேவையில்

# ரூ.25 இலட்சம்

# தொழில்கடன்

- குறு, சிறு மற்றும் குடிசைத் தொழில்கள்.
- புதிய தொழில் நிறுவனங்கள்.
- செயல்படும் நிறுவனங்கள்.

<u>பிணையம்:</u> அசையா சொத்துக்கள் (விளை நிலம், காலிநிலங்கள் மற்றும் மனைகள் நீங்கலாக)

<u>விவரங்களுக்கு:</u> தாய்கோ வங்கி கிளைமேலாளர் அல்லது
இணையதளத்தில் தொடர்பு கொள்ளவும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| குன்னூர் | கோவில்பட்டி | சாத்தூர் | மதுரை | திருச்சி | சேலம் | வேலூர் |
| 0423 2206003 | 04632 220547 | 04562 260359 | 0452 2343464 | 0431 2462745 | 0427 2313189 | 0416 2212597 |
| நாகர்கோவில் | சேப்பாக்கம் | கோயம்பத்தூர் | தஞ்சாவூர் | திருநெல்வேலி• | நெய்வேலி | ஈரோடு |
| 04652 233741 | 044 28547751 | 0422 2529207 | 04362 238286 | 0462 2322921 | 04142 268849 | 0424 2268024 |
| அம்பத்தூர் | காஞ்சிபுரம் | திருவண்ணாமலை | திண்டுக்கல் | காரைக்குடி | ஆழ்வார்பேட்டை | ஆத்தூர் |
| 044 26540223 | 044 27223562 | 04175 251058 | 0451 2433351 | 04565 233881 | 044 24342463 | 04282 242070 |
| கூடலூர் | தருமபுரி | சிவகாசி | கரூர் | தேனி | வியாசர்பாடி | நாமக்கல் |
| 04262 263712 | 04342 266744 | 04562 276867 | 04324 262636 | 04546 252163 | 044 25516566 | 04286 277616 |
| திருவாரூர் | கிருஷ்ணகிரி | ஈக்காட்டுத்தாங்கல் | திருப்பூர் | புதுக்கோட்டை | எழும்பூர் | விழுப்புரம் |
| 04366 220090 | 04343 230377 | 044 22252030 | 0421 2230250 | 0432 2220855 | 044 28411643 | 04146 222599 |
| ராமநாதபுரம் | | | பெரம்பலூர் | | | நாகப்பட்டினம் |
| 04567 220678 | | | 04328 275633 | | | [illegible] |

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/09-11
&WPP No.TN/PMG(CCR)518 / 09-11

